# அண்ணை
## — ஒரு நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணு - ஒரு நோக்கு

-கரிகாலன்-

இரஞ்சனு பதிப்பகம்,
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணா — ஒரு நோக்கு**

ஆசிரியர் : கரிகாலன்

முதலாம் பதிப்பு : செப்டம்பர் 1969

படிகள் : 5000

விலை : ரூபா 2-50

அச்சுப் பதிப்பு : இரஞ்சனா அச்சகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு – 13 (இலங்கை).
தொலைபேசி : 32221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அண்ணா ஒரு யுகத்தின் தலைவன். தாழ்ந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பத் தோன்றிய தவப்புதல்வன்.

அண்ணா பிறந்தகத்தில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளிலும் தன்னிகரற்ற செல்வாக்குடன் விளங்கிய ஒரே தலைவன். அண்ணாவுக்கு முன்னரும் இத்தகைய ஒரு தலைவன் தமிழினத்தில் தோன்றியதில்லை. அண்ணாவுக்குப் பின்னரும் தோன்றப் போவதில்லை.

அண்ணா மிக எளிமையான குடும்பத்தில் தோன்றியவர். உலகத் தமிழனின் ஒப்பற்ற தலைவனாக எழுந்து நின்ற போதும் அவர் மிக மிக எளிமையானவராகவே - அவர் மொழியில் 'சாமானியராகவே'—வாழ்ந்தார். இந்த உண்மைகளை இந்நூலில் ஓரளவு தரிசிக்கலாம்.

அண்ணா அமரரான மறுநாள் கரிகாலன் அவர்கள் 'தினகரன்' தினசரியில் 'அண்ணாதுரை என்பதோர் சகாப்தம்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அக் கட்டுரையை விரிவுபடுத்தித் தருமாறு நாம் வேண்டியதின் விளைவே இந்நூல்.

கரிகாலன் அவர்கள் தமிழ் உலகிற்குப் புதியவர் அல்லர். ஈழத் தமிழகத்தின் பட்டி தொட்டிகள் எல்லாம் இவர் குரல் ஒரு காலத்தில் ஒலித்தது. மாணவ சமூகத்தின் இலட்சியப் பேச்சாளராக விளங்கியவர். எழுத்துத் துறையிலும் பல பரிசோதனைகளை நடாத்தியவர். அரசியல் கருத்துகளுக்கு இலக்கிய வடிவங் கொடுத்துத் தனக்கெனத் தனியான வாசகர் கூட்டத்தையும் சம்பாதித்துக் கொண்டவர்.

பள்ளிப் பருவம் தொட்டே அரசியலில் பங்கு கொண்டு பணியாற்றிய கரிகாலன் அவர்கள், ஒரு இலண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. பட்டதாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961-ம் ஆண்டு அறப்போரைத் தொடர்ந்து ஆறு மாத காலம் அரசாங்கத்தின் விருந்தாளியாக இருந்தவர். இன்று அரசியல் கட்சிகளிடமிருந்தும் அரசியலில் இருந்தும் நெடுந் தூரம் ஒதுங்கி வாழ்கின்றார். இந்நூல் தமிழ் மக்களின் சிந் தனைப் போக்கை மாற்றியமைக்கச் சிறிதளவாவது வழி சமைக்கும் என்று நம்புகின்றோம்

பதிப்பகத்தார்.

இராஞ்சனு பதிப்பகம்,
கொழும்பு,
25-9-'69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நோக்கில்....

தமிழினத்தினது மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெரியார் சார்பு பெற்றுத் தமிழினத்தினது தனித்தகைமையை உலக முழுவதுமறிந்து பாராட்டும்படி பரப்பிய சிறப்பு திராவிட முன்னேற்றக் கழகத் தந்தை காஞ்சி திரு. அண்ணாதுரைக்கு உரியதென்பது உலகமறியும்.

அறிஞர் திரு. அண்ணாவின் அறிவு, நினைவு, சொல், செயல் அனைத்தும் நாளெல்லாம் தமிழினத்தின் அரசியல், பொருட்டுறை, இனக்கட்டு விடுதலையும் முன்னேற்றமும் பற்றியே நிகழ்ந்து கொண்டிருந்தன.

தம் பொதுநலக் கொள்கைகளை நிறைவேற்றுதற்கு வேண்டும் துணையும், ஆற்றலும், வழியும், திட்டங்களும் அமைத்துக்கொண்டு அயராது உழைத்த பெரியார் அறிஞர் திரு அண்ணா.

தமிழ் மரபினரது புதிய எழுச்சிக் காலத்தைத் தொடக்கிவைத்த மறைந்த திரு. அண்ணாவின் வாழ்க்கை வரலாறு தமிழர் தந்தலைமுறை தலைமுறையாகப் போற்றத்தக்க அரிய வைப்பாகும்.

அது கருதி, அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு முழுதினையும் ஒருவாறு சுருக்கித் தொகுத்து 'அண்ணா - ஒரு நோக்கு' என்ற பெயரால் ஒரு சிறு உரை நூல் ஆக்கியுளார் அன்பர் திரு. கரிகாலன்.

இவர், இச்சிறு நூலில் யாவரும் படித்துணரத் தக்கவாறு நல்ல எளிய வழக்கு நடையிற் சுவை குன்றுமற் குறிப்புகள் பல பொதிந்துகாட்டி எழுதிக்கொண்டு போகின்றார்.

'அண்ணா· அறிமுகம்' என்பது முதல் 'அமரர் அண்ணா' என்பது வரையுமுள்ள பல தலைப்புக்களால் விளங்கும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திகளாகக் கூறுபட்டுச் சான்றுகளோடு முறையாகத் தொடர்ந்து செல்லும் இக்கட்டுரைக் கோவையைப் படிக்கின்றவர்க்கு, ஆக்கியோர் திரு. அண்ணுவை எவ்வளவு தெளிவாகவும் உண்மையாகவும் நுணுக்கமாகவும் கண்டறிந்து விளக்குகின்ருர் என்பதும் இவரது சொல்வன்மையும் வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிப்பன.

புறநானூற்றுச் செய்யுட் பகுதிகளும் பாரதிதாசன் பாடற்பகுதிகளும் ஆங்காங்கு பொருத்தமாக அமைந்திருப்பது அறிஞர் திரு. அண்ணுவின் பெரும் புகழை விளக்குதலோடு நூற்குச் சிறப்பளித்தலுமுடையது.

தம் பலவேறு கலைத்திறமை முதலான திறமையெல்லாவற்றையும் தம் பழம்பெருமைவாய்ந்த தமிழினத்தின் மீட்சிக்கும் முன்னேற்றத்திற்கும் கருவியாக்கிக்கொண்ட திரு. அண்ணு இறைவன் தமிழினத்துக்கு அளித்த நன்கொடையாம்.

அப் பெருந்தகையாரது அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கடல்சூழிலங்கைக் காளைத் தமிழரும் தமது வாழ்வைத் தமது இனத்தின் மீட்சிக்கும் முன்னேற்றத்துக்கும் வழங்கல் வேண்டுமென்ற உயரிய நோக்கத்தை இந்நூல் இனிது நிறைவேற்றுமென நினைக்கின்றேன்.

இளந்தமிழர் குழுவில் இந்நூலுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

இங்ஙனம்
புலவர் பாண்டியனுர்

இரத்துமலானை,
23-9-1969.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யான் நோக்குங் காலை.....

ஏகலைவன் துரோணரிடம் வில்வித்தை கற்றதுபோல அண்ணாவிடம் சொல்வித்தை பயின்றவன் நான். எனின், இந்நூல் நான் ஆசானுக்குக் காணிக்கையாகத் தரும் கட்டை விரலா? அல்லது, 'இவன் யார் என்குவையாயின்...' எனப் புறநானூற்றின் பாங்கில் தமிழர் காவியத்தலைவன் அண்ணாவை அடையாளம் காட்டும் சுட்டுவிரலா?

தமிழ்கூறும் நல்லுலகின் வாழ்வுத்துறை அனைத்தும் தனியொரு மனிதனாக அண்ணா ஏற்படுத்திய தாக்கமும் செலுத்திய செல்வாக்கும் இருபதாம் நூற்றாண்டின் தமிழினத்து வரலாற்றுச் சுவடுகளில் காலத்தால் சாகாத ஆழமான சுவடுகளைப் பதித்துள்ளன. இதனை வருங்கால வரலாறு கூறும்வரை வழக்கம் போல நாம் காத்திருக்க வேண்டியதில்லை. எம்மைச் சுற்றிலும் ஒருமுறை பார்வையைச் செலுத்தினாலே புரிந்துகொள்ள முடியும். கண்ணாடியின்றிப் பார்ப்பதே அழகு. அங்ஙனம் பார்த்ததில் பூத்ததே இந்நூல்.

அண்ணா முதலமைச்சரான பின், அதிகாரச்செல்வப் பெருக்கின்போது அன்னாரைச் சுற்றி வளைத்துக்கொண்ட புதிய உறவினரில் ஒருவனல்லன் நான். அன்னார் வெறும் 'ஆண்டி'களின் தலைவனாக இருந்தபோதே ஈர்க்கப்பட்டவன்; நெடுநாள் உறவினன்—அண்ணாவுக்கு, தி. மு .க வுக்கல்ல.

இவ்வாண்டு அண்ணா நோயுற்ற சேதி கேட்டு இங்கு ஆயிரமாயிரம் உள்ளங்கள் நலிவுற்றிருந்தன. அவற்றுள் எனதும் ஒன்று. பெப்ரவரி மாதம் 2-ம் தேதி இரவு அன்னாரின் உடல்நிலைபற்றிய செய்தியறிக்கையைக் கேட்டுக்கொண்டே கண்ணயர்ந்தவன், 3-ம் தேதி காலை 4 மணிக்கு வேளையோடு எழுந்து அன்றைய தினசரியைப் பிரித்தபோது அண்ணா நெடும்பயணம் போய்விட்ட சேதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன். எதிரேயிருந்த தமிழ்க் கடவுள் குமரவேளை நோக்கி என் கைகள் குவிந்தன. என் உணர்ச்சிக் கொதிப்பிலே எழுந்திட்ட கொப்புளங்கள் எத்தனையோ. "விதியே! விதியே! தமிழச் சாதியை என் செயக்கருதி இருக்கின்றுயடா?"

காலவறுமையினுல் இம் முயற்சியை முழுமைப்படுத்த முடியவில்லை. நேரநெருக்கடிகளின் தாக்கத்தால் விளைந்த தழும்புகளும் தொய்வுகளும் ஆங்காங்கு கண்களை உறுத்துகின்றன.

தமிழ் மக்களின் நிலையை எண்ணி ஓசைப்படாமலே அழுகின்ற ஊமை உள்ளங்கள் சில உள. அவற்றின் விம்மல்கள் விளம்பரமாவதில்லை. அவற்றுள் ஒன்று ஊன்று கோலாக, இல்லை உயிராக, துணை நிற்க உருவானதே இந் நூல். அண்ணுவின் பிறந்தநாளையொட்டி இந்நூல் வெளிவர வேண்டுமெனப் பெரிதும் முயன்ற இவ்வன்பர், தம் பெயருக்கும் தாழிட்டுக் கொண்டனர். இவர் வாழ்க! இந் நூலை வெளிக்கொணர விழைந்து பல்லாற்ருனும் தூண்டு கோலாகி நின்ற கெழுதகை நண்பர் திரு. ஈழவேந்தன் என் நினைவுக்குரியர்.

இந்நூலுக்கு மனமுவந்து மதிப்புரை வழங்கிய தமிழ் வேள் புலவர் கருணைலயபாண்டியனுர் அவர்கள் என் நன்றிக்குரியர்.

வர்த்தக வரன்முறைகளை மேவி இந்நூலை உற்சாகத்துடன் அச்சிட்டுதவிய இரஞ்சனு அச்சகத்தினருக்கும், குறிப்பாக திரு ஆ. நடராசா அவர்களுக்கும் நன்றியுடையேன்.

தமிழ் மக்களிடையே புதிய சிந்தனைமொட்டுக்கள் முகைவிரிக்கட்டும்.

கொழும்பு,
25 செப்டம்பர், 1969.

அன்பன்,
கரிகாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

| | |
|---|---|
| அண்ணு—அறிமுகம் | 1 |
| அரசியற் பள்ளியில் அண்ணு | 4 |
| தி. மு. க. வில் அண்ணு | 13 |
| பேச்சாளர் அண்ணு | 31 |
| எழுத்தாளர் அண்ணு | 41 |
| கலைத்துறையில் அண்ணு | 52 |
| தமிழ் எழுச்சியில் அண்ணு | 62 |
| ஆங்கிலத்தில் அண்ணு | 70 |
| சிந்தனைச் சிற்பி அண்ணு | 79 |
| சமய நெறியில் அண்ணு | 84 |
| ஒப்புரவாளர் அண்ணு | 95 |
| தென்னுட்டின் குரல் அண்ணு | 104 |
| ஈழத் தமிழர் கண்ட அண்ணு | 112 |
| முதலமைச்சர் அண்ணு | 120 |
| அமரர் அண்ணு | 132 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன் அமரத்துவம் பெற்ற தமிழ்த் தலைவன் **வன்னியசிங்கம்** நினைவுக்கு……

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீதோன் றினையே நிரைத்தா ரண்ணல்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
கோடை நீடிய பைதறு காலை
இருநில நெளிய வீண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே''

— புறநானூறு

# அண்ணு-அறிமுகம்

எடுப்பான தோற்றமல்ல — சாதாரண தோற்றம் கூட அல்ல — எவரும் எடுத்தெறிந்து விடும் குள்ளஉருவம், காவியப் புலவனின் கற்பனைக்கு ஒட்டாத ஒழுங்கற்ற பல் வரிசை, அதிலே நிரந்தரமாகப்படிந்துவிட்ட வெற்றிலை வடுக்கள், சவரம்செய்து கொள்ளாத முகம், சீப்புப் படியாத கலைந்த கேசம், அவசரத்தில் அணியப் பெற்ற அலங்கோல உடை — இவற்ரோடு நமக்கு அறிமுகமான மனிதர்தான் அண்ணு. அன்னுர் தம்மை மட்டும் அறிமுகப்படுத்திஞ ரில்லை. குறளொன்றின் கருப்பொருளையும் துல்லியமாகத் துணியத் தந்தனர்.

''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னுர் உடைத்து''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது வாழ்வு அரங்கிலே அண்ணு தோற்றிய கால கட்டம் சமூக அரசியல் வாழ்விலே அபூர்வ சக்திகள் பல ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நாட்கள். ஆள் வலியும் அணிவலியும் அந்தஸ்து வலியும் மிக்கோரே தமிழகத்தின் சமூக அரசியல் வாழ்வில் தலையெடுத்திருந்த காலம். பிறப்பாலுயர்ந்த பேரரசுக்கள் தமிழகத்தின் வாழ்வுத் துறையனைத்தும் வக்கரித்துக் கொண்டிருந்த நாட்கள். பெரும் புள்ளிகளின் ஆதிக்கம் வலுத்திருந்த துறைகளிற்றன் சாமானியரான அண்ணுவும் 'துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு' நுழைந்தார். மேல் மட்டத்தினரின் ஆதிக்கத்தின் கீழ் சாதாரண குடிமகன் சமூக அரசியல் சங்கதிகளில் பங்கேற்க முடியவில்லை. தமிழ் மொழி தலையெடுக்க முடியவில்லை; சமூக அரசியல் விடயங்களை ஆய்வதற்குத் தமிழ் மொழிக்குத் தகுதியும் வாய்ப்பும் தரப்படவில்லை. இலக்கிய அரங்குகளை வட மொழி விரவிய 'பிராமணுள் தமிழ்' ஆட்சி கொண்டிருந்தது. 'அத்திம் பேரும்' 'அம்மாமியும்' ஏடுகளிலும் நல்ல வீடுகளிலும் ஏறி இறங்கினர். வடமொழிச் செல்வாக்குப் படர்ந்த மகாபாரதம், இராமாயணம் போன்றவை ஏனைய தமிழ் இலக்கியங்களை மேவி மிளிர்ந்திருந்தன. தமிழ் வாழ்வின் தனித்தன்மை அடையாளம் காண முடியாதவாறு அருகி விடுமோ என்ற அச்சம் இயல்பாகவே எழக் கூடிய நிலையிருந்தது.

வேற்றுச் செல்வாக்கின் ஆதிக்கத்தைப் பெயர்த்தெறிந்து தமிழ் வாழ்வின் தனித்தன்மையை நிறுவவேண்டிய கடமை, பிராமணிய வர்ணுச்சிரம தர்மத்தின் பயங்கர வடுக்களைப் போக்கி சமத்துவ சமுதாயம் அமைக்க வேண்டிய கடமை, மேட்டுக் குடியினரின் பிடியிலே மட்டும் இயங்குகிற தமிழகத்தின் சமூக, அரசியல் பொருளியல் வாழ்விலே பாமரக் குடிமகனையும் பங்காளியாக்க வேண்டிய கடமை, இன்னோரன்ன கடமைகளை ஆற்ற வேண்டிய பொறுப்பு அண்ணுவைக் காத்திருந்தது. இப்பாரிய பொறுப்புக்களை எதிர்கொண்டு கையேற்கத் தன் பயணத்தைத் தொடங்கிய அண்ணுவோ, பரிதாபம், ஓர் பராரி, அன்னுரிடமிருந்ததோ எளிமை. அன்னுரின் கையுறையுள் இருந்த மூலதனமோ வெறுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக் குறிப்புகள்.

முழுப் பெயர்: காஞ்சிபுரம் நடராஜன் அண்ணுதுரை.

தோற்றம்: 15-9-1909.

கல்வி: தொடக்கம் — காஞ்சிபுரம் பச்சையப்பன் தொடக்கப் பள்ளி. உயர்கல்வி-சென்னை பச்சையப்பன் கல்லூரி.

பட்டம்: எம். ஏ; பாடங்கள்: அரசியல், வரலாறு பொருளியல்.

தொடக்கத் தொழில்: எழுது வினைஞர், காஞ்சி நகராட்சி மன்றம். ஆசிரியர், காஞ்சி தனியார் பள்ளி. ஆசிரியர், சென்னை கோவிந்தப்ப நாயகன் பள்ளி.

பொழுது போக்கு; நூல்கள் படித்தல் (சென்னை பண்டிட் ஆனந்தம் நூலகம், பல்கலைக்கழக நூலகம், மாநகராட்சி மன்ற நூலகம், சென்னை கன்னிமாரா நூலகம்.)

பொதுவாழ்வு: தி. மு. க. தலைவர், ஏட்டாசிரியர், எழுத்தாளர் (கதாசிரியர், நாடகாசிரியர், கட்டுரையாசிரியர், திரைப்பட எழுத்தாளர்), பேச்சாளர். சென்னை சட்ட மன்ற உறுப்பினர் (1957 - 1962), இந்திய மாநிலங்கள்வை உறுப்பினர் (1962 - 1967), தமிழ் நாடு முதலமைச்சர் (1967 - 1969)

சிறை வாழ்வு: 7 தடவைகள் (இந்தி எதிர்ப்புப் போர் 4, நூல்கள் எழுதியமை, மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம்)

வெளிநாட்டுச் செலவு: இரு முறை - அமெரிக்காவுக்கு (1968 முற்பகுதியில் யேல் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பேரில் சப் பட்டம் [Chubb Fellowship] ஏற்பதற்காக; 1968 பிற்பகுதியில் நோய்க்கு சிகிச்சை பெறுதற்காக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைந்த நற் றமிழர் தம்மை
இணைத்த சீர் இராம சாமி
அறைந்த நல் வழியே............"

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# அரசியற் பள்ளியில் அண்ணா

அண்ணா அரசியல் அரிச்சுவடி கற்றுக் கொண்டது ஈரோட்டுப் பெரியார் ஈ. வே. ரா. வின் பள்ளியிலே. தமது பொது வாழ்வுத் திட்டத்தின் பரப்பு எது வரப்பு எது என நிர்ணயித்துக் கொள்ளும் பருவத்திலே அண்ணா பெரியாரின் தெளிவற்ற தத்துவப் பிரவாகத்தின் செல்வாக்கிலே தெப்பமாக நனைந்து போயிருந்தார். குருகுலவாசத்தின் கண்டிப்பு, கட்டுப்பாடு, தண்டிப்பு இத்தியாதிஇலட்சணங்களுடன் அமைந்த பெரியாரின் அரசியற் பள்ளியில், வேறு சாமான்யர்களாக இருந்திருப்பின் ஒன்று பெரியாரது கண்டிப்பின் கட்டுக்கடங்கி அண்ணாரின் கண்மூடி அரசியலில் மூழ்கியிருப்பர்; அல்லது பெரியாருடன் பிணங்கி மூன்றாம் நாளே பெரியாரின் பாதையினின்றும் விலகி வெளியேறியிருப்பர். பெரியாரின் அரசியல் தடுமாற்றங்கள், தீவிர வாதம் இவற்றுடன் தம்மை இரண்டறக் கலக்கவொட்டாது தம் தனித்தன்மையையும் பேணி, பெரியாரிடத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கிடந்த நன்மைகளையும் பேணி, தமக்கெனத் தனி அரசியல் உணர்வுகளை உருவாக்கிக் கொண்டவர் அண்ணு ஆவார். சுருங்கக் கூறின், அண்ணுர் தம் ஆரம்ப அரசியற் பள்ளியில் நடந்த பரீட்சையில் தேர்ச்சியுற்ருர்.

கருத்துக்கள் மட்டுமல்ல; அவற்றை நிலைநிறுத்துவதற் கான கருவிகளும் புனிதமானவையாக இருக்க வேண்டு மென்பது அண்ணுவின் கொள்கை. கருத்துக்களை நிலைநாட்டு வதற்காக எத்தகைய கருவிகளையும் பாவிக்கலாம் என்பது பெரியாரின் வாதம். இராமாயணத்தின் பாத்திரப்படைப் புக்களின் தெய்வீக அமைப்பில் அண்ணு நம்பிக்கையற்ற வர். பிள்ளையார் உருவ வழிபாட்டில் அவர் உற்சாகம் கண்டதில்லை. திராவிடப் பெருங் குடி மக்களுக்கு உண்மை யான சுதந்திரம் கிடைத்து விட்டது என்பதை அவர் ஒப்ப வில்லை. எனினும், இராமர் பட எரிப்பு, பிள்ளையார் சிலை உடைப்பு, ஆகஸ்ட், 15ம் தேதி-துக்கதினம் அனுட்டிப்பு போன்ற பெரியாரின் கிளர்ச்சிகளில் அண்ணு மகிழ்ச்சி கண் டதில்லை. அவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள மறுத் தார் என்பது மட்டும் மகிமைக்குரியதல்ல; அவற்றை வெளிப்படையாகவே எதிர்த்தார்—அதுவும், பெரியாரின் கோபாக்கினி எத்துணை கொழுந்து விட்டெரியும் என்ப தைத் தெரிந்தும் எதிர்த்தார் என்பதே அண்ணுவின் சிறு மை கண்டு பொங்கும் பண்பைச் சித்தரிப்பதாகும்.

வெண்தாடி வேந்தரென்றும், தென்னுட்டு கார்ல் மார்க்ஸ் என்றும் தன்மானத் தந்தை என்றும் விதந்தோதப் பெறும் பெரியாரின் அரசியல் வாழ்வு தமிழ் மக்களின் வாழ் வில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத வெறும்பாழ் நிலம் தானு? தமிழ் மாநிலத்தில் அனர்த்தங்களை மட்டுமே விளைவித்த அர்த்த புஷ்டியற்ற வாழ்வா அது? பெரியாரின் தொடர்பு அண்ணுவுக்கு அனுகூலம் தரவில்லையா?.

தமது வாழ்வில் சுமார் அறுபதுவருடங்களுக்கு மேலாக சமூக அரசியல் வாழ்வில் செலவிட்டுவிட்ட பெரியார் தனி யொரு மனிதராக தமிழக சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை செப்பேடுகளிலன்றே செதுக்கி வைக்க வேண் டும். வைதீகக் கொடுமைகள் வர்ணுச்சிரம தர்மங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத மாச்சரியங்கள், மூட நம்பிக்கைகள் இவற்றின் வேட்டைக் காடாக இருந்த தமிழகத்திலே, பாமர மக்களிடையே, புத்துணர்ச்சிக்கும் சிந்தனைப் புரட்சிக்கும் அத்திவாரமிட்டவர் பெரியாரல்லவா? அண்ணு நிறுவிய பகுத்தறிவுப் பாசறை இந்த அத்திவாரத்தில் அமைக்கப்பட்டதன்றே? பகுத்தறிவுப் பிரச்சாரம் செவி மடுக்கப்படும் இந்த நாட்களிலல்ல, வைதீக வெறி வலிமைமிக்க சக்திகளையெல்லாம் அணிதிரட்டி நின்ற நேரத்தில், தனியொரு மனிதனுக அந்த உருக்கு மாளிகையை உடைத்தெறிந்தவர் பெரியார். தமிழகத்தில் தலையெடுத்த பிராமணிய ஆதிக்கத்தின் குரல்வளையை நெரித்து, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வாழ்வு தந்தவர் பெரியார். கேரள மாநிலத்தில் வைக்கம் என்றஇடத்தில் காங்கிரஸ் தொண்டனுக தீண்டாமை எதிர்ப்புப் போர் நடாத்தி அண்ணல் காந்தியடிகளின் வாயிலாகவே 'வைக்கம் வீரர்' என்று பாராட்டப் பெற்றவர் தன்மானத்தந்தை. பெரியார் நடாத்திய சமுதாயப்புரட்சியில் பிறந்த பெருமகனே அண்ணு ஆவர். 'பிரெஞ்சுப் புரட்சியின் புதல்வன் நெப்போலியன்', என்பர் வரலாற்றுசிரியர். தமிழ் நாட்டை ஆக்கிரமிக்க வந்த இந்தி ஆதிக்கத்திற்கு விழுந்த முதல் அடி பெரியாரின் கைப்பட வீழ்ந்ததே. சூத்திரனுக்கு சுயமரியாதை உணர்வைத் தருவதற்கென சுயமரியாதை இயக்கத்தை நிறுவிய பெரியார் தான் தமிழினத்தின் அறிவை ஆக்கிரமித்துக் கொண்ட மூட நம்பிக்கைகளை மூர்க்கத் தனமாகச் சாடினுர். இப்பணியில் அவர் மத நிந்தனை செய்யக் கூடிய அளவுக்கு தீவிர வாதம் காட்டினுர் என்பது உண்மையே. எனினும், பெரியார் இவ்விடயத்தில் நிதானம் காட்டியிருந்தால் பிற்போக்கு சக்திகளின் வலியை இவ்வளவு தூரம் அழித்திருக்க முடியுமோ என்பது சந்தேகமே. கல்லூரிப் படிப்பு அற்ற இந்தக் கர்ம வீரர் இன்னும் தமது தொண்ணூருவது வயதிலும், கர்ச்சிக்கும் சிம்மமாக தமிழக அரசியலில் உயிரோட்டத்துடன் உலவுவது தமிழ் மக்களின் பாக்கியமே. தம் சொல்லிலும் செயலிலும் அஞ்சாத, துஞ்சாத நெஞ்சுரம் மிக்க தலைவர், பெரியாராவர். ஆதித்திராவிடன் இன்று சமுதாயத்தில் அனுபவிக்கின்ற அந்தஸ்து, பெரியார் பெற்றுத் தந்த அந்தஸ்து. பெரியாரைப் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் தனிப்பெரும் சக்தி ஈழத் தமிழகத்திலும் தோன்றியிருப்பின் இன்று தாழ்த்தப் பட்ட தமிழ்மக்கள் தம் உரிமை நிலைநிறுத்தப்பெற்றிருக்கும்.

அண்ணுவின் பகுத்தறிவுக் கருத்துக்கள் இந்தி எதிர்ப்புப் பாரம்பரியம் சீர் திருத்தக் கருத்துக்கள், சோஷலிசச் சித்தாந்தம் பொதுவுடமைத் தத்துவங்கள், சமத்துவ சமுதாயச் சால்புக்கள், கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம் போன்ற சடங்குகளை மறுக்கும் சாதனைகள் இத்தனைக்கும் உருவும், உணர்வும், தந்தவர் பெரியாரே. இப்பெறற்கரிய பாடங்களையெல்லாம் பெரியாரின் பள்ளியிலேயே அண்ணு படித்தார். அவற்றின் பெருமையுணர்ந்து பேணிஞர்.

அவர் பேண மறுத்த பாடங்களும் இருந்தன. அவை யாவை?

அண்ணு முதன்முதலாக அரசியலில் நுழைந்தது நீதிக் கட்சியின் மூலமாகவே. 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை ஆசிரியரும் அண்ணுவின் மதிப்புக்குரிய நண்பருமான திரு. பாலசுப்பிரமணியம் என்பாரின் மூலமாக நீதிக்கட்சியில் நுழைந்த அண்ணுவுக்கு இங்குதான் பெரியாரின் அறிமுகம் கிடைத்தது. நீதிக்கட்சி அன்றைய இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய இந்திய காங்கிரஸ் இயக்கத்திற்கு எதிர்ப்பான இயக்கமாகையால், அரசியல் குரோதம் காரணமாக, வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவ்வப்போது அனுசரணையாக நடக்கத் தலைப்பட்டது. அச்சமயங்களிலெல்லாம் நீதிக்கட்சியின் தவறைச் சுட்டிக் காட்டியவரும் தட்டிக்கேட்டவரும் நீதிக்கட்சியை இந்தியத் விடுதலை உணர்வுகளுக்கு இணக்கமான இயக்கமாகக் கட்டிக்காக்கத் தலைப்பட்டோரும் அண்ணுவே. விடுதலை வேட்கையால் கனன்று கொண்டிருந்த அண்ணுவின் உள்ளம் வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியமண்ணை அடிமை கொண்டிருப்பதை ஒப்பவில்லை. அன்றை அண்ணுவின் கருத்தோட்டத்தின்படி வடவர் தென்னகத்தாரின் வைரிகளாக, தென்னகத்தின்மீது ஆதிக்கம் செலுத்த நினைப்போராக இருப்பினும், இந்தியமண்ணை ஆக்கிரமித்துவிட்ட ஏகாதிபத்தியவாதி இருதரப்பினரினதும் பொது எதிரி, அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றிவிட்டு வடவரோடு கொண்ட பிணக்குகளைத் தீர்க்கலாம் என எண்ணினார். மேலும், ஆதிபத்திய உணர்வு எந்த வட்டாரத்திலிருந்து வந்தாலும் அது முறியடிக்கப் பட வேண்டியதே என எண்ணினார். ஆனால் தமது காங்கிரஸ் எதிர்ப்பைக் கருவியாகக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகளிடம் சலுகைகளைப் பெற விழைந்த நீதிக்கட்சித் தலைவர்கள் பலர் அண்ணாவின் எண்ணங்களில் பங்கு கொள்ள மறுத்தனர். ஏகாதிபத்தியத்திற்கு அண்ணா துணைபோக மறுத்த நிகழ்ச்சிகளில் சில பின்வருமாறு:

1. காங்கிரஸ் அமைச்சரவை கட்சியின் தீர்மானத்திற்கமைய சென்னை இராச்சியத்தினின்றும் பதவிவிலகியது. நீதிக்கட்சித் தலைவர்கள் பலரின் பதவி அபிலாஷைகளைப் புரிந்து கொண்ட வெள்ளைக்காரக்கவர்ணர் நீதிக் கட்சித் தலைவர்களை அமைச்சரவை அமைக்கும்படி வேண்டினார். அமைச்சரவைஅமைப்பதற்குநீதிக்கட்சித் தலைவர்கள் பலரும் ஆதரவு திரட்டி நின்ற நேரத்தில், தனியொரு மனிதராக இந்தத்துரோகத்தை எதிர்த்து, தடுமாற்றமுற்ற பெரியாரையும் மனமாற்றமுறச் செய்து, இத்திட்டத்தை முறியடித்து வெள்ளையரின் முகத்தில் கரி பூசியவர் அண்ணா.

2. இரண்டாவது உலகயுத்தத்தில் இந்தியா ஈடுபடுத்தப் படுவதை இந்தியக்காங்கிரஸ் எதிர்த்தது. இந்திய மக்களின் உணர்வுகளை மதிக்காத ஏகாதிபத்தியம் தனது எடுபிடிகளைக் கொண்டு யுத்தத்திற்கு ஆதரவான பிரச்சாரத்தை மேற் கொண்டது. தமிழ்நாட்டில் செல்வாக்கு மிக்கதும், நீதிக்கட்சியின் பிரச்சார ஏடும் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டதுமான ' விடுதலை ' ஏட்டை யுத்தப் பிரச்சாரத்திற்கு உதவுமாறு வெள்ளையர் விடுத்த வேண்டுகோளை அண்ணா புறக்கணித்தார். பின்னர் தமது விருப்பத்திற்கு மாறாக நீதிக்கட்சியினர் 'விடுதலை' ஏட்டை வெள்ளையரின் பிரச்சாரப் படைக்கலன் ஆக்க முனைந்தபோது, ஏட்டின் ஆசிரியர் பதவியை தூக்கி வீசிவிட்டு வெளியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1944ம் ஆண்டு நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் ஏகாதிபத்திய எஜமானர்களால் வழங்கப்பட்ட 'சர்' 'இராவ் பகதூர்' 'இராவ் சாகிப்' போன்ற பட்டங்களைத்தாங்கியுள்ளநீதிக்கட்சித்தலைவர்கள் அவற்றைத் துறந்துவிட வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தார்.

4. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, வெள்ளையன் வெளியேறிய ஆகஸ்ட் 15ம் தேதியைத் திராவிடர்கள் துக்க தினமாக அனுட்டிக்க வேண்டுமென்ற பெரியாரின் அறிக்கைக்கு 'இந்தியமண்ணை விட்டு ஏகாதிபத்திய வாதிகள் வெளியேறிய நாள், திராவிடர்களின் மகிழ்ச்சிக்குரியதினம், என மறுப்பு வெளியிட்டார். பெரியாரோடு கொண்ட கருத்து வேறுபாடுகளைத் தாக்கமாகத் தொனித்த கட்டங்களில் இது தலையாயதாகும். பெரியாரிடமிருந்து பின்னர் சின்னுட்களுட் பிரிவதற்கு அரசியலுக்குப் புறம்பான காரணமே உடனடிக்காரணமாயினும், கருத்துப் பிளவைப் புட்டுக்காட்டியதும் மனத்தாங்கலை ஏற்படுத்தியதும் மேற்படி நிகழ்ச்சியேயாகும்.

## பரிபக்குவம் . . . . .

அண்ணு தி. மு. க. வைத் தொடங்கிய காலத்தில் தாம் தொட்டதுறையனைத்திலும் பரிபக்குவம்அடைந்தநிலையிலிருந்தார், அதற்கு முன்னேடியாக அவர் தொட்டதுறையனைத்தும் துலங்கத்தலைப்பட்டதும் பெரியாரின் பள்ளியிலேயே. பேச்சாளனுக, எழுத்தாளனுக, நூலாசிரியனுக, அரசியல் ஆய்வாளனுக, நாடகாசிரியனுக, நடிகனுக, தேர்தற்களத்து வீரனுக போராட்டத் தளபதியாக மட்டுமல்ல, கைதியாகக் கூட அண்ணு சிறைப்பயிற்சி பெற்றதும் இந்தப் பள்ளிப் பருவத்திலேதான்.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்ற கவியின் உரத்துடன் பின்னர் பன்முறை சிறைவாழ்வை அனுபவித்த அண்ணு, 1937ம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போரின் தளபதி என்ற பெருமையுடன் முதன் முறையாகச் சிறை சென்ருர். அண்ணுவின் அரசியற் பணியை மட்டுமல்ல இலக்கியப்பணியைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடச் சட்டம் தன் புருவத்தை நெரித்துக்கொண்டது. அண்ணு செய்த எழுத்துப் புரட்சியினுல், 'ஆரியமாயை', 'இலட்சிய வரலாறு' என்ற நூல்களுக்குத் தடைவிதிக்கப்பட்டதுடன் அண்ணு சிறைச்சாலைக்கும் அனுப்பப்பட்டார்.

பத்திரிகைத் துறையில் அண்ணுவின் கைவண்ணத்தைத் தாங்கி முதன்முதலில் வெளிவந்தது பெரியாரின் 'விடுதலை' யாகும். விடுதலை இதழ்களில் செளமிய வருடத்தில் பிறந்த அண்ணு 'செளமியன்' என்ற புனைப்பெயரிலும், 'பரதன்' 'வீரன்' போன்ற புனைப்பெயர்களிலும் தீட்டியகட்டுரைகளும் அரசியல் விமர்சனங்களும் மேட்டுக்குடியினர் மட்டுமே அறிந்திருந்த நாட்டுநடப்புகளை பாட்டாளியினரும் பஞ்சையரும்அறியத் தந்தன. நீதிக்கட்சியின் ஆங்கில ஏடான 'ஜஸ்டிஸ்' (Justice) சஞ்சிகையின் ஆசிரியராகவும் அண்ணு பணியாற்றி நறுக்கானதலையங்கங்களைப்புதுமுறுக்குடன்தீட்டினுர். நீதிக்கட்சி பணக்காரர்களின் உணர்வுகளை மட்டுமே பிரதிபலிக்கும் பான்மையையும் ஏழைத் திராவிடன் ஏங்கி நிற்கும் பரிதாபத்தையும் கண்ட அண்ணு பெரியாரின் இசைவுடன்1944 - ம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றுவதற்குத்தீர்மானம்கொண்டுவந்துநிறைவேற்றினுர். திராவிட கழகத்திற்கு தந்தை பெரியார் தலைவரானுர். அண்ணு தளபதியானுர். தளபதி அண்ணுவின் எழுத்தாணி உழுதிட்ட உயிரோட்டமான கருத்துக்களைத் தாங்கி வெளிவந்தது 'திராவிடன்' பத்திரிகை. இதில்அண்ணு தீட்டிய 'கல்கத்தா காய்ச்சல்' ,ரிப்பன் மாளிகைச் சீமான்கள்' போன்ற தலையங்கங்கள் ஏனையோரைப் பாராட்டுவதில் மிகவும் உலோபியான பெரியாரைக்கூட மனம்விட்டுப் பாராட்ட வைத்தன.

நீதிக்கட்சியின் பேச்சாளருக ஆந்திராவிலுள்ள குண்டூரில் தமதுகன்னிச்சொற்பொழிவைநிகழ்த்திய அண்ணு தொடர்ந்து நீதிக்கட்சியிலும் பின்னர் திராவிடர்கழகத்திலும் பெரியாருக்குப் பிடித்த, இளைஞர் வட்டாரங்களை ஈர்த்தெடுக்கின்ற, பிரதம பிரச்சாரகர் ஆனுர்.'மாநகரசபைத்தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலில் தமிழ்தென்றல் திரு. வி. க. வுடன் சொற்கணை தொடுக்கும் வாய்ப்பு அண்ணாவுக்குக் கிட்டியது. சென்னை மாநகரசபைத் தேர்தலில் அண்ணா தோற்கடிக்கப்பட்டிருப் பினும், தேர்தல் கூட்டங்களில் மக்களின் பிரச்சினைகளை அலசுகின்ற ஜனநாயக சம்பிரதாயத்தை தம் கூட்டங்களில் புகுத்தி நிலைநிறுத்தும் பணிசெய்தார். இந்தி எதிர்ப்பு மாநாடுகளென்றும், சுயமரியாதை மாநாடுகளென்றும், இலக்கியச் சொற்போர்களென்றும், அரசியற் பள்ளியில் அகரவரிசை படித்த மாணாக்கப் பருவத்திலேயே அண்ணா ஏறாத மேடை தான் எதுவோ? எடுத்துப் பேசாத பிரச்சினைதான் ஏதுமுண்டோ?

## தம்பியருடன் . . . . .

பெரியாரின் பள்ளியிலே கீழ்மட்டப் படிவங்களிலே பயின்ற மாணவர்களான நெடுஞ்செழியன், அன்பழகன், சம்பத், மதியழகன், கருணாநிதி போன்றோருக்கெல்லாம் அண்ணா வழிகாட்டியானார். தெரியாத விடைகளையும் புரியாத விளக்கங்களையும் பேராசிரியர் பெரியாரிடம் திரும்பவும் கேட்க அஞ்சிய இவ்வுடன்மாணாக்கர் அண்ணாவிடமே விளக்கம் பெற்றனர்.

தந்தையின் கண்டனங்களுக்கும் தண்டனைகளுக்கும் அஞ்சி மூத்த தமையனிடம் தஞ்சமும் ஆறுதலும் பெற்ற தம்பியரைப் போன்று, பெரியாரின் கெடுபிடிகளுக்கெதிராக அரசியல் தம்பிகள் அண்ணாவிடமே ஆறுதலும் தேறுதலும் பெற்றனர்.

நலிவுற்ற தமிழகத்தில் புதியபொலிவும் வலிவும்காணப் புறப்பட்ட இந்த நல்ல குடும்பத்தில் 1949ம் ஆண்டு தந்தைக்கும் தனயர்க்கும் ஏற்பட்ட பிளவு திராவிடர் கழகத்தை இரண்டாகப் பிளந்தது. திராவிடர் கழகத்தின் பரமவைரியாகப் படம் பிடித்துக் காட்டப்பெற்ற இராஜாஜியை 1949ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி திருவண்ணாமலையில் பெரியார் கண்டு தனிமையில் பேசியமைக்கு, மே மாதம் இறுதியில் கோயம்புத்தூரில் நடந்த முத்தமிழ் மாநாட்டில் அண்ணா விளக்கம் கோரவும், பெரியார் தமது 'விடுதலை' இதழ்மூலம் 'தன் சொந்த விஷயம்' பற்றி விளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் தரவும், பெரியாரின் பொருந்தாத் திருமணம் திராவிடர் கழகத்தில் பெரிய பூகம்பத்தையே உருவாக்கிற்று.

தாம் போதித்த சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளுக்கு மாருக பெரியார் முதுமைப்பருவத்தில் இளமைப்பருவத்துப் பெண்ணை மணம் முடிக்கவிருக்கும் சேதிகேட்டு அண்ணுவும் தம்பியரும் அலமலந்தனர். ''பெரியாரின் பொருந்தாச் செய்கை கண்டு கண்ணீர்த்துளிகளுடன் வெளியேறுகிருேம்'' என அறிக்கை விடுத்து தம்பியருடன் திராவிடர் கழகத்தினின்றும் வெளியேறினுர் அண்ணு. ''கண்ணீர்த்துளிகள், போகிருர்கள்'' என எடுத்தெறிந்து கேலி பேசினுர், தம் கொள்கையினின்றும் தடம்புரண்டு மணவினையை முடித்துக் கொண்ட பெரியார்.

1949ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் தேதி சென்னை பவளக்காரத் தெருவிலே ஒரு சிறு அறையிலே வெம்பிய உள்ளத்துடன் புதிய இயக்கம் காண்பதற்குக் கூடிய தன் தம்பியரின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அண்ணு, அவர்களை விழித்து, ''கண்ணீர்த்துளிகளே! என் கண்ணின் மணிகளே'' எனப் பேச்சைத் தொடங்கினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பியர் அல்லது தனக்கு வே(று) உயிர்
இம்பரின் இல(து) என எண்ணி ஏய்ந்தவன்".

—கம்பராமாயணம்.

# தி. மு. க. வில் அண்ணு

'அசோசியேற்றட் பிரஸ்' என்ற இலண்டனிலுள்ள செய்தி நிறுவனத்தின் ஆசிய நிருபரான திரு. ஹரிசன் என்பார் 'இந்தியா—மிகவும் ஆபத்தான காலகட்டம்' (India-The most dangerous decades) என்ற தமது நூலில் அண்ணுவைக் குறித்துப் பின்வருமாறு எழுதினுர்.

"... ...Periyar's popularity suffered a disastrous blow in 1949 when at the age of 72 he married a 28 year old girl providing a pretext for his ambitious lieutenant C. N. Annadurai to secede with his followers to find the Dravida Munnetra Kazhagam...... Annadurai's admirers exaggerate why they call him Dravidian Mao; but there is no doubt that this powerful orator is the single most popular mass figure in this region .. ...... Communist prospects in Tamilnad seems darker than ever now that Annadurai has become major Dravidian leader... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தமிழாக்கமாவது:

''......பெரியாரின் செல்வாக்கு, 1949ம் ஆண்டு அவர் தமது 72வது வயதில் 28வயதுள்ள மங்கையொருத்தியை மணந்த போது பலமான தாக்குதலுக்குள்ளாயிற்று. இது அவரது உளவேட்கைமிக்கத் தளபதியான அண்ணாதுரை தமது கூட்டத்தினரோடு பிரிந்து சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவதற்குச் சாக்காக அமைந்தது. அண்ணாதுரையின் அபிமானிகள் தாம் அவரை திராவிடத்தின் மாவோ என அழைப்பதுபற்றி மிகைப்படுத்திக் கூறுவதுண்டு. எனினும் இச் சக்திவாய்ந்த பேச்சாளர் தாம் இப்பகுதியின் தனியொரு செல்வாக்குமிக்க பொது மக்களின் தலைவனுவார் ...''

'' ...இப்போது அண்ணாத்துரை தலையாய திராவிடத் தலைவராக எழுச்சி பெற்றதுடன், கம்யூனிஸ்டுகளின் எதிர்காலப்பலன் முன்எப்பொழுதைக் காட்டிலும் இருளடைந்ததாகத் தோற்றுகிறது .....''

அண்ணாவின் உளவேட்கையையிட்டு குறிப்பிட்ட செய்தி நிருபரின் கருத்து விவாதத்திற்குரியதேயாயினும் தமிழ்நாட்டின் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தளர்ச்சிபற்றி அன்னார் குறிப்பிட்டது சாலவும் உண்மையுடைத்தே. தமிழ்நாட்டிலே அன்றைய ஆளுங்கட்சியின் வலிமைமிக்க எதிர்க்கட்சியாகத் திரண்டுவந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தை தமிழ்மக்களின் அரசியலரங்கிலே தலையெடுக்கவொண்ணுது விலாசமற்ற நிலைக்குக் கருக்கி விட்டவர் அண்ணுவே. சமூகத்தின் அடித்தளத்தில் உழல்வோரைக் கவர்ந்திழுக்கும் சமதர்மத்திட்டங்களனைத்தையும் தி. மு. க. வின் வேலைத்திட்டத்தில் இணைத்துக் கொண்டார். கம்யூனிஸ்டுகளின் சர்வதேசச் சித்தாந்தங்களில் சிக்கியிருந்த இத் திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுடன் நெருக்கமானதும் அவர் தம் உணர்வுக்கு உருக்கமானதுமான திராவிட அல்லது தமிழ்த் தேசியத்துடன் இணைத்தார். இந்திய அரசியல். சமுதாய, பொருளாதார அமைப்பும் அண்ணுவின் கொள்கை வகுப்பை நியாயமானதாகக் காட்டும் தன்மையது. ஏனெனில், அண்ணு துலக்கிக் காட்டிய வடநாடு—தென்னடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியன்—திராவிடன், என்ற உணர்ச்சிப் பிளவு, ஆண்டான்—அடிமை, சுரண்டுவோன்—சுரண்டப்படுவோன், முதலாளி—தொழிலாளி, செல்வன்—ஏழை, என்பன போன்ற வர்க்கப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவனவாக அமைந்திருந்தது. இதனால் இயல்பாக இடதுசாரி இயக்கங்களின்பால் ஈர்க்கப்படுவனவும் ஓர் அரசியல் இயக்கத்தைக் களையுடன் வைத்திருக்கக் கூடியனவும், சமுதாயத்தின் துருப்பிடிக்காத, துடிப்புள்ள உறுப்புக்களுமாகிய, தொழிலாளர்கள், இளைஞர்கள், கல்லூரி மாணவர், விரிவுரையாளர், தாழ்த்தப்பட்டோர், எழுத்தாளர், கவிஞர் என்போர் தி. மு. க. இயக்கத்தில் அணிதிரண்டனர்.

## சாம்பர் மேட்டிலே.....

'மழையிலே முளைத்த காளான்கள்; முளையிலேயே கருகிவிடுவார்கள்' என ஆருடம் கணித்தவர்கள் நாணத்தக்க விதமாக தி. மு. க. அன்று அறுகுபோல் வேரூன்றி இன்று ஆல்போல் விழுதூன்றி விரிந்துபரந்து தமிழகத்து மாந்தருக்கெல்லாம் நிழல் தருகின்றதெனின் இதைச் சாதித்த சாமான்யரான அண்ணாவின் ஆற்றல் சாற்றக் கூடியதோ? சருகுகள் எரிந்து போன வெறும் சாம்பர் மேட்டின் மேலே பெரியதோர் சாம்ராஜ்யத்தையே கட்டியெழுப்பியது போல, ஆள்வலியும் அணிவலியும் அந்தஸ்துவலியும் தோள்வலியும் துணைவலியுமில்லாத ஒரு தொடக்கத்திலிருந்து, தெருவோரத்திலும் திண்ணையோரத்துத் தாழ்வாரத்திலும் இரண்டொரு தம்பியரைக் கூடிப் பேசிப்பேசியே பரந்த ஓர் இராச்சியத்தின் அரசையே கைப்பற்றும் அளவுக்கு அணுவணுவாக வளர்ந்தார். 'கல்போட்டால் கலைந்துவிடும் காக்கைகளின் கூட்டம்' எனக் கிண்டல் செய்யப்பட்ட தி. மு. க. வை; தமிழகமெங்கணும் ஆயிரக்கணக்கான கிளைகளையும் சார்பு மன்றங்களையும் கொண்ட மாபெரும் பாரிய அமைப்பாகவும், சென்னை மாநகரத்து தி. மு. க. தலைமை நிலையத்திலிருந்து தகுதிவாய்ந்த ஒருவர் ஒரு பித்தானை அழுத்தினால், தமிழ்நாடெங்கணும் பட்டி தொட்டியனைத்தும் பரந்துபட்ட கிளைக் கழகங்கள் அத்தனையும் இயங்கத்தக்க பின்னிப்பிணைந்த ஒரு கட்டுக்கோப்பான இயந்திரமாகவும், கிளைகளின் நிர்வாகிகள் தொட்டு தலைமை நிர்வாகிகள்வரை ஒவ்வொரு மட்டத்திலும், சமூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் அடித்தளத்துச் சாதாரண குடிமகனும் பங்கு கொள்ளத்தக்கதான தேர்வை நடாத்தி இயக்கத் தலைவர் களை நிர்ணயிக்கும் ஜனநாயகத்தின் பயிற்சிக்கூடமாகவும் வளர்த்தெடுத்தார் அண்ணு. இந்திய உபகண்டத்திலேயே திண்ணிய அமைப்புடன் திகழ்ந்திடும் அரசியற்கட்சி தி. மு. க. வே.

## பிரச்சாரப் புதுமை

தி. மு. க. வின் வலிவுக்கும் பொலிவுக்கும் அண்ணுவின் கூரிய அறிவும் சீரிய பேராற்றலும் அடித்தளமாக, அத் தளத்திலே நிறுவிய பல்முனைப் பணிகள் முதலீடுகளாயின. அரசியலில் நாவன்மையும் எழுத்து வன்மையும் எத்துணை சக்தி வாய்ந்த சாதனங்கள் என்பதைச் சாதித்துக் காட்டி யவர் அண்ணுவே. தமது நாவை இயக்கத்தின் தலையாய படைக்கலனுக்கிய அண்ணு, எழுத்து என்ற ஏவாயுதத்தை, எத்தனை திசைகளில் செலுத்திஞர். கதைகள், கவிதைகள் கட்டுரைகள், நாடகங்கள் இத்தனையையும்பிரச்சாரப் பிரங் கிகளாக உருமாற்றிய புதுமையான பிரச்சாரக் கலைஞுகத் திகழ்ந்தார். தமது பத்திரிகையை தி மு. க வின் அரணுக் கிஞர். இதனை முன்னேடியாகக்கொண்டு தம்பியரின் சிற்ற ரண்கள் பல தோன்றி கழகத்தை வளைத்து அகழி அமைத் துக்கொண்டன. தமது பிரச்சாரயந்திரத்தின் உபரிப் பாகங்களாக கலைத்துறையைச்சார்ந்த சாதனங்களான திரைப்படத்தை, நாடகங்களை மட்டுமன்றி, வில்லுப் பாட்டு, கதாகாலட்சேபம் ஆகியனவற்றையும் வெற்றிகர மாகப் பயன்படுத்தி தமிழ்நாட்டு அரசியலிலே வீறுநடை போட்டவர் அண்ணு. அரசியற்பிரச்சார முறைகளிலேயே, கவர்ச்சியற்றனவும் வேட்டு வைக்காத தோட்டாக்களை யுடையனவுமாகிய பழையபடைக்கலன்களை வீசிவிட்டு, புதிய உத்திகளைப்புகுத்திய புரட்சியாளராயினர். அவ் வளவு ஏன்? வீதியோரத்து மதில்களை யெல்லாம் அலங்கோ லப்படுத்தி அஞதரவாகக் கிடந்த சுவரொட்டிகளை போர்க் கோலம் காட்டும் கருவிகளாக சிந்தனைப் புரட்சி செய்யும் சித்திரங்களாக மாற்றியமைத்த வித்தகர் அண்ணுவல்லவா? இதோ சுவரொட்டிகள் எங்ஙனம் அமையவேண்டுமென அண்ணுவே 'திராவிடநாடு' இதழ்களில் தீட்டிக்காட்டு கிருர். அவற்றுள் சில காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "இந்தி, தமிழ் மரபு அழிக்கும் செந்தீ"

★ "திருவிடம் விடுபட தீமைகள் பொடிபட
தி. மு. க. தொண்டு நாட்டுக்கு என்றும் உண்டு"

★ "வாட்டம் போக்காக் காங்கிரசு
நோட்டம் பார்க்குது வோட்டுப் பெற"

★ "எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஏட்டினிலே
— இந்தி
குட்டக் குட்டக் குனியும் கேடர்கள் நாட்டினிலே"

★ "கடன் பட்ட நாடு காவல் இல்லா வீடு"

★ "உரிமையிழந்த நாடு உயிரற்ற என்புக் கூடு"

## மூத்த அண்ணன்.

தி. மு. க. வின் வலிவுக்கும் வளத்துக்கும் காத்திரமான கருவியாக அமைந்தது தி. மு. க. தொண்டர்களுக்கும் தலைவர் அண்ணாவுக்குமிடையே நிலவிய அபூர்வமான உறவுமுறைதான். உலகின் வேறு எந்த அரசியல் இயக்கத்திலும் காணமுடியாத புதுமையை, தலைவருக்கும் தொண்டருக்குமிடையில், தலைவருக்கும் இரண்டாவது மூன்றுவதுமட்டத் தலைமைக்குமிடையிலிருந்த வாஞ்சையை, சாதித்தது அண்ணாவின் விரிந்து பரந்ததும் ஈரம் செறிந்ததுமான இதயம். இயக்கத்தைக் குடும்பபாசத்துடன் கட்டிவளர்த்தார். அண்ணாவின் தலைமையை என்றும் எவரும் தட்டிக் கேட்டதில்லை. அண்ணாவைக் காட்டிலும் தாம் எவ்வாற்றானும் மேம்பட்டோரென எந்த இரண்டாவதுமட்டத்தலைவனும் கருதியதில்லை. அண்ணாவின் கருத்தைக்காட்டிலும் தமது கருத்து வலுவுடைத்து என எந்தத் தலைவனும் கருதியதில்லை. தமது கருத்தில் நம்பிக்கையிருப்பினும், குடும்பத் தலைவன் அண்ணாவின் கருத்து வேறு விதமாக இருக்கிறதே, 'என்னை வளர்த்து ஆளாக்கிய அவருக்குத் தெரியாததா எனக்குத்தெரிந்தது' என்ற அசையாத நம்பிக்கை தம்பிக்கு அண்ணாவின்பால் இருந்தது. இத்தனிப் பெரும் தலைமையையும் ஆணையையும் அண்ணா அதிகாரபலத்தால்பெற்றாரில்லை, அன்பின் வலிமையால் பெற்றார். அவராக கேட்டுப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றதுமல்ல, தம்பிகளாகவே தந்தவை அவை. தம்பிகள் தட்டிக்கேட்க மாட்டார்கள் என்பதற்காக தான்தோன் றித்தனமாக அண்ணு நடந்தாரில்லை, தம்பியரை உசா வியே திட்டங்களை வகுத்தார், தீர்மானங்களைச் செய்தார். 'தந்தை பெரியாரைப் பிரிந்து வந்த தனயர்கள் மூத்த அண்ணனுடைய அறிவுரைகளுக்குச் செவிசாய்த்து, ஆலோ சனைகளைக் கேட்டு, ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பது என் பது தி. மு. க. என்ற அரசியற் குடும்பத்தினரின் தத்துவ மாக இருந்தது. தவறிழைத்திருந்தாலும் தந்தை தந்தை தானே என்ற மதிப்பும், தந்தை ஏசினுலும் எதிர்வார்த்தை பேசாத தனயனின் பாங்கும் பெரியார்பால் அண்ணுவுக்கும் தி. மு. க. தம்பிகளுக்கும் இருந்தன. அந்தப் பண்பாடும் அண்ணு வளர்த்ததே.

அண்ணுவின் மறைவின் போது வெளிவந்த 3-2-1969ம் தேதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் நிருபர் 'அண்ணு'வின் அற்புதத்தை பின்வருமாறு இரத்தினச் சுருக் கமாகக் குறிப்பிட்டார்.

'...அண்ணு' என்பது 'அண்ணுதுரை' என்பதன் சுருக் கமே. திரு. அண்ணுதுரை இதையே தமது புனை பெயராக வும் கொண்டார். இது அவருடைய 'தம்பிமார்' என்ற தகுதியில் பெருமையுற்ற தொண்டர்களின் மீது ஒரு மந்திர சக்தியாக இயங்கிற்று. திரு. அண்ணுதுரையின் ஒரு சிறு ஆணையும் அட்டியின்றிப் பணியப் பெற்றதால், அவர் தடி யெடுத்துத் தண்டிக்கவேண்டிய அவசியமேற்பட்டதில்லை. அண்ணு வகுத்த பாதையினின்றும் அவர் தொண்டர்கள் விலகி உலவிய காலையிலெல்லாம், அண்ணுவின் ஒரு வேண்டு கோள் அவர்களைத் திரும்பவும் அவர் சுட்டிக் காட்டிய பாதைக்கு இட்டு வந்தது. கட்சிக்குள் எழுந்த பிணக்குக ளிலெல்லாம் அவரே இறுதித் தீர்ப்பாளராக இருந்தார். அனுபவ சாத்தியமான அறிவுத் திறனுடனும், தூண்டு தல் தரும் உரைத் திறத்தாலும், அவர்கள் தாம் கூறுவதை ஏற்கச் செய்வார். அவர் 'தந்தை' பெரியாரின் திராவிட கழகத்திலிருந்து பிரிந்து சென்றகாலையிலும், அவரது எதிர்ப்பு தந்தையை எதிர்த்த தனயனின் தகைமைத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கட்சியில் (தி. மு. க) அவர் வகுத்துக் கொண்ட நிலை வழிகாட்டும் அண்ணனின் நிலையாகும்...''

தி. மு. க. வின் இரண்டாவது மூன்றாவது மட்டத் தலைவர்களுக்கு மட்டுமல்ல தி.மு.க. வின் கடைசித் தொண்டனுக்கும் அவர் அண்ணாதான். இதனால் தி. மு. காவின் கடைசித் தொண்டன் 'கடைசித் தம்பி' என்ற முறையில் 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே' என அறிந்திருந்த அண்ணாவின் இதயத்தை இறுகப் பற்றிக் கொண்டான். இதனால், தமிழ் நாட்டின் ஒரு குக்கிராமத்திலிருந்து தம் அரசியற் கட்சியின் மாபெரும் தலைவனைக் காண வருகின்ற சாதாரண தொண்டனுக்கு, இடையிலுள்ள 'தரகர்'களின் அறிமுகக் கடிதம் தேவைப்படுவதில்லை. நேராக தொண்டன் அண்ணாவிடம் சென்று 'வணக்கம் அண்ணா' என்னும் போது அந்த 'அண்ணா' என்ற பதத்திலிருந்து எழுகின்ற நாதம் நெருக்கமான உணர்வுகளை நிறைத்து விடுகிறது. தொண்டனும் தடுமாற்றம் எதுவுமின்றி தனது குறைகளை சொந்த அண்ணனிடம் கூறும் சரளமான உணர்வுடன் கூறுகிறான். கட்சி விடயங்கள் மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பாற்பட்ட குடும்பப் பிரச்சினைகளுக்குக் கூட இயக்கத் தொண்டர்கள் அண்ணாவிடம் ஆலோசனை கேட்டு வருவதுண்டு. இயக்கத்தினருக்கும் அண்ணாவுக்குமிடையேயிருந்த அன்பு பரஸ்பரமானது. கழகத்தின் கடைசித் தொண்டனுடைய சொந்த வாழ்வுப் பிரச்சினைகளிலும் பங்கு கொண்டார். அவர்களுடைய மணவினைகளிலும் ஏனைய வைபவங்களிலும் பங்கு கொள்ளும் போதெல்லாம் குடும்பத் தலைவன் என்ற உணர்வுடனேயே பங்கு கொண்டார். இயக்கப் போராட்டங்களில் ஈடுபட்டு இடிந்து போன தொண்டர்களின் குடும்பங்களை நிவாரணமளித்து வாழவைப்பதில் அக்கறையாக இருந்தார். கழகத்தின் இதர தலைவர்களும் தொண்டர்களும் எவ்வளவுக்கு அண்ணாவின் தயவிலே தங்கி அவர் நிழலிலே தஞ்சம் கண்டார்களோ அவ்வளவுக்கவ்வளவு அண்ணாவும் தன் வலிமையை அவர்களிடமிருந்தே தான் பெற்றதாக உணர்ந்தார். 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என அண்ணா அடிக்கடி மார்பு தட்டியமை மனப்பூர்வமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருவோரத்து மனிதர்.....

அண்ணுவுக்கு இன்பமயமான இந்த இறுமாப்பைத் தந்த மக்கள், பெரும்பாலும், எண்ணிக்கையால் பொலிந்தும் சமுதாயச் செல்வாக்கிலே மெலிந்தும் வாழுகின்ற சமூக மட்டத்தின் அடித்தளத்து உறுப்புகளே. "நான் தெருவோரத்து மனிதனின் பிரதிநிதி" ('I am a representative of the man in the street') என புதுடில்லி மாநிலங்களவையில் அண்ணு பெருமிதத்துடன் கூறியமை வெறுமையான வார்த்தைகளல்ல. உரிமை குறைந்த தாழ்த்தப்பட்ட மக்களும், வசதி குறைந்த வறிய மக்களும், வாழ்க்கைத் தரம் அமையாத தொழிலாளர் வர்க்கத்தினருமான தரப்பினரே, அண்ணு அமைத்த பாசறையின் முன்னணியில் படைவீரராயினர். பிறர் தயவிலே வாழ்வதற்கெனவே சமுதாய அமைப்பினுல் ஆளாக்கப்பட்டுவிட்ட இந்த அடித்தளத்து மக்கள் அண்ணு என்ற சுமைதாங்கியிலே தாம் ஆறுதல் காணலாம் என நம்பினர். அண்ணுவின் அரவணைப்புக்குள் அடைக்கலம் புகுந்தனர். அண்ணுவிலே தம் துயர இருள் நீக்கும் நம்பிக்கையொளியைக் கண்டனர். அண்ணு நோய் வாய்ப்பட்ட நாள் முதலாக அண்ணுவின் உடல் கடற்கரையிலே அடக்கம் செய்தற்கென இட்டுச் செல்லப்படுகின்ற வரையில், புற்றுநோய் மருத்துவ மனைக்குப் புறத்தேயும் பின்னர் இராஜாஜி மண்டபத்திற்குப் புறத்தேயும், சுமார் இரண்டு வார காலமாக, இரவு பகலாக, கொட்டும் பனியிலும் கொழுத்தும் வெய்யிலிலும், உண்ணுது உறங்காது தவமிருந்து தெய்வத்திடம் அண்ணுவின் உயிரை இரந்த மாந்தர் அன்ருடங் காய்ச்சிகளான சமுதாயத்தின் ஆண்டிகளே. தமது அன்ருட உழைப்பையும் துறந்துவிட்டு உலர்ந்த உதடும் ஒட்டிய வயிறும் பஞ்சடைந்த கண்களுமாக, மருத்துவமனையின்பால் வைத்த விழி வாங்காது அண்ணுவின் உயிருக்காகக் கடவுளிடம் கையெடுத்த பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமான பஞ்சையர், தமக்கு வாழ்வு தந்தவனை, இன்னும் தரவேண்டியவனை, எங்கே கடவுள் அரையும் குறையுமாகப் பறித்துவிடுமோ என ஏங்கினர். ஆயிரக்கணக்கான ஆதித் திராவிடப் பெண்கள் (ஹரி ஜனங்கள்), முதியோரும் இளையோருமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவின் பிரிவு கேட்டு தமது மார்பிலும் தலையிலும் அறைந்து அழுகுரல் எழுப்பி ஆற்றொணுத் துயரத்தால் மயங்கினரென்றால் அண்ணா என்ற மன்னன் ஆண்ட இதய சாம்ராஜ்யத்தின் பரப்புக்கு வரப்பேது?

## கண்ணின் மணிகள்.....

'கண்ணீர்த் துளிகளே! என் கண்ணின் மணிகளே' எனத் தம்பியரை விழித்துக் கழகத்தைத் தொடக்கிய அண்ணா தன் தம்பியரைக் கண்ணின் மணிகளாகவே போற்றினார். அருமை மிக்கவர் எனக் கருதி உரிமையுடனும் பெருமையுடனும் அவர்களை உருவாக்கினார். உதாரணமாக,

★ தமக்குப் பின்னர் கழகத்திற்குத் தலைமை தாங்கும் தகுதியுடையராகத் தன் தம்பியரை உருவாக்க விளைந்த அண்ணா, தன் மதிப்புக்கும் அன்புக்குமுரியாரும், தன் நிழலிலே நெடிது நின்றவரும் தமக்கு அடுத்த அணியிலே முதன்மையானவராக அவரால் கணிக்கப் பெற்றவருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை கழகம் தொடங்கிய நாட் தொட்டு தாம் வகித்து வந்த பொதுச் செயலாளர் பதவியிலமர்த்தத் தீர்மானித்தார். இத் தீர்மானத்திற்கமைய 1956-ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் திரு. நெடுஞ்செழியனின் பெயரை பொதுச் செயலாளர் பதவிக்கு முன்மொழிந்து அண்ணா அழைத்த அழகு கழகத்தவர் உள்ளத்தையெல்லாம் உருக்குவதாக அமைந்தது. தமக்கே உரித்தான குரலில் அன்பும் பெருமையும் உரிமையும் குழைய, "தம்பி வா, தலைமை தாங்க வா; உன் ஆணைக்கு அடங்கி நடக்கக் காத்திருக்கிறோம் வா" என்றல்லவா அண்ணா அழைத்தார்.

★ 1961-ம் ஆண்டு கழகத்தில் கருத்து வேறுபாடு கொண்ட திரு. சம்பத், தாம் வன்செயல் எனக் கருதிய சில நிகழ்ச்சிகளுக்கெதிராக உண்ணாவிரதம் மேற்கொண்ட போது அண்ணா மனம் நொந்தார். சம்பத்தின் எழுத்தும் பேச்சும் தனிப்பட்ட முறையில் — கழகத்தவர் வேறு எவரும் துணிந்திருக்காத வகையில் — தம்மைத் தாக்கியிருப்பதை உணர்ந்தும், விசாலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் படைத்த அண்ணா், சம்பத்தின் உண்ணு விரதத்தைக் கைவிடுமாறு வேண்ட தாமே நேரில் சென்ருர். தம் உறுதிமொழியின்பேரில் சம்பத் உண்ணு விரதத்தைக் கைவிட்டபோது சம்பத்தை உச்சிமோந்து முத்தமிட்டுத் தழுவிக் கொண்டார்.

★ 1962-ம் ஆண்டு விலைவாசி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த திரு. மு. கருணாநிதி ஆறுமாத காலத்திற்குப் பின் விடுதலை பெற்றபோது வரவேற்கச் சென்ற அண்ணா, உள்ளம் நெகிழவும் மகிழவும் தக்க உணர்வு மோதிய நிலையில் கண்கலங்க உச்சி மோந்து முத்தமிட்டு வரவேற்ருர். ''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'' என்பதை உணராத சில ஏடுகள் அன்று அந்நிகழ்ச்சியைக் கிண்டல் செய்து எழுதவும் தவறவில்லை.

மேற்படி நிகழ்ச்சிகளில் இரண்டோடு தொடர்புண்ட குறிப்புகளைக் கூறுவது பொருத்தமற்றதன்று.

தனிப்பெருந் தலைவன் ஒருவனைச் சுற்றிப் படர்ந்த இயக்கங்கள் பல, அத்தலைவன் மறைந்தவுடன் தாமும் மறைந்துள்ளன. தனிப்பட்ட அண்ணாவையே கொழுகொம்பாகக்' கொண்டு பற்றிப் படர்ந்த கழகக் கொடி, தாம் பட்ட பின்னரும் பசுமையோடு பரவிப் படர வேண்டுமென எண்ணிப் போலும், அண்ணா தமக்கு அடுத்த அடுத்த அணிகளில் கழகத்தைப் பொறுப்பேற்கும் தகுதி மிக்கார் பலரை உருவாக்கிவிட்டுச் சென்ருர். இத்தன்மையால், மற்றைய இயக்கங்களின் தலைவர்கள் தமது இயக்கங்களுக்குச் செய்ய மறந்த தலையாய கடமையை, அண்ணா தி. மு. க. வுக்கு மறக்காது செய்துள்ளார். திரு. நெடுஞ்செழியன் அவர்களிடம் கழகத்தின் தலைமைப் பொறுப்பாகிய பொதுச் செயலாளர் பதவியைக் கையளிப்பதற்கு முன்னதாக, திரு. நெடுஞ்செழியனுடன் பன்னுட்கள் உடனிருந்து நாவலரைத் தலைமைத் தகுதிக்குப் பயிற்றுவித்த பாங்கை, பல்வேறு பிரச்சினைகளில் நாவலர் எத்தகைய சிந்தனைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிக்கின்றார் எனக் கண்காணித்த சீர்மையை, அண்ணாவே பின்னர் அழகுபட 'திராவிட நாடு' இதழ் களிலே தீட்டியுள்ளார்.

அண்ணாவினால் உருவாக்கப்பட்டு ஊருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திரு. சம்பத், 1957-ம் ஆண்டுத் தேர் தலில் தி. மு. க. வின் நாடாளுமன்ற உறுப்பினராக நாமக் கல் தொகுதியிலிருந்து தேர்வு பெற்றார். புது டில்லி நாடாளுமன்றத்தின் நாவன்மைமிக்க கழக உறுப்பினன் என்ற தகுதியுடன், நாடாளுமன்றக் குழுவுடன் உருஷ்ஷியா வுக்கும் சென்று திரும்பியதால், உலகம் சுற்றிய தனியொரு கழகத்தவன் என்ற தகுதியும் திரு. சம்பத்துக்குக் கிடைத் தது. இதனால் ஏற்பட்ட தடுமாற்றத்தின் காரணமாக, திரு. சம்பத் தமது தகுதிக்கு மேலாக நினைக்கவும் பேசவும், அண்ணாவின் தகுதி பற்றிச் சந்தேகம் தெரிவிக்கவும் தலைப் பட்டதுடன் கசப்புணர்ச்சிகளை வளர்த்து கழகத்திலிருந்தும் வெளியேறினார். திரு. சம்பத் தமது சகாக்களோடு வெளி யேறியமை கழகத்தின் செல்வாக்கைப் பாதித்திராத போதிலும், அகலியதும் இளகியதுமான மனத்தைக் கொண்ட அண்ணாவினால் தன் தம்பியொருவன் தன்னை விட்டு நீங்கும் நிலையைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அந்நிலை யில், அண்ணா அவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் மிகவும் உருக்கமானது. ''வேறெங்கும் செல்லாதீர்கள். என் உள் ளம் விசாலமானது; இங்கேயே அனைவரும் தங்கலாம். இதைப் போன்ற இளகிய இதயப் பரப்பை நீங்கள் எங்கும் காணமாட்டீர்கள். திரும்பி வாருங்கள்'' என வேண்டினார்.

## களம் பல கண்டும்.....

போராட்டங்களையிட்டு அண்ணா சில வரையறைகளை விதித்துக் கொண்டிருந்தார். ''போராட்டங்களைத் தேடிச் செல்வதில்லை, வந்த போராட்டத்தை விடுவதுமில்லை'' என்பது ஒன்று. 'கட்சியிலுள்ள கடைசித் தொண்டன் எந்த அளவு தியாகம் செய்ய அவன் சூழ்நிலை இடம் தருகிறது என்பதைப் பார்த்துத்தான் போராட்டத் திட்டங்களை வகுக்க வேண்டும். தலைவர்கள் எந்த அளவுக்குத் தியாகம் செய்வார்கள் என்பதைப் பார்த்துத் திட்டம் தீட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது' என்பது இன்னென்று. இந்த வரையறைகளைச் சற்று உற்றுப் பார்த்தால் போராட்டம் போராட்டத்திற்காகவல்ல, போராட்டம் மக்களுக்காக என்ற தத்துவத்தை அண்ணு கடைப்பிடித்தமை புலனுகும். தி. மு. க. அமைக்கப்பட்ட பின்னர் அதன் கன்னிப் போராட்டம், கழகம் தோன்றிய நான்கு ஆண்டுகளுக்குள், 1953-ம் ஆண்டு நடைபெற்றது. மும்முனைப் போராட்டம் எனத் தி. மு. க. வரலாற்றிலே தியாகத்தால் தீட்டப்பட்ட இக்களப் பரணி தி. மு. க. வின் கன்னி வெற்றியின் பெற்றி கூறும். (1) தமிழக முதலமைச்சராக இருந்த இராஜாஜியின் குலதர்மக் கல்வித் திட்டத்தை (வர்ணுச்சிரம கல்வித் திட்டம்) எதிர்த்தும் (2) தமிழ் நாட்டில் பிழைக்க வந்த டால்மியாவின் பெயரால் தமிழ் ஊரான கல்லக்குடி டால்மியாபுரம் என மாற்றியமைக்கப் பெற்றமையால், பழைய கல்லக்குடி என்ற பெயரைச் சூட்டவும் (3) தமிழர் கோரிக்கையை 'நொன்சென்ஸ்' எனச் சினந்த பிரதமர் நேருவுக்கு தமிழகத்தின் புண்பட்ட உணர்ச்சியைப் புலப்படுத்தவும், தமிழகம் எங்கும் அண்ணுவின் ஆணையின்படி நடைபெற்ற இப்போராட்டத்தில், அண்ணு உட்பட ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் ஒரேநாளில் சிறைப்பட்ட சிறப்பு தி. மு. க. வளரும் சக்தியென்பதையும் அண்ணு வல்லாண்மை மிக்கார் என்பதையும் அழுத்தமாகத் தெரிவித்தது. தி. மு. க. போராட்டத்தின் தாக்கத்தைத் தாங்க இயலாது முதலமைச்சர் இராஜாஜி பதவி விலகினர்; 'பச்சைத் தமிழர்' காமராஜரும் பதவிக்கு வந்தார். அன்று இராஜாஜியை பதவியிலிருந்து விரட்டியது மட்டுமன்று அண்ணுவின் சாதனை. அன்று தன்னையும் தம்பியரையும் மூன்று மாதம் தொட்டு ஆறு மாதத்திற்குச் சிறைச்சாலைக்கு அனுப்பிய இராஜாஜியின் அன்பையும் அறிவையும் பின்னர் தமக்குத் துணையாகக் கொண்டாரே, அதுவும் சாதனைதான். இந்தித் திணிப்பாளராக இருந்த இராஜாஜியை இந்தி எதிர்ப்பாளராக, இந்தி எதிர்ப்பு சக்திகளின் தெய்வீகமான தார்மீக வலிமையாக மாற்றினுரே அது மகத்தான சாதனையாகும். 'தி. மு. க. எனது எதிரி நம்பர் (1)' என வஞ்சம் கொண்டிருந்த இம் முதுபெரும் தலைவரை 'தி. மு. க. தம்பிகள் என் தத்துப் பிள்ளைகள்' எனக் கூறும்படி வைத்தாரே, அது மாபெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையாகும். அண்ணாவின் வெற்றிகள் எதிரிகளைக் கொன்று சாதித்தவையன்று; அவர்தம் இதயங்களை வென்று சாதித்தவை. அதனால் அவை நிரந்தரமானவை யும் கூட. மும்முனைப் போராட்டத்தின் பின்னர் நடை பெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்றவை தமிழக மக்களின் இதயக் குமுறல்களின் எதிரொலிகளே தவிர கட்சி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட கருவிகளல்ல.

## தேர்தற் களத்திலே......

1956 ம் ஆண்டு திருச்சி மாநாடு தி.மு.க வரலாற்றில் பல்லாற்றானும் ஒரு திருப்பு முனையாகும். தி.மு.க. நேரடி யாகத் தேர்தலில் ஈடுபடுவது என்ற தீர்மானம் எடுக்கப் பட்டதும் இந்த மாநாட்டிலேதான். ஜனநாயகவாதி யான அண்ணா இத்தீர்மானத்தை மாநாட்டுப்பந்தல் முகப்பில் வாக்குப்பெட்டி யொன்றில் மாநாட்டுக்கு வரு வோரை வாக்களிக்கவைத்தே தீர்மானித்தார். இதனைத் தொடர்ந்து 1957 ம் ஆண்டு, 1962 ம் ஆண்டுத் தேர்தல் களில் ஆட்சிப்பீடத்தை நோக்கித் தாம் நிச்சயமாகவும் நிதானமாகவும் நடப்பதை உலகுக்கு உணர்த்திய அண்ணா, 1967 ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்நாட்டு அரசையும் கைப் பற்றினார். 1957 ம் ஆண்டுத்தேர்தலில் தமிழ்நாடு சட்ட சபையில் 15 இடங்களையும் ஏறக்குறைய 17 லட்சம் வாக்கு களையும் டெல்லி நாடாளுமன்றத்தில் 2 இடங்களையும் கைப்பற்றிய அண்ணா, 1962 ம் ஆண்டு தேர்தலில் சட்ட சபையில் 50 இடங்களையும் சுமார் 34 லட்சம் வாக்கு களையும் நாடாளுமன்றத்தில் 7 இடங்களையும் கைப்பற்றி தி. மு. க. தமிழ் நாட்டின் தலையாய எதிர்க்கட்சி என்ற நிலையை நிறுவினார். தி. மு. க. தினமும் வளர்ந்து கொண் டிருக்கிறது என்ற சேதியை மென்மேலும் இட்டுவந்தன திருச்செங்கோடு, திருவண்ணாமலை நாடாளுமன்ற இடைத் தேர்தல்களின் வெற்றிகள்.

1962 ம் ஆண்டின் தமிழ் நாட்டுத் தேர்தல் முடிவுகள் இந்திய எல்லைகளுக்கு அப்பாலிருந்தவர்களின் கண்களை யும் அகலத்திறக்கவைத்தன வென்றால் ஆளுங்கட்சியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் கட்சியின் அச்சமும், அசூசையும் சொற்பமன்று. திராவிட தேசியத்தின் எழுச்சி எங்கே இந்தியாவைக் கூறு போட்டுவிடுமோ என்றும், போகிற போக்கில் 1967 ம் ஆண்டுத் தேர்தலில் தி. மு. க. தன் பிரிவினைக் கொள்கையுடன் தமிழகத்தின் அரசைக்கைப்பற்றுமானால் அதன் விளைவுகள் பயங்கரமானவையாக இருக்கும் எனவும் இந்திய அரசு அஞ்சிற்று. இதனால், ஒன்று தி. மு. க. தன்பிரிவினைக் கொள்கையை விடுக்க வேண்டும் அல்லது தி. மு.க. வை 1967 ம் ஆண்டுத் தேர்தலில் பங்கு கொள்ளாது தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் உந்தப்பட்ட இந்திய அரசு, பிரிவினைக் கட்சிகளைத் தேர்தலில் போட்டியிடாது விலக்கும் விதியையும் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்தது. திராவிடநாட்டுப் பிரிவினையை தமது கழகத்தின் உயிர் நாடியாகக் கொண்டிருந்த அண்ணாவின் மேதா விலாசத்திற்கு அவர் அரசியல் வாழ்விலேயே ஏற்பட்ட தலையாய சோதனை இதுவாகும். தி. மு.க. வையே ஆணிவேரோடு பிடுங்கி வீசி விடக்கூடிய சக்தியாக தேசிய ஒருமைப்பாட்டுச் சட்டம் பூதாகார உருவெடுத்து நின்றவேளையில், இந்த அறைகூவலைச் சமாளிக்க உணர்ச்சிமயமான வீரம் மட்டுமல்ல, தம்மைச் சுற்றியுள்ள உண்மைகளை ஊடுருவிப்பார்க்கும் விவேகமும் தேவைப்பட்டது.

## அறைகூவலைச் சமாளித்து.....

அகில இந்தியாவும் என்ன ஆகுமோ என துரிதகதியில் அடிக்கின்ற நாடித்துடிப்புடன் மூச்சைப்பிடித்து நின்ற நேரத்தில், அண்ணா பிரிவினைக் கொள்கையைக் கைவிடும் தம் தீர்மானத்தை அறிவித்தார். இதன்படி பொதுக்குழுக் கூட்டத்தில் கழக அமைப்பு விதியும் மாற்றியமைக்கப் பட்டது. திராவிடநாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை அண்ணா கைவிட்டமை சரியானதா தவறானதா என்பது சில வட்டாரங்களில் விவாதத்திற்குரிய தாக்கப்பட்டிருப் பினும் இக்கோரிக்கையை வலியுறுத்துவதைக் காட்டிலும் இதனைக் கைவிடுவதற்கு அண்ணாவுக்கு அதிகமான துணிவு வேண்டியிருந்தது என்பது உணரற்பாலது. காரணம், பிரிவினைக் கொள்கையையே உண்டு ஊட்டம் பெற்றவர்கள் தி. மு. க. தம்பிகள். அவர்களைப் பிரிவினையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடும் கருத்துக்கு இணங்க வைப்பது எளிதானதாக இருந்திருக்க முடியாது. எனினும், கழகத்தின் எந்த ஒரு உறுப்பினனின் முணு முணுப்புக் கூட வெளியே கேட்காது, அண்ணு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டாரென்ருல், அது அண்ணுவின் வானளாவிய தனிப்பட்ட வெற்றியாகும். பிரிவினைத் தடைச்சட்டம் வந்த நேரத்திலேயே இந்தியா மீது சீனு ஆக்கிரமிப்புச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்திய-சீன யுத்தம் அண்ணுவுக்குச் சுலபமான சூழ்நிலையை உண்டாக்கிற்று எனலாம். தாம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டமைக்கு அண்ணு கூறிய காரணங்கள் இரண்டு. அவை அனைவரையும் திருப்திப்படுத்தாமலிருக்கலாம். எனினும், மிகவும் புத்திசாலித்தனமாகப் புலப்படுத்தப்பட்ட சாதுரியமான சமாதானங்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. அவையாவன (1) "தி. மு. க. வாக்குமுறையிலே நம்பிக்கை கொண்டதும் வேட்டு முறையிலே நம்பிக்கையற்றதுமான ஜனநாயக அமைப்பாகும். அது சட்டத்தின் பிடிக்கு அஞ்சி நிலவறைகளில் பதுங்கி வாழும் பயங்கரவாதிகளின் இயக்கமாக மாறுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அது அனுபவசாத்தியமானதுமல்ல" (2) "இந்தியா மீது சீனு மேற்கொண்ட ஆக்கிரமிப்பு, திராவிடநாடு போன்ற சிறிய நாடு தன்னைத் தனித்துக் காத்துக்கொள்ளும் தகுதியுடைத்தோ என்ற சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளது."

தமது தனித் திராவிடத்திற்கு மாற்றுத் திட்டமாக அண்ணு குறிப்பிட்ட 'இந்தியக் குடியரசுக்குட்பட்ட திராவிடக் கூட்டரசு' என்ற தத்துவத்தை அன்னுர் பொருளாதார, மொழி-கலாச்சார, நிர்வாகக் கருத்துகளில் தான் கூறியிருக்க முடியும். ஏனெனில் அரசியல் ரீதியாக இச் சொற்ருெடருக்கு அர்த்தம் இருக்க முடியாது.

## 1967-ம் ஆண்டு.....

திராவிட நாடு கோரிக்கையை அண்ணு கைவிட்டதன் பின்னர் அவர் அகில இந்திய கணிப்புப்பெற்ற தலைவராகப் பரிணமித்தமை ஆச்சரியத்துக்குரியதல்ல; தமிழ் நாட்டில் அன்னுருடைய செல்வாக்கு தளராது மென்மேலும் பரந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் பரவியது வியப்பே. அண்ணு திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டதுடன் தேசியவாதிகளான முது பெரும் தலைவர் இராஜாஜி, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. போன்ருேருடனும், இடதுசாரி இயக்கங்களுடனும் இணக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த இணக்கமே 1967-ம் ஆண்டில் தி. மு. க. வின் தலைமையிலான தேர்தற் கூட்டணிக்கு அடித்தளமாயிற்று. இராஜாஜியின் சிந்தனையும் அண்ணுவின் கைதேர்ந்த சிற்ப வேலைப்பாடும் இணைந்து கட்டியெழுப்பிய கூட்டணிக்கு, ஏனைய கட்சிகளையும் தழுவி அணைத்துச் செல்லும் அண்ணுவின் பண்பாடு பட்டை தீட்டிற்று. தீவிர வலதுசாரியான இராஜாஜியையும் தீவிர இடதுசாரிகளான மார்க்சிச கம்யூனிஸ்டுகளையும் ஒரே நுகத்தில் இணைக்கும் நுட்பமான வேலையை நட்பைப் பேணி ஏனைய தலைவர்களின் நல்லெண்ணத்தை ஈர்க்கும் அண்ணுவைத் தவிர வேறு எவராலும் சாதித்திருக்க முடியாது.

## ஜனநாயகப் புரட்சி

1967-ம் ஆண்டுத் தேர்தலில் அண்ணு தொகுதி ஒதுக்கீடு செய்த நுணுக்கம் நூற்றுக்கு நூறு வெற்றிகரமானதாகும். ''நான் நல்லெண்ணத்துடன் ஒதுக்குவதைத் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்'' எனத் தோழமைக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்து தொகுதி ஒதுக்கீடு செய்த அண்ணர், தன்வலியும் ஏனையோர் வலியும் மாற்ருன் வலியும் சீர்தூக்கிச் செயற்பட்டார். புதுடில்லி நாடாளுமன்றத்திற்கு நிறுத்தப்பட்ட தி. மு. க. வேட்பாளர் அனைவரும் வெற்றி பெற்றமை அண்ணுவின் கணிப்புக்குக் கிடைத்த பாராட்டாகும். பொதுத் தேர்தலில் தமிழ் நாடு சட்டசபைக்கான 234 இடங்களில் தி. மு. க. 138 இடங்களையும் சுமார் 63 இலட்சம் வாக்குகளையும் பெற்றது. தோழமைக் கட்சிகள் 38 இடங்களையும் காங்கிரஸ் 49 இடங்களையும் பெற்றன. 1962 ஆண்டுத் தேர்தலில் முறையே 139 - 50 இடங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ், தி. மு. க. கட்சிகள் 1967-ம் ஆண்டுத் தேர்தலில் முறையே 138 - 49 இடங்களைக் கைப்பற்றியமை தமிழ் நாட்டு அரசியலில் மிகவும் தர்க்கரீதியான ஓர் தலைகீழ் மாற்றம் - ஜனநாயகப் புரட்சி - ஏற்பட்டுவிட்டதை அகிலத்திற்கு உணர்த்திற்று. புதுடில்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற வாக்குப் பதிவில் தி.மு.க. கூட்டணியினர் 36 இடங்களையும் காங்கிரஸ் கட்சியினர் 3 இடங்களையும் பெற்றனர். ஏக இந்தியாவையும்—ஏன், அகிலத்தின் அரசியல் வட்டாரங்களையே — அதிர்ச்சியடைய வைத்த இந்த வெற்றியை 'வேட்டினலல்ல, வாக்குச் சீட்டினல் உருவான புரட்சி' (Revolution,not by bullets, but by ballots) என அண்ணு வர்ணித்தார். இவ்வர்ணனையை இந்திய அரசியல் வட்டாரங்களும் ஆமோதித்து ஏற்றுக் கொண்டன. காங்கிரஸ் வீழ்ச்சியுற்ற மற்றைய மாநிலங்களைப் போலன்றி, கூட்டணி ஆட்சிக் குழப்பங்களுக்கு இடமில்லாது தனித்து ஆட்சி செய்யும் தகுதியை தி.மு.க. வுக்குத் தந்த தமிழ் மக்கள் நிதானமானவர்கள்தாம்.

அரசியல் அர்த்தத்தில் கூறுவதானல், 'ஊமைகளும் ஊனர்களும் குருடர்களும் செவிடர்களுமான வெறும் ஆண்டிகள் என அரசியல் அதிகாரப் பாரம்பரியம் கொண்டவர்களால் கணிக்கப்பட்டவர்கள் 'திருவோடும் தண்டும்' ஏந்தியே ஆட்சிக்கு வந்த அற்புதம் தமிழ் நாட்டில் நிகழ்ந்தது. இந்திய பத்திரிகை உலகினல் இதுவரை எடுத்தெறியப் பட்டவரும் எள்ளிநகையாடப்பட்ட குள்ள உருவத்தினருமான 'கமராக் கவர்ச்சி'யற்ற அண்ணு மின்னல் வேகத்தில் செய்தியாளரின் 'கவர்ச்சிக் கன்னி'யானர் முன்பு காணுத 'கமராக் கவர்ச்சி'யனைத்தும் பத்திரிகை யுலகு இன்று அன்னரிடம் கண்டது. அண்ணு, இருபத்தி நான்கு மணிநேரத்தில் இந்திய அரசியலரங்கின் கதாநாயகனுனர். அண்ணுவின் பெருமையைத் 'திடுதிப்' பென்று அங்கீகரித்த இந்திய அரசியல் வட்டாரங்களின் உணர்ச்சியின் உச்சக் கட்டத்தைக் கூறுவதானல், தென்னக மக்களின் உணர்ச்சிகளை மதிக்கும் வண்ணம் அண்ணுவை இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் (உப ஜனதிபதி) ஆக்க வேண்டுமென்ற பொறுப்புள்ள புதுடில்லி வட்டாரங்களின் ஆலோசனையைக் கூறலாம்.

## சகோதரத்துவம்

அண்ணுவுக்கு எங்கிருந்து வந்ததோ இந்த வலிமை? எப்படிப் பிறந்ததோ இந்தப் பெருமை? தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளில் யார் யாரோ வயிற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவர்களெல்லாம், சாதி, சமய, அந்தஸ்து வேறுபாடின்றி இந்தக் கள்ளமற்ற குள்ள உருவின் அணைப்பிலே 'அண்ணு' என அசந்து கிடக்க, அவர்களைத் 'தம்பி'யெனத் தழுவிக் கொண்டனரே; நண்ணினேரையெல்லாம் உடன் பிறப்பாக்கினரே; அந்தச் சகோதரத்துவத்திலே பிறந்தது இந்த வலிமை. இந்தப் பெரும் பண்பாட்டை அன்று கம்பன் கூற இராமாயணத்தில் கேட்டோம்.

''குகனெடும் ஐவர் ஆனேம்; முன்புபின் குன்று சூழ்வான்
மகனெடும் அறுவர் ஆனேம்; எம்உழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய! நின்னெடும் எழுவர் ஆனேம்
புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை''

இன்று அதனை அண்ணுவிடத்தில் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

— குறள்

# பேச்சாளர் அண்ணு

தமது நாவன்மையையும் வெற்றிகரமான முறையில் அரசியல் மூலதனமாக்கி, தம் நாவின் அசைவிலே நாட்டையே அசைத்திட்ட நாவேந்தர்கள் உலக வரலாற்றிலே வெகுசிலரே. அச்சிலரிலே ஒருவர் தமிழ்நாட்டைத் தம் நாவினுல் அடிமைகொண்ட அண்ணு அவர்கள், ஆற்ளெழுக்கின் அழகுகாட்டும் தம் நாவின் தமிழ்வளத்தால் அறிஞர் சார்ந்த பல்கலைக்கழக அரங்குகள் தொட்டு திறந்தவெளியின் பொதுக்கூட்ட அரங்குகள்வரை கட்டியாண்டார். தம் நாவின் ஆங்கில வளத்தால் அறிவியல் அரங்குகளில் தமிழ் நாட்டின் தூதுவனுயினர்.

அண்ணுவின் பேச்சுத்துறை வாழ்வை இருகூறுகளாகப் பிரிக்கலாம். முதற்கூறில், துடிக்கும் இளமையுள்ளம் தான் கொடுமையெனக் கண்டவற்றையிட்டு வெடிக்கும் எரிமலையாகக் குமுறுவதையும், சமுதாயத்திலே ஓர் புதுமையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியை, புத்துணர்ச்சியைக் காணப் பொருமுலதையும் காணமுடிந்தது. கடைக்கூறில், தாம் கண்ட புதுமைகளை, புரட்சிகளை, புத்துணர்ச்சிகளை முழுமைப்படுத்த விழையும் பொறுமைமிக்கப் பேச்சாளர் அண்ணுவைக் காண்கிறேம். இவ்விரு கூறுகளின் மாறுபாட்டுக்கு பெரியார்—அண்ணு தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்களும் ஓரளவுக்குக் காரணமாகலாம் என்ற ஐதீகம் கவனத்திற்குரியதே. முதற்கூறில் பெரும்பாலும் பெரியாரின் சிந்தனைகளுக்கு வார்த்தைவடிவம் கொடுக்கவேண்டிய பிரச்சாரகராக அண்ணு இருந்திருக்கலாம். பின்னர், தி. மு. க. வைத் தோற்றிய பின் சுதந்திரமான தம் சொந்தச் சிந்தனைகளை தமக்கு இயல்பான தேர்ந்த வார்த்தைகளில் தெளியத்தந்திருக்கலாம். தலைமைப் பொறுப்பும் தம்பியரை வழிநடாத்த வேண்டிய கடமையுணர்வும் பேச்சின் சுருதியை மாற்றத் தூண்டியன போலும். 1956 ம் ஆண்டு தி. மு. க. வை ஒரு தேர்தல் கட்சியாக்கிய பின்னர் இந்த மாற்றம் மிகவும் நிச்சயப்படுத்திக் கொள்ளப்பட்டது.

## சொற்போர் செய்தும்.......

அண்ணுவின் பேச்சுப் பருவத்தின் முதற்கூறு முடிவடையும் கட்டத்தில் நடைபெற்ற கம்பராமாயணம் பற்றிய சொற்போர் அவர் தெரிவித்த கருத்துக்களை ஏற்கமுடியாத ஒருவருக்குக்கூட, அண்ணுவின் வாதத்திறம் காட்டும் வன்மையுடைத்து. தமிழ்நாட்டின் தவப்புதல்வர்களானவரும் தமிழாய்ந்த சான்றேர்களுமான பேராசிரியர் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்களுடன் அண்ணு தமது தமிழ்த் திறமும் கம்பராமாயணத் திறனை ஆய்ந்த இலக்கியத் திறமும் காட்டி வாதாடி, நாவலர் சோமசுந்தர பாரதியாரின் பாராட்டையும் பெற்றுர். குறிப்பாக, சீதா பிராட்டியாரின் சிறப்பை ஆய்ந்த போது, தமது தூய்மையை உலகுக்கு உணர்த்த பிராட்டியார் தீயில் புகுந்த கட்டத்தைச் சுட்டிக் காட்டிஞர் அண்ணு.

> "மனத்திஞல் வாக்கிஞல் மறுவுற் றேனெனில்
> சினத்திஞல் சுடுகநீ தீச்செல்வா என்றுள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் கம்பர். எனவே 'உடலினால் மறுவுற்றனளோ?' என்றோர் மிகுந்த ஆய்வுத் திறனோடு கூடிய ஐயப்பாட்டை அண்ணா கிளப்பினார். 'மனத்தினால் மறுவுறாதகண் உடலினால் மறுவுற்றமைமறுவாகாது' என்ற வன்மையான குறிப்பினால் நாவலர் பாரதியார் அண்ணாவின் வாதத்தை முறியடித்தாராயினும், அன்னார் அண்ணா எழுப்பிய ஐயப்பாட்டை வெகுவாகச் சுவைத்தனர்.

அண்ணாவின் பேச்சுத் துறையின் வெற்றியை அன்னாரது அடுக்குத் தொடரும் அணியழகும் மிக்க சொல்லாட்சி உறுதி செய்தது. வார்த்தைகளுக்காக அண்ணா காத்திருப்பதில்லை, வார்த்தைகள் அன்னாருக்காகக் காத்திருந்தன என்பர். அச்சொற்கள் வெறுமையானவையாக, கருத்து வறுமையுடையனவாக இருக்கவில்லை. பல்துறைப் பொருட்கள் பற்றியும் அன்னார் ஆழமாக அறிந்திருந்தமையாலும், அத்துறைகள்பற்றித் தாம் சுயமாகச் சிந்தித்திருந்தமையாலும், தெளிந்த சிந்தனையினின்றும் கருத்துக்கள் இடையறாது ஊறிக்கொண்டிருந்தன. அந்த ஊற்று கவினுறு வார்த்தைகளாக வடிவம்பெற்றன. ''உள்ளத்தில் உண்மை ஒளியுண்டானால் வாக்கினில் ஒளியுண்டாம்'' என்றனல்லவா பாரதி.

## இடமறிந்து பேசியும்.....

பேச்சுக்கலையின் நுணுக்கமனைத்தும் அறிந்திருந்த அண்ணா, இடம், பொருள், காலம், ஏவல் இவற்றைக் கணித்துப் பேசினார். அறிவாய்ந்த மன்றங்களில் பேசும்போது அதற்கமையப் படியேறி, மேற்கோள்கள் சரித்திரச் சான்றுகள் காட்டிப் பேசினார். சட்டமன்ற, மாநிலங்கள் அவைக் கூட்டங்களில் விவாதிக்கும்போது புள்ளிவிபரங்கள் காட்டிப் பேசினார். மாநிலங்களவையில் மொழிப்பிரச்சினையின் மீதும் வரவு-செலவுத் திட்டவாதத்தின் போதும் அண்ணா ஆற்றிய உரைகள் தலைசிறந்த பாராளுமன்றவாதி ('பார்லிமென்டேரியன்') யின் தகமை பெற்றவையாகும். அதே அண்ணா, கழகக் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் உரையாற்றும் போது படியிறங்கிப் பேசினார். அத்தகைய கூட்டங்களில் குட்டிக் கதைகள், நாடோடிக் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், நகைச்சுவைத் துணுக்குகள் அவர் பேச்சை அணிசெய்தன. இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளன்று அண்ணு உலகெங்கணுமிருந்துவந்த புலமைசால் ஆராய்ச்சி அறிஞர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் புலமைத் தொனியும், அடுத்து அதை முடித்துக் கொண்டு 'பூம்புகார்' சென்று பொது மக்கள் கூட்டத்தில் நிகழ்த்திய உரையின் பாமரத்தொனியும், அவையை அளந்து பேசிய பேச்சாளர் அண்ணு என்பதைக் கூறுநின்றன. இந்த அற்புத ஆற்றலை அன்று செய்தித்துறையினரும் பாராட்டியிருந்தனர்.

அண்ணுவின் அரசியற் பேச்சுக்களைப் போன்றே பொருளியல் வாதங்களும் வலிவுடையனவாகும். 1967ம் ஆண்டு முதலமைச்சர்-நிதியமைச்சர் என்ற முறையில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டமும் ஆற்றிய உரையும் சட்ட மன்றச் சரித்திரத்திலேயே புதிய மரபுகளை உருவாக்கின. நுணுக்கம் நிறைந்த பொருளியற்றுறையின் நுட்பமான கருத்துக்களை உள்ளடக்கி முதன் முதலில் தனித் தமிழில் வரவு செலவுத் திட்டத்தை மாற்றுரும் மெச்சும் வண்ணம் தயாரித்தளித்த அண்ணு, தொடர்ந்து அத்திட்டத்தை விளக்கித் திண்ணிய கருத்துக்களைக் கூறினர். அண்ணுவின் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த திறமையை மட்டுமல்ல, அதனைத் தமிழ் இலக்கியமோ என வியக்கும்படி, வழக்கமாக 'சோம்பலுண்டாகும்' உரையைத் தனித்தமிழில் சுவைபட அளித்த திறமையையும் செய்தித்தாள்கள் பாராட்டியிருந்தன. 1962ம்ஆண்டு ஜூன் மாதம் 20ம்திகதி மாநிலங்களவையில் வரவு-செலவுத்திட்ட வாதத்தில் கலந்து கொண்டு அண்ணுநிகழ்த்திய உரை டில்லி வட்டாரங்ளில் விதந்தோதப்பெற்றதாகும். இது இவ்வவையில் அண்ணுவின் இரண்டாவது உரையே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வுரையின் சில பகுதிகளின் தமிழாக்கம் பின்வருமாறு:—

"..... இவர்களின் திட்டத்தின் தன்மை என்ன; திட்டம் சமதர்ம அடிப்படையில் இருக்கப்போகிறதா அன்றி வேறு விதமாகவா என்று ஆய்வாளர்கள் கேட்டால், இவர்கள் 'இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்துக் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கலப்புப் பொருளாதாரத் திட்டம் தயாரிக்கிறோம்' என்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே! கலப்படம் ஒரு குற்றம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நிதிமந்திரி நாடாளுமன்றத்திலே கலப்படக் குற்றத்தைக் கண்டித்துப் பேசியுள்ளார். பொருளாதாரக் கலப்படம் எத்துணை பெரிய குற்றம். இதற்கான விளைவை இக்கால மக்கள் மட்டுமல்லாமல் வருங்கால மக்களுமல்லவா அனுபவித்தாக வேண்டும்...... 270லட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தான் வேலை கிடைக்கிறது. 200லட்சம் மக்களுக்கு இரண்டு மணி நேரம், 450லட்சம் மக்களுக்கு நான்கு மணி நேரம் வேலை கிடைக்கிறது. மற்ற நேரத்தில் வேலை இல்லை. கோடி கோடியாகப் பணத்தைச் செலவழிக்கிறோம் -மக்களிடமிருந்து பெற்ற பணம்-கடனாகவும் உதவித் தொகையாகவும் வெளியேயிருந்து பெற்ற பணம் -15வருடச் சுய ஆட்சிக்குப்பிறகு, 12வருடத்திட்ட வேலைக்குப் பிறகு, 270லட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரே ஒரு மணி நேரம் தான் வேலை கிடைக்கிறது. இந்த நிலை இருக்கக் காரணம் என்ன? என்ன விளக்கம் இதற்கு?... ''

## தளத்தினின்றும் தழும்பாது.....

இதே உரையின் போது, அண்ணா தமது தளம் எங்கே என்பதையும் மறந்தாரில்லை. அண்ணா தமது போக்கை மாற்றிக் கொண்டால் தாமும் அவருடன் இணைந்து பணியாற்றுவதாகக் கூறிய வலது சாரி கம்யூனிஸ்ட் தலைவர் புபேஷ் குப்தாவுக்கும் இடைமறித்துப் பேசிய ஏனையோருக்கும் அண்ணா பின்வருமாறு கூறினார்.

''என்னுடன் இருக்கவேண்டுமென ஆவலாக இருப்பதற்காக நான் திரு.புபேஷ் குப்தாவுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால், எனது இலட்சியத்தை விட்டுக்கொடுத்து அவரை எனது கூட்டாளியாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை.........ஆனால் திட்டவட்டமாக ஒன்று கூறுவேன். எரிகுண்டு,இழிமொழி எதுவும் என்னை, நான் ஏற்றுக்கொண்டுள்ள புனிதப் பணியிலிருந்து தடுத்து நிறுத்தப் போவதில்லை. அது குறித்துப் பேரப்பேச்சுக்கே இடமில்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புடன் பேசி.......

தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழ் வாழ்வு இவை குறை யிடப்பட்டன, தாழ்த்தப்பட்டன, என்னும் போது மிக வும் உணர்ச்சி வசப்பட்டவராக, தரணியனைத்தும் பரணி பாடிய தமிழனின் பாரம்பரியப் பெருமையனைத்தும் கூறி இன்றுற்ற இழிவினையும் கூறி, தமிழ் மக்களை உணர்ச்சியின் எல்லைக்கு இட்டுச்சென்று நேர்ந்துவிட்ட இன்னலைத் தொட்டுக்காட்டும் அண்ணா, இதர விடயங்களில் மிகவும் பொறுமையுடன் பேசினர். மிகவும் பொறுப்புடன் வார்த் தைகளைத் தெரிந்தெடுத்துத் தொடுத்துப் பேசினர். கேட் போர் மனதில் பதியும்படி பக்குவமாகக் கூறினர். உதார ணமாக; 'படிக்கும்போது அரசியல் வேண்டாம்' என்ற பொறுப்புள்ள கருத்தை மாணவர்களுக்கு அடிக்கடி கூறி வந்த அண்ணா, 26-4-1967ல் செங்குன்றம்உயர்நிலைப்பள்ளி யில் இதனை வலியுறுத்திப் பேசும் போது பின் வருமாறு கூறினர்.

''மாணவ மணிகளாகிய நீங்கள் படிக்கும் காலத்தில் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது. இப்பொழுது அரசி யலில் ஈடுபட்டால்தான் பின்னர் பெரிய தலைவர் ஆகலாம் என்று கருதுவது தவறு. நாற்றை நட்டுவிட்டு குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகுதான் அதனுடைய வேர் நன்ருக வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்று பார்ப்பார்களே தவிர தினசரி பிடுங்கிப் பார்க்கமாட்டார்கள். அப்படிப் பார்த் தால் நாற்றுப் பாழாகிவிடும். அதுபோல, மாணவர்களா கிய நீங்கள் நன்கு வளர்ச்சியடைந்த நாற்றைப்போல படிப்பில் தேர்ச்சி பெற்ற பின்னர் தான் அரசியலில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். நான் கூட பள்ளியில் படிக் கும்போது எந்தவிதமான அரசியல் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டது கிடையாது. ஆனுல் படிப்பு முடிந்த பிறகு நான் பார்க்காத போராட்டங்களா? நீங்களும் என் வழியைப் பின்பற்ற வேண்டும்''

மாணவர்களின் அளவுகடந்த அபிமானத்திற்குரிய ஓர் அரசியல் கட்சியின் தலைவர்; தமது கட்சியின் வலுவுக்கு ஊறுவிளைவிக்கும் இத்தகைய கருத்தைக் கூறினுரென்ருல் அவருக்கு கட்சி நலனைக்காட்டிலும் வளரும் சமுதாயத் தின் நலன் பெரிதாகப்பட்டிருக்க வேண்டும் அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சொந்தப்பலத்தில் மிகுந்த நம்பிக்கையும் வேண்டும். இவை அண்ணுவிடம் இருந்தன. அண்ணுவின் பொறுப் புணர்ச்சிக்குச் சான்று கூறும் இன்னெரு நிகழ்ச்சியை இங்கு கூறுவது பொருத்தமற்றதல்ல. காங்கிரசாரின் வன் செயல்களால் பொறுமையிழந்த ஒரு தி. மு. க. தலைவர் மேடையில் 'காங்கிரஸ்காரரைக் கல்லாலடிக்க வேண்டும்' எனக் கூறினர். மேடையிலிருந்த அண்ணு உடனே எழுந்து சென்று அத்தலைவர் அங்ஙனம் கூறியமைக்கு வருத்தம் தெரிவித்து, அத்தலைவரை — பெருந்தலைவர் என்றும் பாராட்டாது — அவர் கூறியவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு பணித்தனர். குறிப்பிட்ட தலைவரும் அண்ணுவின் ஆணைக்குப் பணிந்தனர்.

## இனிமையாக.......

''இனிய உளவாக இன்னுத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று'' எனக் கருதினுர் போலும். அண்ணு மாற்ரு ரையும் புண்படுத்தாத சொற்களையே பயன்படுத்தினுர். ''மாற்ருர் மனத்தைப் பண்படுத்துவதே தவிர புண்படுத் தக் கூடாது'' என்பது அன்ஞரின் கொள்கை. இத்தகைய பண்பாட்டினுலேயே எதிர்க்கட்சித் தலைவர்களும் அண்ணு விடம் தனிப்பட்ட குரோதங்கள் அற்றவர்களாகவும், அண்ணுவின் நெருங்கிய நண்பர்களாகவும் விளங்கினர். அண்ணு இயன்றவரை எதிர்க்கட்சியினரின் விவாதங்களை நகைச்சுவை உணர்வுடனேயே சந்தித்து முறியடித்தார். உதாரணமாக:-

> ''காமராசர் தி. மு. கழகத்தைப் பார்த்துச் செக்கு மாடுகள் என்ருராம். நாங்கள் செக்கு மாடுகள்தான் செக்குமாடுகளுக்குத் தீனி அதிகம் போடவேண்டிய தில்லை. ஆனுல் அவைகள் பாதை தவருமல் போகும். செக்கில் உள்ள எள் எண்ணெய் ஆகும் வரை ஓயாது சுற்றும். ஆனுல் கோயில்மாடு இருக்கிறதே அது கண்ட இடத்திற்குப் போகும். கண்டதைத் தின்னும். தெரு வில் போவோரை மிரட்டும். பொருள்களை நாசப் படுத்தும். அதைப்போல்தான் காங்கிரஸ் கட்சி.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● 'அண்ணுவின் பல் உடைப்போம்' எனத் தீவிரமான காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் பேசியதையிட்டு வேதனைப்பட்ட தி. மு. க. தம்பியொருவர் கூட்டத்தில் பேசவந்த அண்ணுவிடம் இதுபற்றிப் பேசிக் குறைப்பட்டார். அண்ணு தொடர்ந்து பேசும் போது பின்வருமாறு நிதானமாகக் கூறினர். ''எனக்கு யாரோ பல் கொட்டப் போவதாக தம்பியொருவன் கூறி வருத்தப்பட்டான். நான் கூட மிகவும் வருத்தப்பட்டிருப்பேன் — பத்து இருபது வருடங்களுக்கு முன்பு. இப்போது எந்த மாற்றுக் கட்சித் தோழருக்கும் அந்தச் சிரமம் வேண்டியதில்லை. அவை தாமாகவே வலிய உதிர்கின்றன.''

## எனினும், ஆணித்தரமாக.......

அண்ணு தமது பேச்சுக்களில் எதிர்க்கட்சியினரின் வாதங்களை ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் தர்க்கரீதியாகவும் சந்தித்து நிர்மூலமாக்கினர். உதாரணமாக:-

● தி. மு. க. திராவிடப் பிரிவினை கோரிய நாட்களில், 'தமிழ் நாடு தவிர்ந்த ஏனைய மூன்று மாநிலங்களும் இதற்குத் தயாராகவில்லையே, அங்கு தி. மு. க வுக்கு ஆதரவுகூடக் கிடையாதே' என்ற வாதத்தைப் பின்வருமாறு முறியடித்தார்:- ''ஒரு ரூபாய் திரட்டப் புறப்பட்டவன் கால் ரூபாய் மட்டுமே முதலில் கிடைத்தால் முழு ரூபாயும் முதலில் கிடைக்கவில்லையென்று கிடைத்த கால் ரூபாவையும் வீசி எறிந்து விடமாட்டான். அதைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு மிகுதியையும் திரட்டமுற்படுவான். முடியுமானல், கால் ரூபாய், கால் ரூபாயாகத் திரட்டுவான். இதேபோல், நாலுமாடி வீடுகட்ட நினைப்பவன் இருக்கும் பணத்தைக் கொண்டு இப்போது அடித்தள வீட்டை மட்டும் கட்டுகிருன்; மேலே மூன்று மாடி கட்டுவதற்கு இடம் விட்டுத்தான் கட்டுகிருன். அதே போலத்தான் திராவிடநாட்டுப் பிரச்சினையும்''

● 1953-ம் ஆண்டு அன்று முதலமைச்சராக இருந்த இராஜாஜி கொணர்ந்த குலத் தொழில் கற்கும் கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் தொடக்கிய அண்ணு "திருடன் மகன் திருட்டுத் தொழில் கற்க வேண்டுமா?" என்று கேட்டார்.

● தி.மு.க. இதர தோழமைக் கட்சிகளுடன் அமைத்த தேர்தல் கூட்டணிபற்றி, ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொனியில் பேசுகிறதே; கூட்டணியில் ஒருமைப்பாடில்லை என்ற கிண்டலை பின்வருமாறு முறியடித்தார்: "கையின் விரல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவினதாய்தான் இருக்கின்றது. ஆனல் எதிரியைத் தாக்கும்போது ஐந்தையும் இணைத்து முஷ்டியை மடக்கித்தான் தாக்குவோம். தாக்கப்படும்போது வலி தாங்க முடியாத காங்கிரசார் இதனைத் தாமாகவே அப்போது புரிந்து கொள்வர்".

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் இவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ருர் வள்ளுவர். வள்ளுவன் சுட்டிக்காட்டிய சொல்லின் செல்வன் அண்ணுதான் என்பதை அரசியல் ஆசாபாசங்களினுல் சிலர் ஏற்க மறுக்கலாம். எனினும் தகர்க்க முடியாத சில உண்மைகளை ஏற்றுத்தான் தீர வேண்டும். ஏற்பினும் ஏற்காவிடினும் சரித்திரம் இச் சங்கதிகளைக் கூறத்தான் போகிறது. அவையாவன (அ) தமிழ்கூறும் நல்லுலகைப் பொறுத்தவரை மேடைப் பேச்சை ஒரு தனிக் கலையாக உருவாக்கியவர் அண்ணு. அண்ணுவைப் பின்பற்றி தி. மு. கழகத்திலும் சரி, கழகத்திற்குப் புறம்பாகவும் சரி ஆயிரமாயிரம் இளைஞர்கள் அண்ணுரின் அடியொற்றிச் சென்று இக்கலை கைவரப் பெற்றிருக்கிருர்கள். கல்லூரிக் காளையர், இளைஞர்களைச் சுண்டி இழுத்திட்டதும், சந்த ஓசையும் சிந்து நடையும் மிக்க அடுக்குமொழியாலும் அலங்கார அணியாலுமானதுமான தமக்கே உரித்தான பாணியில் இக்கலையைக் கட்டிக்காக்க அண்ணுர் ஒரு சந்ததியையே உருவாக்கிவிட்டுச் சென்றுள்ளார். தலைசிறந்த பேச்சாளரெனத் தமிழ்கூறும் நல்லுலகில் பொறுக்கி எடுக்கப்படுவோர் அண்ணுவின் உணர்வையோ, உறவையோ பெற்ருரேயாவர் (ஆ) பேச்சுக்கலையைப் பொதுவாழ்வுத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை உண்டாக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதோர் சக்தி மிக்க ஆயுதமாக வடித்துத் தந்தவர் அண்ணு. இதனுல் பேச்சாளன் எனப்படுவோனுக்கு சமுதாயத்தை மாற்றியமைக்கக்கூடிய சிற்பியென்ற கணிப்பையும் சமூகத்தில் பெற்றுத் தந்தார். (இ) தமிழ்கூறும் நல்லுலகிலேயே ஒருவர் பேசக் கேட்பதற்காகவே இலட்சக் கணக்கான மக்களைத் திரட்டிய பேச்சாளர் அண்ணு. அண்ணுவின் பேச்சைக் கேட்பதற்கெனத் திரளும் தொகையினர் வேறு எந்தப் பேச்சாளருக்கும் திரண்டதில்லை. திரைப்படம், நாடகம், நடனம், இசை, இவற்றிற்கென உள்ள சுவைஞர் (ரசிகர்) கூட்டம்போல, சொற்பொழிவைக் கேட்கவென ஒரு சுவைஞர் கூட்டத்தை உருவாக்கியவரே அண்ணுதான்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்
கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்
...... ... ... ........... ........... ..................
இருக்கும்நிலை மாற்றஓர் புரட்சிமனப் பான்மை
ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும்''

— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# எழுத்தாளர் அண்ணா

பேச்சுத்துறையை ஒரு தனிக்கலையாக உருவாக்கிய அண்ணா எழுத்துத்துறையில் தனது செல்வாக்கினைச் சித்தரிக்கும் தனிமரபுக்களை ஏற்படுத்தினார். தாம் தொட்ட துறையனைத்தும் துலக்கி, அத்துறையில் புதிய மரபுக்களைத் தோற்றுவித்து, அம்மரபுக்களைக் கட்டிக்காக்கும் தனிப் பெரும் மண்டலத்தையும் தோற்றி, ஆங்கு தன் வெற்றிக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிடுவதே அண்ணாவின் வழக்காக இருந்தது. அவ் வழக்குக்கு எழுத்துத்துறை விலக்கல்லவே.

அன்னாரது பேச்சுத்துறையைப் போன்றே எழுத்துத் துறையும் இருவயப்பட்டதாகும். தமிழ்நாட்டில் மிக்க வலிமையுடையனவாகிய வைதீக உலகும் மதபீடங்களும் மருட்சியுற்றுப் புரட்சிக்கொடியும், போர்க்குரலும் எழுப்பக் காரணமாகவிருந்த அண்ணாவின் எழுத்துக்கள் பல முதற் கூறில் தீட்டப்பட்டவையாகும். 'பரந்தாமனுக்குப் பகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கக் கடிதம், பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம், ஆரிய மாயை, புராணமதங்கள், தேவலீலைகள்' போன்றவை அண்ணாவின் சிந்தனையின் முதற்கூறுக்குரியனவாகும். இவற்றுள், 'ஆரிய மாயைக் காட்டியமைக்காக சிறைக்கும் 'இலட்சிய வரலாறு' தீட்டியமைக் காக வழக்கு மன்றத்திற்கும் அண்ணாவை அனுப்பி அழகு பார்த்தது சட்டம். அண்ணாவின் அன்றைய சிந்தனையின் பெறுபேறுகள் ஏற்புடைத்தோ என்னவோ, சிந்தனைப் புரட்சிக்காகச் சிறை சென்ற செம்மல்களின் பட்டியலில் அண்ணாரும் இடம் பெற்றார் என்பது மட்டும் உண்மை. அதே போன்று, அண்ணாவின் அன்றைய சமய சம்பந்தமான கருத்தோட்டம் வரன்முறைகளை மீறிய தன்மைத்தாகக் கணிக்கப்பட்டிருப்பினும் (இக்கருத் தோட்டத்திற்கான ஏதுக்கள் வேறு இடத்தில் கூறப்பட்டுள்ளன) அவை மிகவும் கவர்ச்சிகரமானதாகவே வெளிவந்தன. அன்னாரின் மதத்துறைபற்றிய எழுத்துக்கள் மக்கள் மன்றத்தில் பரந்த அடிப்படையிலான எதிரொலிகளையும் வாதப்பிரதிவாதங்களையும் கிளப்பியதுடன், வைதிகஉலகு பகுத்தறிவு உலகு ஆகிய இரு அணிகளையும் எதிரும் புதிருமான சொற்போர் மேடைகளையும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தோற்றுவித்தன. அண்ணாவின் வாதங்களும் வழக்கம்போல வைரம் பாய்ந்தனவாகவே விளங்கின. அவரின் பொதுவாழ்வின் பிற்கூறில் சமய நெறிபற்றிச் 'சுருதி' இறங்கியது என்பதுடன், அரசியற்பணிகளின் பெருக்கத்தின் காரணமாகப் போலும், 'அசல்' அரசியல் தவிர்ந்த ஏனைய எழுத்துப்படைப்புக்களும் அருகத் தலைப்பட்டன.

## ஏட்டாசிரியனாக.......

எழுத்துத்துறையில் அண்ணாவின் கன்னிப்பணி பத்திரிகைத் தொடர்பே. 'சன்டே ஒப்சேவர்' செய்தி ஏட்டின் துணையாசிரியராகப் பணி தொடங்கிய அண்ணா, 'விடுதலை' 'திராவிடன்', 'ஜஸ்டிஸ்' இதழ்களில் ஆற்றிய எழுத்துப் பணி பிறிதோரிடத்தில் கூறப்பட்டுள்ளது. தி. மு. க. தம்பிகளின் கையேடாக விளங்கியதும், அண்ணாவின் ஆணைகளை நாட்டின் பட்டிதொட்டியெங்கும் வாழும் கழகத்தவர்க்கு இட்டுச் சென்றதும், தி. மு. க. வின் வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கியதுமான 'திராவிட நாடு' வார ஏடு தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. க. வின் தலையாய படைக்கலனாக, அண்ணாவின் கைவண்ணமும் கருத்துவண்ணமும் தாங்கி வெளிவந்தது. அண்ணாவை அடியொற்றிய தம்பிகள் போல, அண்ணாவின் 'திராவிட நாடு' ஏட்டை அடியொற்றி தம்பிகளின் ஏடுகள் பல துணைப்படைக் கலன்களாகத் தோற்றின. 'மன்றம்', 'முரசொலி,' 'திராவிடன்', 'போர்வாள்', 'தீப்பொறி', 'தனியரசு', 'தென்னகம்', 'தென்றல்', போன்ற இன்னோரன்ன தம்பியரின் ஏடுகள், அண்ணாவால் வெற்றிகரமாகவும், புதுமையாகவும் கையாளப்பட்ட அடுக்குத் தொடரில், அணி நடையில் எழுதப்பெற்றன.

தம் பேச்சின் வளமொப்பவே எழுத்து வளத்திலும் ஏற்றம் பெற்றிருந்த அண்ணாவுக்கு பத்திரிகைத் துறையிலிருந்த ஈடுபாட்டை உணர்த்த இரு அம்சங்கள் போதுமானவையாகும்.

- பெண்களும் நாட்டு நடப்புகளை அறிந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தினாற் போலும், அந்தி நேரத்தில் சிலர் கூடி பல பொருள் குறித்து 'அரட்டை' அடிப்பதாக ஒரு பகுதியை 'திராவிட நாட்'டில் வெளியிட்டார். அதற்கு 'அந்திக் கலம்பகம்' என மகுடமிட்டார். நந்திவர்மன் பற்றிக் கூறும் 'நந்திக் கலம்பகம்' நாம் அறிந்ததே. 'கலம்பகம்' என்றால் பல்வகை மலர்களால் தொடுக்கப் பெற்ற மாலையென்பது காண்க.

- அன்னாரின் செய்தித் தலைப்புகள் தாக்கமானவையாகும். உதாரணமாக, இந்தி மொழிப் பிரச்சினையில் அன்றைய மைய அரசின் அமைச்சர் சி. சுப்பிரமணியம் உறுதி காட்டாமையைக் கண்டித்தும், பழமை சான்ற தமிழும் வங்க மொழியும் ஆட்சி மொழிகளாக வேண்டுமென்று வங்காளத்தில் பேசப்பட்டமையைச் சுட்டிக் காட்டியும், "கொங்கு நாடு கேட்காததை வங்க நாடு கேட்கிறது" எனத் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டார். அவ்வாறே 'அத்தைக்கு மீசை முளைத்துவிட்டது' (கேரளத்தில் இடதுசாரிகளின் வெற்றி) 'ஏழை சொல் அம்பலம் ஏறிவிட்டது' போன்ற தலைப்புக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் அண்ணு

அண்ணுவின் எழுத்துப் பணி ஏட்டாசிரியர், கட்டுரை ஆசிரியர், கதாசிரியர், நூலாசிரியர், நாடகாசிரியர், கவிஞர் எனப் பல்துறைப்பட்டனவாகும். கவிஞராக அண்ணு பரிமளிக்க முடியவில்லை. கவித் துறையில் அண்ணுர் ஈடுபாடு காட்டாது தேவையையொட்டியே கவிதை யாத்தார். 'திராவிட நாடு' இதழ்களின் முகப்பை அணி செய்யக் கவிதைகள் கிடைக்காத போது தாமே யாத்து இட்டுக் கொண்டார். அவ்வப்போது அரசியல் கட்டுரைகளின் இடைவெளியை நிரப்புதற்காக சிறு கவிதைகளை ஆக்கியுள்ளார். உதாரணமாக, வேலைக்கார முனியனும் முத்தம்மாவும் தம் எஜமானரின் அரசியலை ஆய்கிருர்கள். ('திராவிட நாடு' 26-11-1961)

முனியன் : "மண்டலக் கங்கிரஸ் தலைவரடி
மந்திரிக்கும் அவர் சொந்தமடி
கதரும் கட்டிப் பழக்கமில்லை
கண்ட பயல்களைக் காண்பதில்லை
கண்டிப் பான பேர்வழி நான்
என்றும் சொன்ஞர் எஜமானர்."

## கட்டுரையாளராக.....

கட்டுரையாசிரியராக அண்ணு மிகவும் வெற்றிகரமாக நடைபோட்டார். அண்ணுரின் சமயநெறி ஆய்வுக் கட்டுரைகள் போக, தமிழ் வாழ்வுக்குப் புறம்பானதென எண்ணிய இலக்கியங்கள் பற்றிய ஆய்வுரைகளின் நோக்கமும் தாக்கமும் வேறிடத்தில் விளக்கப்பட்டுள்ளன. அண்ணுவின் அரசியல் கட்டுரைகள் திண்ணியவை. தாம் எடுத்துக் கொள்ளும் கருத்தை நிறுவும் சக்தி மிக்கவை. எடுத்துக்காட்டாக, தாம் பிரிவினைவாதியாக இருந்த நாட்களில் அண்ணு 'தேசியம்' பற்றித் தந்த தெளிவுரையைப் பார்ப்போம். ('திராவிட நாடு' 18-9-1960)

"......தெருக் கோடியில் உள்ள வைக்கோற் போரில் தீப்பிடித்து எரிகின்றபோது அதைக் காணும் நல்லவன் ஒருவன் 'ஐயோ-நெருப்பு-நெருப்பு' என்று கூக்குரல் எழுப்புவது உண்டல்லவா?' 'வாருங்கள் அணைப்போம்' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பதில்லையா? அந்தக் கூக்குரலும் அழைப்பும்தான் பாரதியின் பாடல்கள். வீர சுதந்திரம் வேண்டி நின்ற காலத்தில் எழுந்த போர் முழக்கங்கள் அவை. அந்தக் காலத்தில் அவை பொருள் பொதிந்த அறிவுரைகள். நெருப்பு நீருனதும் அணைக்க வந்தோர் அனைவரும் அவரவர் இல்லம் ஏகுவர்..... அவரவர் இல்லம் ஏகுவதைக் கண்டு 'பார்த்தீர்களா — முன்பு நாம் பிரிந்திருந்தோம்; அதனுல் நெருப்புப் பிடித்துவிட்டது. அனைவரும் சேர்ந்து அதனை அணைத்தோம். இப்போது நீங்கள் மறுபடியும் பிரிந்து செல்லத் தொடங்குகிறீர்கள். மறுபடியும் நெருப்புப் பிடித்துக் கொண்டால்......' என்று ஒருவன் பேசுவதாக வைத்துக் கொள்வோம். மற்றவர்கள், "... பேதையே எப்போது இணைந்திருக்க வேண்டும், எப்போது பிரிந்திருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்" என்று சொல்லிச் செல்வர். அதுதான் முறை......"

"... மன்னும் இமய மலை எங்கள் மலையே' என்பதிலிருந்து இந்த வரி வேருெருவன் முன் பாடிக் காட்ட வேண்டியது என்பது விளங்கவில்லையா?"

"......நாடகத்தில் வேடம் போடும்போது 'யாரடா நீ என் முன் வந்தவன்' என்று அரங்கத்திலே கேட்கும் கேள்விக்கு 'நான் தூதுவன், சேவகன்' என்று ஏதோ ஒன்றை விடையாகச் சொல்லலாம். நாடகம் முடிந்த பின்பும் 'நான் தூதுவன்' என்ருல் அது நகைப்புக்கே இடமாகும். இன்னும் நாடக மயக்கம் கலையவில்லை என்றே சொல்வர்... "

## தம்பிக்கு......

அண்ணுவின் ஆக்கப்படைப்புகளில் அன்னுர் 'திராவிட நாடு' இதழ்களில் 'தம்பிக்கு' எழுதிய கடிதங்கள் மிகவும் காத்திரமானவையாகும். தம்பியரின் சிந்தனைகளை நெறிப்படுத்தியன என்ற மட்டிலன்றி, அன்ருட உலக, உள்நாட்டு அரசியல்பற்றிய ஆய்வுரைகள் என்ற முறையிலும் இக்கடிதங்கள் மிகவும் செல்வாக்குமிக்கவையாகும். இக்கடிதங்களை அன்னுர் மிகவும் அனுபவித்து எழுதினுர் என்பது பெறப்பெற்ரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி—சொல்லும் போதே சுவைதரும் 'தம்பி' என்ற இந்தச் சொல்லை ஒரு திங்களாகச் சொல்ல இயலாமற் போய்விட்டதை எண்ணி எண்ணி, இனிப்பூட்டும் அந்தச் சொல்லை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லிச் சுவை பெறலாமா என்று தோன்றுகிறது.'' (திராவிடநாடு 20-10-1961)

இத்தகைய இனிய தன் தம்பிக்கு தன் கடிதங்களில் பொருளியல், இலக்கியம், அரசியல், வரலாறு, இன்னோ ரன்ன துறைகளனைத்தையும் தொட்டு வாராவாரம் விளக் கம்தந்தார். எடுத்துக்காட்டாக 'திராவிடநாடு' 8-5-1960 இதழைப் பார்ப்போமா?

அவ்விதழில், ஒட்டாண்டிகளின் வரிப்பணம் எங்ஙனம் ஊதாரித்தனம் செய்யப்படுகிறது எனக் காட்டியவர், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவனையும் காட்டி மணிமேகலை சென்றடைந்த ''வெயில் நுழைபு அறியா குயில் நுழை பொதும்பர்'' காட்டி, விடுதலை வேட்கை குமுறுகின்ற ஆபிரிக்க நாடுகளுக்கு இட்டுச் செல்கிறார். அங்கு சிறையிலி டப்பட்ட ஆபிரிக்கத் தேசிய எழுச்சியின் சின்னம் மங்கா லிரோவைக் காட்டுகிறார். ''சிறையில் தள்ளப்பட்ட மற் றோர் வீரன் வெளியே வந்து வீரமுழக்கம் செய்கிறான். காணலாம் வா தம்பி.'' எனக் கை பற்றி அழைத்துச் சென்று எழுச்சியுற்ற நயாசாலந்தின் தலைவன் டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டாவைக் காட்டுகிறார். பின்னர் விடு தலை பெற்ற சிறிய நாடுகளான டோக்கோலாந்து, மட காஸ்கார் இவற்றின் விடுதலைக் கிளர்ச்சிகளையும் வீரத்தியா கங்களையும் வாய் நிறைந்த ஆர்வத்துடன் கூறிவிட்டு,'' ... ... பிரான்சு ஆசை காட்டிப் பார்த்தது, அச்ச மூட்டிப் பார்த் தது; மடகாஸ்கார் பணிய மறுத்தது. விடுதலை பெற்றுவிட் டது. தீவு தம்பி, தனி அரசு ஆகிறது; திருவிடம் தேம்பித் தவிக்கிறது. ஏன்?'' எனச் சிந்தனையைக் கிளறி, ''கேவலம், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடக் கூடத் திராணியின்றி இருக்கிறதே தமிழ்நாட்டின் காங்கி ரஸ் ஆட்சி'' என மனமுடைந்து கடிதத்தை முடிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லும் சுவையும்......

வேற்றுமையால் கழகத்தை விட்டுச் சிலர் பிரிந்து சென்று காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டமையையும் அதைக் காங்கிரசார் நன்கு பயன்படுத்திப் பிரச்சாரம் செய்ததையுமிட்டு அண்ணு 'தம்பி'க்குத்தீட்டிய கடிதமொன்றில் குறிப்பிடுவது சுவையுடைத்து.

" முத்தமிழ் வித்தகர், சண்டமாருதம், சொற்கொண்டல், என்றெல்லாம் சிறப்புப் பெயர்கள் தந்து பேச்சாளர்களின் தரத்தை மக்களுக்கு அறிவிப்பார்கள் — முன்பெல்லாம். இப்போது காங்கிரஸ் மேடையில் முதல்தரமான பேச்சாளருக்கு என்ன அடைமொழி என்கிருய்? தடியடிபட்டவர், தண்டியாத்திரை போனவர், உப்புக் காய்ச்சியவர், கதர் விற்றவர், கள்ளுக்கடை மறியல் செய்தவர், காந்தி பஜனைக் கூடம் கட்டியவர், என்றஇந்தப்பெயர்களா? அல்லவே அல்ல. தி. மு. க. வை விட்டு விலகியவர் — இதுதான் முதல்தரமான அடைமொழி: ஆமாம், தம்பி. பெருங்காயம் இருந்த பாண்டமல்லவா, தி. மு. கழகத்தை விட்டு விலகியவர்! அந்த மணம்தான் இப்போது நல்ல விலைக்கு விற்கிறது, காங்கிரஸ் வட்டாரத்தில்....." (திராவிட நாடு 10-12-1961)

" .....தம்பி, ஓசை கேட்டாலே விசையொடிந்த தேகத்திலும் வீரம் வந்து சேரும். கூறட்டுமா?" எனக் கேட்டுக் கலிங்கத்துப்பரணியின் காட்சிகளையும் ஏனைய இலக்கிய மாட்சிகளையும் அண்ணு காட்டும் கடிதங்களும் உளவாயினும் அவை பெரும்பாலும் அரசியல் நயம் காட்டவே. அண்ணுவின் கடிதங்கள் தமிழ்மொழிக்கு மெருகூட்டின என்பதில் ஐயப்பாடு தெரிவிக்கப்படினும், தமிழ் கூறும் நல்லுலகின் சிந்தனைக்கு மெருகூட்டின என்பதை மறுப்பது கடினமே. 1962ம் ஆண்டுத் தேர்தலில் கழகத்தவர் ஐம்பதின்மர் வெற்றிவாகை சூடியும் தாம் தோல்வியுற்றது கண்டு மனம்தளர்ந்த தம்பிக்கு அண்ணு எழுதிய கடிதத்தில் (திராவிடநாடு— 18-3-1962) ஜெருசலம் நகருக்காக நடந்த புனிதப் போரில், றிச்சர்ட் மன்னனின் படையணியினர் ஜெருசலம் நகருக்குள் நுழையலாம், மன்னன் றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ட் நுழையக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்ட தைச் சுட்டிக்காட்டுகிறார். 'என்னை ரிச்சர்ட் நிலைக்கு நான் உயர்த்திக் கொள்ள இதனை எழுதவில்லை. இதனைப் படித்து விட்டு மாற்றாரும் தம்மை சாலடீனுடன் ஒப்பிட்டுக் கொள்ள வேண்டாம்' என்கிறார். தமிழ்நாட்டு அரசியலில் அண்ணா இன்றி இத்தகைய தரமான உவமைகள் தலை யெடுத்திருக்குமோ என்பது சந்தேகமே.

அண்ணாவின் ஆசிரியத்தலையங்கங்கள் இறுக்கமானவை. தமது திராவிடநாட்டுக்கான கோரிக்கையை இந்திய எல் லைக் கோடுகளைத் தாண்டிய உலகப்பிரச்சினையின் மட்டத் திற்கு உயர்த்த வேண்டுமென்ற உற்சாகத்தை அண்ணாின் தலையங்கங்களிலே காணமுடிந்தது. சர்வதேச அரங்கிலே விடுதலைக் கிளர்ச்சி நடாத்திய நாடுகளைப்பற்றியெல்லாம் அவர் தோழமையுறவுடன் எழுதியமை இந்த உற்சாகத்தின் மிகையான தோற்றமே. 'அல்ஜீரிய விடுதலை', 'அல்ஜீரி யாவும் திராவிடநாடும்,' 'தங்கனிகா விடுதலை,' 'காமன் வெல்த் கேலிக்கூத்து'—இவைபோன்ற மகுடமிடப்பட்ட தலையங்கங்கள் இதுவிடயத்தில் நோக்கற்பாலவை.

## நாவல்கள், நாடகங்கள்.....

கதாசிரியர் அண்ணாவின் 'நாவல்'கள் முழுமைபெற்ற பெருங்கதைகள் தாம் எனினும் சோஷலிச நாடுகளின் இலக்கியங்களைப் போன்று இவையும் பிரச்சாரப் பிடியினின் றும் விடுபட முடியவில்லை. இதனால், அரசியல் வயப்பட்ட வாசகர் உலகமே அண்ணாவின் நாவல்களையும் கவர்ந்து உண் டது. அரசியலுக்கு அப்பாற்பட்டதும், அரசியல் வாசகர் உலகைக் காட்டினும் பரப்பில் மிகவும் குறுகியதுமான பொழுதுபோக்கு வாசகர்களுக்கு அண்ணாவின் நாவல்களைப் படிக்கவும் திறனாயவும் வாய்ப்பில்லாது போயிற்று. அண்ணா வைப் பின் தொடர்ந்த திரு. மு. கருணாநிதியின் சிறுகதை களுக்கும் ஏற்பட்ட இந்நிலை, ஏனோ இதர கழக எழுத்தா ளர்களான திருவாளர்கள் ஆசைத்தம்பி, இராதாமணாளன், தில்லைவில்லாளன் போன்றோரின் படைப்புகளுக்கு ஏற்பட வில்லை. அண்ணாவின் நாவல்களில் 'இரங்கூன் இராதா' மூட நம்பிக்கைகளையும் பத்தாம் பசலித் தத்துவங்களையும் படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் காட்டி சுவையாகப் பின்னப் பெற்ற கதையாகும். இந் நாவலுக்குக் கிடைத்த வரவேற்பு, இதனை திரைப்பட மாகத் தயாரிக்கவும் திரைப்படத்துறையினரைத் தூண் டிற்று. 'பார்வதி பி. ஏ.' என்ற நாவல் ஆடம்பர வாழ்வின் வெறுமையைக் காட்டும் நவீனமாகும். அண்ணு கதையின் கருப்பொருளைக் கொண்டே கட்டுரைகள் தீட்டியமையும் உண்டு. பிரச்சாரகன் பேசு பிடிக்கும்போது எழும் 'திணை மயக்கங்களை' இவை புலப்படுத்துவனவாகும். கிருஷ்ண லீலா, வள்ளி திருமணம், பாமா விஜயம் போன்ற இன்னோ ரன்ன அண்ணுவின் சிறுகதைகள் பல முழுமையானவையா யினும் அவற்றின் தலைப்புக்கள் அன்னரின் பிரச்சாரப் பான் மையைப் புலப்படுத்துவன.

ஒரு நாடகாசிரியன் என்ற முறையில் அண்ணுவின் படைப்புக்கள் அத்தனையும் முத்தனையவாகும். நாடகாசிரி யனுக்குரிய உத்திகள் அத்தனையும் காட்டி அண்ணு சித்த ரித்த நாடகங்கள் தமிழ் நாட்டின் மாறுபட்ட கருத்துக் களங்களிலும் அண்ணுவுக்கு மதிப்பைத் தேடித்தந்தன. மாற்றுக் கருத்தினரும் அண்ணுவின் படைப்புக்களை மதிப் பீடு செய்ய முன்வந்தமை அன்னரின் நாடகங்களின்பால் அவர்கள் கொண்ட ஈடுபாட்டையே காட்டுவதாகும். அண்ணுவுடன் அரசியலில் அன்று முரண்பட்டிருந்த பேராசி ரியர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'ஓர் இரவு' நாட கத்தைப் பார்த்துவிட்டு 'இங்கும் ஒரு பெர்னுட்ஷோ இருக் கிருர்; இப்சனும் இருக்கிருர்' என வியந்து வாயாரப் புகழ்ந் தாரெனின் அண்ணுவின் புலமை அற்புதமானதாகும். 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்', 'நீதி தேவன் மயக்கம்', 'சந்திரமோகன்', 'சந்திரோதயம்', 'வேலைக்காரி', 'காதல் ஜோதி' போன்ற நாடகங்கள் நாடக உலகில் அண்ணுவின் வெற்றிக் கொடியை நிலைநிறுத்தின. இவற்றுள் 'வேலைக் காரி'யும் 'ஓர் இரவு'ம் திரைப்படங்களாக்கப்பெற்று திரை யிலும் வெற்றியீட்டின.

## நூலாசிரியராக......

அண்ணுவின் எழுத்துக்கள் பேச்சுக்கள் இவற்றிற்கு பொதுமக்கள் மத்தியிலிருந்த செல்வாக்கையும் வரவேற் பையும் ஏதுவாகக் கொண்டு, ஏறக்குறைய அவர் கூற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எழுத்துக்கள் அத்தனையும் நூல்வடிவம் பெற்றுள்ளன. ஒரு தனி எழுத்தாளனின் எண்ணங்களை நூலாக்கி வெளியிட வெளியீட்டாளர் பலர் பலத்த போட்டியிட்டனரென்றால் அந்தப் பெருமை அண்ணுவுக்குரியதாகும். அன்னுரின் நூல்களை வெளியிடுதற்கென்றே சில பதிப்பகங்கள் தோன்றியமையும் உண்டு. அண்ணு ஏடுகளில் எழுதியவை மேடைகளில் பேசியவை உட்பட, நூலாசிரியன் என்ற பெற்றியில் வெளிவந்த அன்னுரின் நூல்களை நான்கு வகையினதாகப் பகுக்கலாம்.

1. தம்பிக்கு கடிதங்கள் (இரண்டு பாகங்கள்), பணத்தோட்டம், இலட்சிய வரலாறு, குமரிக்கோட்டம், கற்பனைச் சித்திரங்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னர், விளக்காது விளையும் கழனி, வளம் காண வழி, உரோமாபுரி இராணிகள், தமிழர் மறுமலர்ச்சி, தேன் துளிகள், போன்றவை சமூக, பொருளியல் அரசியல் பிரச்சினைகளை ஆயும் கட்டுரைகளும் கட்டுரைக் கோவைகளுமாகும்.

2. கம்பரசம், பரந்தாமனுக்குப் பகிரங்கக் கடிதம், பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம், ஆரியமாயை, தேவலீலைகள், புராண மதங்கள், வர்ணுச்சிரமம், மாஜி கடவுள்கள் போன்றவை சமய நெறி, புராண, இதிகாசங்கள்பற்றி அண்ணு ஒரு காலத்திற் கொண்டிருந்த கருத்தின் அடிப்படையிலான ஆய்வுரைகளும் மதிப்பீட்டு விளக்கங்களுமாகும்.

3. ஏ தாழ்ந்த தமிழகமே!, தீ பரவட்டும், நாடும் ஏடும், மேதின விழா, உழவர் திருநாள், தீண்டாமை, மகாத்மா காந்தி, நூல்நிலையங்கள், வீட்டுக்கொரு புத்தகசாலை, சமதர்மம் போன்றவை, வானெலியில் ஆற்றிய உரைகள் உட்பட பல்வேறு இடங்களிலும் நிகழ்த்திய சொற்பொழிவுகளாகும்.

4. பார்வதி பி. ஏ., இரங்கூன் இராதா, கலிங்கராணி, காதல் ஜோதி, அண்ணுவின் ஆறுகதைகள், கபோதிபுரத்துக் காதல் போன்றவை கதை, நாடகம், சிறுகதைத் தொகுதி ஆகியனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்துறையிலும் அண்ணு தமக்கெனத் தனி மண்டலமொன்றை உருவாக்கி, அதில் தம் பெயரைப் பேணும் ஓர் சந்ததியை விட்டுச் சென்றுள்ளார். அண்ணுவின் குலக்கொழுந்துகளான கதாசிரியர், கட்டுரையாசிரியர், நாடகாசிரியர், கவிஞர் என்போர், ஒன்று அண்ணுவிடம் பாடம் கேட்டுப் பயின்ருேராவர், அல்லது அண்ணு விதைத்திட்ட உணர்விலே விளைந்தோராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்
சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்"
— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# கலைத்துறையில் அண்ணு

கலைஞர்கள் சமூகத்தின் கண்களில் கேலிக்குரிய ஓர் வர்க்கமாகக் கணிக்கப்பட்ட நாட்களிலேதான் கலையுலகுடன் தொடர்பு கொண்டார் அண்ணு. நலிந்தும் மெலிந்தும் நிந்திக்கப்பட்டும் சமுதாயத்தின் சாக்கடை வாய்க்கால்களின் ஓரங்களிலே ஒண்டி வாழ்ந்த கலைஞர் வர்க்கம், அண்ணு மறைந்த காலகட்டத்தில் சட்டங்கள் செய்யவும் பட்டங்கள் ஆளவும் தக்க செல்வாக்கு மிக்க ஓர் சக்தியாக பரிணமித்தது என்ருல், இத்தகைய வளர்ச்சியை, சமுதாயப் புரட்சியை உருவாக்கிய சிற்பி அண்ணுவல்லவா? கூத்தாடிகள் எனக் கிண்டல் செய்யப்பட்டோரைத் தன் கூட்டாளிகள் ஆக்கிக் கொண்டார். நடத்தை கெட்டோரென நையாண்டி செய்யப்பட்ட திரைப்படக் கலைஞர்களைத் தம் நண்பர்களாக்கிக் கொண்டார். செய்தித்தாள்களைப் போன்று, நாடகங்களையும், திரைப்படங்களையும் சமுதாயத்தை உருவாக்கும் சாதனங்களாக்கினுர். திரைப்படங்களிலும் நாடகங்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் சமூக, பொருளியல், அரசியல் பிரச்சினைகளை கருப் பொருளாக்கி, அவற்றை பாத்திரப் படைப்புகளின் வாயி லாக மக்கள் மன்றத்தில் அலசி ஆராய வைத்தார். இத ஞல் நாடோடி வாழ்க்கை நடாத்திய நடிப்புக் கலைஞர்கள் சமுதாயத்தின் காவலர்களாக, சமுதாயப்புரட்சித் தூது வர்களாக மாறினர். முடிசார்ந்த மன்னரைப் பற்றியும் முனிவர்களையும் தேவர்களையும் பற்றியும் மட்டுமே அரங்கு களிலே கண்டு கண்டு களைத்திருந்த மக்கள் மத்தியிலே, குடி சார்ந்த விவசாயி, உடல் காய்ந்த தொழிலாளி, வாழ்க்கை யில் நொடிந்தவன், வழுக்கி விழுந்தவள், இன்னேரன்ன அன்ருட மனிதர்களின் அல்லல்களையும் ஆசாபாசங் களையும் சித்தரிக்கும் காட்சிகளைக் காண வழி சமைத்தார். இதனுல், கலைஞர்களும் தம்மை வெறுமனே களைக்கூத் தாடிவிட்டுக் கலைந்து செல்வோராகக் கருதாது சமுதாயத் தின்பால் தமக்கொரு பொறுப்பும் கடமையும் இருக் கின்றனவென உணர வைத்தார்.

## கலையில் அரசியலா?

திரைப்படங்களையும் நாடகங்களையும் பிரச்சார சாதனங்களாக்கி அதில் வெற்றிகண்ட தலைமகன் அண்ணு ஆவார். கலையில் அரசியலைப் புகுத்துவதா? எனக்கர்ச்சித்த மாற்றுக்கட்சியினரிடம் அண்ணு ஆணித்தரமாகக் கேட் டார்;'' கலை கலைக்காகவன்றி மக்களுக்காகவல்லவோ? அர சியல் அரசியலுக்காகவன்றி மக்களுக்காகவல்லவோ? இரு மக்கள் சாதனங்களும் இணைவதிலே தவறென்ன?'' என்ருர். கலைஞர்களை சமுதாயத்தின் கண்கள் என்ற நிலைக்கு உயர்த் திய அண்ணுவினுல் ஈர்க்கப்பட்ட கலைஞர்கள் பலர் அண்ணு ரின் இயக்கத்திற்கு வலிமை தருவதைக் கண்டு மாற்றுக்கட் சியினர் மனம் பதறினர். கலைவாணர் என். எஸ். கிருஷ் ணன், கே. ஆர். இராமசாமி, டி. வி. நாராயணசாமி, எம்.ஜி ராமச்சந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன் போன்ற இன் னும் பல நாடகத்துறைத் திரைத்துறைக் கலைஞர்கள் அண் ணுவின் பாசறைக்கு அரணுயினர். அண்ணுவின் சேதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகின் எட்டுத்திக்கும் இட்டுச் சென்ற னர். இதனுல், 'கலைஞர்க்கும் அரசியலா?'' எனக் காழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றனர் மாற்றார். ''ஏன், கலைஞர்கள் மனிதர்களில்லையா? அவர்கள் மனிதசமுதாயத்திற்கு அப்பாற்பட்டோரா? அவர்களுக்கு வயிறு பசிக்காதா? வாழ்க்கைப் பிரச்சினைகள் இருக்காதா?'' என நிதானமாகக் கேட்டார் அண்ணா. மாற்றுக்கட்சியினர் நாவடங்கினர். அதுமட்டுமல்ல, தாமும் இத்துறைகளைப் பிரச்சார சாதனங்களாக்க முற்பட்டனர். தமது இயக்கத்திற்குச் சார்பான கலைஞர்களைக் கொண்ட அணிகளையும் மாற்றுக்கட்சியினர் உருவாக்கினர். இம் மனமாற்றம் திரைப்படத்துறையில் அண்ணா நிலைநிறுத்திய பெற்றிவாய்ந்த வெற்றியாகும்.

## நாடகத்தில்........

நாடகத்துறையில் அண்ணாவின் ஈடுபாடு நாடகாசிரியன் என்ற முறையில் மட்டுமல்ல. கலப்புத் திருமணம், சமத்துவ சமுதாயம், சீர்திருத்தத் திருமணம் போன்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களைத் தமது எழுத்தாணியினால் அழுத்தமாக உழுது, உழுத்துப்போன சமுதாயத்தின் எண்ணத்தை பரிபக்குவம்செய்ய நாடகங்கள் படைத்த அண்ணா, தாமே அரிதாரம் பூசி வேடம்தாங்கி நடித்த காட்சி, அரசியல் உலகு காணாத மாட்சியன்றோ? தமிழகத்தின் அரசியல் வானிலே ஒளிவிடும் ஓர் துருவநட்சத்திரம், லட்சோபலட்சம் மக்களின் தானைத்தலைவன், எம். ஏ. படித்தவர், கற்றோர் மன்றத்தில் கணிக்கப் பெறுபவர், 'கூத்தாடி'கள் கேலிக்குரியராகக் கணிக்கப்பட்ட அற்றைநாட்களில், தம் சமூக அந்தஸ்தைக் கருத்தில் கொள்ளாது தாமே கூத்தாடியாக மாறினாரெனின் அந்தப் பெற்றிமைதான் பேசுந்தரத்ததோ? இச்சாதனை அண்ணாவின் சாமான்ய மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பரந்த உணர்வுகளின் பான்மை கூறும். மூக்குமுனைக்கு அப்பாலே நோக்கிய உயர்ந்த மதிப்பீடுகளின் மாண்பு கூறும். தம் கருத்துக்களை நிலை நிறுத்துவதற்கு எந்த மட்டத்திற்கும் செல்லத் தயார் என எடுத்தியம்பும் அண்ணாவின் இலட்சியத் துடிப்பின் ஆழம் கூறும்; வேகம் கூறும். அதுமட்டுமன்று, 'சந்திரமோகன்' நாடகத்தில் காகபட்டராகவும், 'சிவாஜி கண்ட இந்துராஜ்யம்'நாடகத்தில் அரசகுருவாகவும், 'நீதி தேவன் மயக்கம்'நாடகத்தில் இராவணனாகவும் அண்ணா காட்டிய நடிப்பின் தேர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டபணியனைத்தும் துலங்கவைக்கும் அண்ணாவின் அதிசயப் பேராற்றல் கூறும். சமூக அந்தஸ்துப் பெற்ற அண்ணா, சமூகத்தின் அழுக்கடைக் கணவாய்களில் உழல்கின்ற 'கூத்தாடிகளின்' வர்க்கத்திற்கு மட்டுமே உரியதெனக் கருதப்பட்ட நடிப்புத்துறையில் தாமே ஈடுபட்டதனால் இதர நடிகர்களின் அந்தஸ்தும் நாடகத்துறையின் மதிப்பும் மேம்பட்டன.

## திரைப்படத்தில்.......

நாடகத்துறையில் தமது தனி முத்திரையை ஆழப் பொறித்திட்ட வித்தகர் திரைப்படத்துறையிலும் தம் கைவண்ணமும் கருத்துவண்ணமும் சேர்த்துக் கலைப்புரட்சி செய்யத் தவறவில்லை. இத்துறையிலே அண்ணா எண்ணத்திலும் எழுத்திலும் புதிய நோக்கும் புதிய போக்கும் கொண்டதோர் புதுமையான சகாப்தத்தையே உண்டாக்கினார் என்பதை அண்ணாவின் விரோதிகள் கூட ஒப்புவர். திரைப்படத்துறை வரலாற்றிலே அண்ணாவின் சுவடுகள் ஆழமாகப் பதியப் பெற்ற புதிய சகாப்தம் 'நல்லதம்பி' திரைப்படத்துடன் தொடங்கியதாயினும், திருப்புமுனையைத் திடப்படுத்தியது 'வேலைக்காரி'யாகும். இத்துறையில் புதிய சக்தியொன்று புகுந்துவிட்ட சேதியைக் கட்டியங்கூறுவதற்கு 'நல்லதம்பி' தவறவில்லை.

''நாட்டுக்குச் சேவை செய்ய வந்த நாகரிகக் கோமாளி''யாக, ''சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக் கோமாளி''யாக கலைவாணர் கிருஷ்ணன் தோன்றி அறிஞரின் கருத்தோட்டத்திற்கு உயிரூட்டினார். ''மழை வரு மென்றே மந்திரம் ஜெபித்தது அந்தக் காலம், மழையைப் பொழிய வைக்கவே யந்திரம் வந்தது இந்தக் காலம்'' என அண்ணாவின் எண்ணத்தில் ஊற்றெடுத்த பகுத்தறிவுக் கருத்துக்கள் பல கலைவாணரினால் 'நல்லதம்பி' மூலம் பாய்ச்சப்பட்டன. அண்ணா-கலைவாணர் இணைப்பு கலையுலகப் புரட்சியில் சாகாத சரித்திரம் கண்டது. அண்ணாவின் பகுத்தறிவுப் பணிக்கு சிரிக்கவைத்துச் சிந்திக்க வைத்த கலைவாணர் பயனுள்ளதோர் படைக்கலன் ஆயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் புரட்சி

அண்ணுவின் 'வேலைக்காரி' தமிழ்த் திரைப் பட உலகில் மாபெரும் புரட்சியை உண்டுபண்ணியதோர் மகத்தான காவியம். அன்றுடம் வாழ்வில் நிலவும் சமூக பொருளா தாரப் போராட்டங்களில் நாம் சந்திக்கும் வெவ்வேறு வர்க்கங்களின் பிரதிநிதிகளான ஆனந்தனையும் வேதாசல முதலியாரையும் முழுமையான உருவத்துடன் தம் செழுமை யான சிந்தனையில் உருவாக்கி அவர்களைத் திரையில் நட மாடவிட்ட அண்ணுவின் எண்ணத்தின் பரப்பைக் கூறவா, எழுத்தின் சிறப்பைக்கூறவா? அன்னுரின் கற்பனைப் படை யலான கதையின் அற்புதக் கருத்துக்களைக் கூறுவதா, அல் லது ஒப்பனைத் தமிழில்வடித்த உரையாடலின் பொலிவைக் கூறவா? அண்ணு அணியழகு ஊட்டி, மறுமலர்ச்சித் தமிழ் கூட்டி, புதிய நடையில் உரையாடல்களைத் தீட்டி, விளைத் திட்ட வசனப் புரட்சி, அன்னுருக்குப் பின்வந்த திரைப்பட வசனகர்த்தாக்களுக்கு ஓர் முன்னேடியாயிற்று; வழிகாட் டியாயிற்று; வரவிலக்கணமும் ஆயிற்று.

அண்ணுவின் பாணி திரைப்படத் துறையில் ஓர் புதிய சகாப்தத்தை மட்டுமல்ல, புதிய எழுத்தாளர் சந்ததி யொன்றையே படைத்துவிட்டது. திருவாளர்கள் மு. கருணுநிதி, கண்ணதாசன், ஆசைத்தம்பி, அரங்கண்ணல் மாறன், இராதா மணுளன், ஏ. எஸ். ஏ. சாமி போன்ற தி. மு. க. இயக்க அனுதாபிகளான திரைப் பட எழுத்தாளர்கள் மட்டுமல்ல, திருவாளர்கள் ஏ. கே. வேலன், எஸ். டி. சுந். தரம், சக்தி கிருஷ்ணசாமி போன்ற இன்ன பிறரும் இச் சந்ததிக்குரியோரே. திரைப்பட எழுத்துத்துறையில் அண்ணு ஏற்படுத்திய தாக்கத்தின் செல்வாக்குத்தான் இன் றும் ஏதாவது ஒரு வகையில் திரைப்பட எழுத்தாளர் கள் அனைவரதும் எழுத்துக்களில் எதிரொலித்துக் கொண் டிருக்கிறது. கட்சி அபிமானங்களால் சிலர் இதை மறுக்க லாம். எனினும் இவர்களின் எழுத்துக்களில் இச் செல் வாக்கை இவர்களால் மறைக்க முடியவில்லை. அல்லது, தம் மையறியாமலே இச்செல்வாக்குக்கு அடிமைப்பட்டுவிட்ட னர் என்பதா? எது எப்படியாயினும், திரைப்படத் தயாரிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கு 'இவையும் உப உறுப்புக்கள்' என இருந்த கதை, வசனம், ஆகிய அம்சங்களை ''இவைதான் உயிர் நாடியான உறுப்புக்கள்'' என்ற நிலைக்கு மாற்றியமைத்தவர் அண்ணு என்பதை மறுக்க முடியுமா? திரைப்படத் தயாரிப்பில் உதவியாட்களுள் ஒருவர் என்ற நிலையிலிருந்த கதை வசன கர்த்தாவை, திரைப்படத்தின் சிருட்டிகர்த்தா என மதிக்கத்தக்க நிலைக்கு உயர்த்தியவர் அண்ணு என்பதை மறைக்கத்தான் முடியுமா? இன்ன நடிகரை நடிக்கவைத்தால் படம் வெற்றி பெறும் என்ற நிலையையும் மேவி, இன்னவர் கதை வசனம் எழுதினுல் படம் வருலைக் கொடுக்கும் என்ருேர் நிலையை திரைப்படத் துறையில் ஏற்படுத்தியவர் அண்ணு என்பதை நிராகரிக்க முடியுமா? தம் எழுத்தாற்றலைத் திரைப்படத்தின் மூலதனமாக்கித் தமக்கு இத்தகைய நிலையான மதிப்பைத் தேடிக் கொண்ட அண்ணு, தம்மைப் பின்தொடர்ந்த எழுத்தாளர் சந்ததிக்கும், படத்தின் வெற்றி தோல்வியில் அவர்களைப் பாரிய பங்காளிகளாக்கியதன் மூலம், இத்தகைய மதிப்புக்குரிய அந்தஸ்தை அளித்துச் சென்றுள்ளார். திரைப்படத்துறையில் எழுத்தாளனின் மதிப்பீட்டை மாற்றியமைத்த 'வேலைக்காரி' யில் அண்ணுவின் கவின்மிகு கைவண்ணத்திற்கு எடுத்துக் காட்டுகள் சில:-

(தன் தந்தை பட்ட கடனுக்காக மரக்கிளையில் பிணமாகத் தொங்குவதற்குக் காரணமாகஇருந்த வேதாசல முதலியாரைப் பழிவாங்கத் துடிக்கும் ஆனந்தன் தன் நண்பன் மணியின் ஆலோசனையுடன் பரமானந்தனுக மாறி வேதாசல முதலியாரின் மகள் சரசாவையே மணம்முடிக்கிருன்; பழிவாங்கவும் தலைப்படுகிருன்.)

● **ஆனந்தன்:** **அப்பன் ஒரு பாவி, நான் ஒரு அப்பாவி, மகள் ஒரு அகம்பாவி ..... .. நல்ல குடும்பம்.**

● **ஆனந்தன்:** **மோடி செய்யாத மாது, சேடி இல்லாத ராஜகுமாரி, சோடி இல்லாத மாடப்புரு இருக்க முடியாதாம்.**

● **(ஆனந்தன் சரசாவின் ஆத்திரத்தைத் தூண்டுவதற்காக வேலைக்காரியிடம் விருப்பம் கொண்டவன்போல நடிக்கிருன்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரி: .........ஆ.........நான் உங்கள் வீட்டு வேலைக் காரி.

ஆனந்தன்: அதனுலென்ன. ....சிங்காரிப்பவள் சிங்காரி ஒய்யாரிப்பவள் ஒய்யாரி, அலங்கரிப்பவள் அலங்காரி, பூ விற்பவள் பூக்காரி, வேலை செய் பவள் வேலைக்காரி;

ஆனந்தன்: (சரசாவிடம்) பணத்தை வைத்து என்னத்தைக் கண்டானடி உன் அப்பன்? தங்கத்தாலே சோறு சமைத்து வைர வறுவலும் முத்துப் பச்ச டியும் கோமேதகக் குழம்பும் வைத்துச் சாப்பிட் டாஞ?

வேதாசலம்: ஏனப்பா வெந்த புண்ணிலே வேலைப்பாய்ச்சு கிருய்?

ஆனந்தன்: (தந்தையின் கதியை எண்ணியவனுய்) வெந்த புண்ணிலே வேல்! மரக்கிளையிலே பிணம்!

வேதாசலம்: ஏனப்பா என் உயிரை வாங்கிறே? எங்காவது மரக்கிளையில் உயிரை விட்டுவிடலாம் போலி ருக்கு.

ஆனந்தன்: கேட்டியாப்பா மணி, மகாகனம் பொருந்திய மாமஞர் மரக்கிளையில் பிணமாகத் தொங்கப் போகின்ருர்.. ......

மணி: அந்த மங்களகரமான நாளை சபையோர் அனை வரும் வெகு ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

மணி: ஆனந்தா!, அப்பா வீட்டைவிட்டு வெளியே போடா நாயே என்னுட்டார்.

ஆனந்தன்: அடடே ......அப்புறம்?

மணி: நான் 'நீ வீட்டைக் காத்துக்கொள் நாயே' என் னுட்டு வந்திட்டன்.

கருத்துச்சுவையும் சொற்சுவையும் அங்கதச் சுவை யும் இணையுமாறு காட்சிகளின் கட்டுக்கோப்பையும் உத்தி களையும் பேணி அண்ணு 'வேலைக்காரி'யைப் படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணி ஆழமான அனுபவ முத்திரை கொண்டது. 'ஆள்மாருட்டப் படலம்', 'அடுத்துக்கெடுக்கும் படலம்', 'பழி வாங்கும் படலம்' என இராமாயணப் படலம் பாங்கில் மணி ஆனந்தனுக்கு வகுத்துக் கொடுத்த திட்டம் நகைச் சுவையோடு பொருட் சுவையும் கொண்டது. நீதிமன்றக் காட்சியை நிலைகுலையாது திரையில் படைத்தவர் அண்ணா. வட நாட்டு வக்கீலாக நடிகர் கே. ஆர். இராமசாமியை வனப்புடன் உருவாக்கிக் காட்டினார்.

## வேலைக்காரி'யைத், தொடர்ந்து .....

வேலைக்காரியைத் தொடர்ந்து அண்ணா, 'ஓர் இரவு'' 'சொர்க்க வாசல்', 'நல்லவன் வாழ்வான்', 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி', 'இரங்கூன் இராதா', போன்ற பல கற்பனைக் கருவூலங்களைத் திரைப்படத்தில் தீட்டிக் காட்டினார். ஏற்கனவே நாடகமாக நடிக்கப்பெற்றுப் புகழ் பூத்தது 'ஓர் இரவு'; நாவலாக வெளிவந்து நயந்துரைக்கப் பட்டது 'இரங்கூன் இராதா'. ஆயிரம் அரசியல் பொறுப் புகளுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் நடமாடிக் கொண்டிருந்த அண்ணாவின் சுவடுகள் திரைப்படத் துறையிலும் பதிந்ததே ஆச்சரியம்தான். எனினும், பதிந்த சுவடுகள் அழிக்க முடியாதபடி, புதிய பாதசாரிகள் அடிபதித்து வழி தெரிந்துகொள்ளத் தக்கதாக ஆழமாகப் பதிந்தன. இன்னும் அகலமாகப் பதிந்திருக்கும்—அண்ணாவை மட்டும் பொதுவாழ்வின் அவசிய அவசரமான ஆயிரமாயிரம் பிரச்சினைகள் அழைக்காமல் இருந்திருக்குமானால்.

## கலைவாணர் மறைவு

அண்ணா கலைஞர்கள் பால் கொண்ட மதிப்பை, ஈடுபாட்டை, நட்புரிமையை விளக்குவதற்கு கலைவாணர் என். எஸ். கே. மறைந்தபோது தமது 'ஹோம்லண்ட்' ஆங்கில வார இதழில் தீட்டிய உணர்ச்சிமயமான தலையங்கம் போதுமானது. கலைவாணரைப்பற்றி அறிய வேட்கும் பாமர மக்களைத் திருப்தி செய்யவேண்டிய தமிழ்ச் சஞ்சிகைகளே கலைவாணரின் மறைவினை முக்கியத்துவத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட உற்சாகம் காட்டாத காலையில், அண்ணு தமது ஆங்கில ஏட்டின் 1957 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ம் தேதி இதழைக் கலைவாணர் நினைவுக்கு அர்ப்பணித்து 'நின் காலடிகளின் தூசி படிந்த இடங்கள் அருள் நிறைந்தவை' என மகுடமிட்டுப் பின்வருமாறு எழுதினுர்:-

''ஓர் மகாத்மா மறைந்துவிட்டது. ஓர் அன்புடைமை மிக்கானின் இறுதிமூச்சுப் பறிந்துவிட்டது. சாவின் கொடிய கரங்கள் ஓர் சான்ருேனைப் பிடுங்கிக் கொண்டன. கண்ணீர் வெள்ளத்திஞல் மட்டுமே நிரம்பியுள்ள ஓர் சூன் யம் தோன்றியுள்ளது. ஓர் சகாப்தம் முடிவடைந்து விட் டது. என். எஸ். கே. மறைந்து விட்டார். தமிழ் நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இத்தகைய உள்ளத்தை உலுக் கும் வேறு நிகழ்ச்சி நடந்ததில்லை. இவர் மறைவிலேற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்புப் போன்ற பிறிதோர் இழப்பு எமக்கு ஏற்பட முடியாது ...''

கனவான் உலகுக்கு வெறும் கூத்தாடியாக மட்டும் தோற்றிய கலைவாணர், அண்ணுவின் உலகுக்கு மட்டுமே நாட்டின் பெருநிதியாகத் தோன்றினுர். கலைஞர்கள் பால் அண்ணுகொண்ட மதிப்பே பின்னர் அவருக்கு வாய்ப்புக் கிடைத்த நாட்களில் அவர்களைத் தமிழ் நாட்டு மேலவைக்கு நியமித்தமைக்கும் சட்ட சபைக்கு தெரிவு செய்வித்தமைக்கும் வித்தாகும்.

அண்ணுவின் ஈடுபாடு நாடக திரைப்பட உலகுடன் மட்டும் கட்டுண்டதல்ல. இசைத்தமிழோடு இணைந்து சிந்துபாடியநெஞ்சம் அவர் நெஞ்சம்; நடன அரங்குகளிலே நாட்டியமாடியது அவர் கலையுள்ளம். கர்னுடகஇசையில் பேரார்வம்மிக்க அண்ணு இசையரசு தண்டபாணி தேசி கர் போன்ருருடன் தமிழிசை இயக்கத்திற்கு உறுதுணை யாக நின்றதை இசையுலகு அறியும். நாதசுர இசையின் தொன்மையும்மென்மையும் தமிழ்த்தன்மையும் தம்மை ஈர்த்ததால், 1956ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டில் மறைந்த நாதசுர இசை மேதை திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை அவர்களைக் கௌர வித்தவர் அண்ணு. நாதசுர இசையைத் தமிழ்ச்சந்ததிக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக் கையளிக்கும் நோக்குடன் தாம் முதலமைச்சரானதும் தமிழ்நாட்டில் நாதசுர இசைக் கல்லூரியை நிறுவியதும் அண்ணுவின் இசையுள்ளமே. அந்த இசையுள்ளம் எங்ஙனம் 'பல பல இராகங்களில் பாடி' என அர்த்தம்பட வந்த ஓர் பாடலின் அடியை, பல்வேறுவகையான இராகங்களில் அமைத்துப்பாடும்படி தம்மைப் பணித்ததையும், அங்ஙனம் பாடித் தாம் அவையோரிடம் பாராட்டுப் பெற்றமையையும இசைச்சித்தர் சிதம்பரம் ஜயராமன் அவர்களே பின்னர் கூறி இறும்பூதெய்தியுள்ளார்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்"
— புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# தமிழ் எழுச்சியில் அண்ணா

தமிழினத்தினதும் தமிழ் மொழியினதும் எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்குமென நூற்றுக்கணக்கான மறுமலர்ச்சி எழுத்தாளர்களை, பேச்சாளர்களை, கவிஞர்களைக் கொண்ட வாழும் சந்ததியொன்றை உருவாக்கியும், வளரும் சந்ததியொன்றைக் கருவாக்கியும் விட்டுச் சென்ற அண்ணா, வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி கண்ட முன்னோடி தாமே என்பதற்கான முத்திரையையும் இட்டுச் சென்றார். இந்த எழுச்சிக்கு இந்தித் திணிப்பு முயற்சியும், அதனை முறியடிப்பதற்கெனத் தமிழ்நாட்டில் திரண்ட எதிர்ப்புணர்ச்சியுமே பெரும்பாலும் காரணங்களாகும். இந்த உணர்ச்சியைத் திரட்டித் தேக்கும் பணியோடு, கன்னித் தமிழ் தொன்மையானது, வன்மையானது, இனிமையானது, செழுமையானது என்ற உணர்வை தெருட்டி ஊக்கும் பணியும் இணைந்தது. அண்ணாவின் அரசியல் வாழ்வுப் பரப்பை தமிழ்ப் புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெழுச்சிக் காலம் (Period of Tamil Resurgence), தமிழ் மறுமலர்ச்சிக் காலம் (Period of Tamil Renaissance), தமிழ் மீட்சிக் காலம் (Period of Tamil Revival) எனக் கூறின் அமையும்.

## தாழ்வுற்ற தமிழ்

அரசியல் விடயங்களை நல்ல தமிழில் அலசி ஆராய முடியாது எனக் கருதப்பட்ட காலம் அது. சமூகத்தின் மேட்டுக் குடி மக்கள், அதிலும் ஆங்கிலம் படித்தவர், அரசியலை ஆக்கிரமித்திருந்தனர். அரசியல் தமிழில் பேசப்பட்ட இடங்களிற் கூட நல்ல தமிழ் பேசப்படாது, நுணுக்கமான கருத்துக்களையெல்லாம் சொல் வறுமையுடன் — தமிழ்ச் சொல் இல்லாததாலல்ல, இருக்கின்றதெனத் தெரியாததால் — வடமொழியிலோ ஆங்கிலத்திலோ குறிப்பிட்ட நாட்கள். சாதாரண குடிமக்கள் அரசியலைத் தம் அறிவுக்கும் அக்கறைக்கும் அப்பாற்பட்டதும் 'மேதை'களால் கையாளப்பட வேண்டியதுமான துறையென விலகி வாழ்ந்த நாட்கள். இந்நாட்களிற்றான் அண்ணா அரசியலை, அதன் நுணுக்கமான கருத்துக்களை, தொழிற்றுறை நுட்பங்களை, பொருளியற்றுறையின் பிணக்குகளை, சமூகச் சச்சரவுகளை, அறிவுத்துறையின் ஆய்வுகளை, ஆக்கங்களை, தமிழிலும் தங்கு தடையின்றிப் பேச முடியும், எழுத முடியும், ஆராய முடியும், சிந்திக்க முடியும் என்பதைத் தம் செயலால் நிலை நிறுத்தினார். 'முடியுமா முடியாதா' என்று பிணங்கி நின்றாரில்லை. இயல்பாகவே இனிமையாக எழுதிக் காட்டினர். அழுத்தமாக ஆணித்தரமாகப் பேசிக் காட்டினர், அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்து காட்டினர்; செம்மையாகச் சிந்தித்துக் காட்டினர்.

அண்ணாவைப் பொறுத்தவரை இது ஓர் செயற்கை முயற்சியல்ல, இயல்பான எழுச்சியாகும். ஆங்கிலத்தில் பேசத் தெரிந்தவன், எழுதத் தெரிந்தவன், பேசி எழுதிக் காட்டியவன், தமிழிலும் அத்தனையும் தடையின்றிச் செய்து காட்டுகின்றானே என்றபோது 'கையாலாகாதவன்' எனக் கூறித் தமிழின் இயல்பான வன்மையை எவராலும் மறுக்க முடியவில்லை. தமிழ்ப் பேச்சுக்கு மக்கள் மன்றம் செவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்த்தது என்பதுடன், மேட்டுக் குடியினரின் 'சொந்தச் சொத்தாக' இருந்த நாட்டின் அரசியல் தமிழ் மட்டுமே தெரிந்த பொது மக்களின் மட்டத்திற்கு இறக்கப்பட்டது. சாய்வு நாற்காலிகளில் சாய்ந்து கொண்டே உரையாடப் பட்ட அரசியல் விடயங்கள் சந்தியிலும் சாவடியிலும் தெரு விலும் திண்ணையிலும் வைத்து உரையாடப்படும் நிலை எழுந் தது. தமிழின் மறுமலர்ச்சியின் வழியே எழுந்த இந்தச் சிந் தனைப் புரட்சி பத்திரிகை உலகிலும் படிந்தது. தமிழ்ச் செய்தி ஏடுகளும் 'ஜோதிடம்' பற்றிய குறிப்புகளைக் குறைத்துக்கொண்டு அரசியல் விடயங்களை ஆயத் தலைப்பட் டன. 'சுதேசமித்திரன்' செய்தி ஏட்டினால் இந்தச் சிந்தனைப் புரட்சியோடு இணைந்து வேகமாக நடக்க முடியவில்லையாயி னும், (அதன் தளர்ச்சிக்கும் இதுவே காரணம் போலும்.) இவ்வேட்டின் பழைய இதழ்களைப் புதிய இதழ்களுடன் ஒப்பிடின், தமிழ் மறுமலர்ச்சியின் தாக்கங்களைக் காண முடியும். இம்மறுமலர்ச்சிக்குத் துணை நின்றது 'தமிழ் நாடு' நாளேடு.

## பங்கும் பணியும்.....

தமிழ் எழுச்சி இயக்கத்தில் அண்ணாவின் பணியையும் மறுமலர்ச்சித் தமிழ் மீது ஆட்சி செய்த அண்ணாவின் செல் வாக்கையும் பல தரத்தினதாகப் பகுக்கலாம். சில சந்தர்ப் பங்களில் அண்ணாவின் நேரடிப் பங்கு இல்லையாயினும், அண்ணாவின் செல்வாக்கு பங்குகொண்டுள்ளதையும். அன் னார் தந்த கருவி பயன்படுத்தப்பட்டிருப்பதையும், அன்னார் கட்டவிழ்த்துவிட்ட உணர்வுகள் உயிரோட்டமாக அமைவ தையும் காணலாம். உதாரணமாகச் சிலவற்றை நோக்கு வோமா?

## திரும்பிப் பார்!

1. தமிழ் மக்களின் வரலாற்று, இலக்கிய, அரசியல், பண் பாட்டுப் பெருமைகளை நினைவூட்டியவர் அண்ணாவே. - நினைவூட்டியவர் என்றேன், நிலை நிறுத்தியவர் என்றே னல்லேன் (நிலைபெற்றுவிட்ட இப்பெருமைகளை நிலை நிறுத்தினார் எனக் கூறுவது அமையாததாயினும், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் போன்ற சாதனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிற் கொள்ளும்போது 'நிலை நிறுத்தினார்' என்றும் அமையலாம்). முடியுடை மூவேந்தர் பற்றியும், புறநானூற்றின் பெருமை பற்றியும், முல்லைக்குத் தேரீந்த காதையும் இலக்கிய உலகு ஏற்கனவே அறிந்ததாயினும், பரந்துபட்ட பல லட்சக்கணக்கான மக்கள் பங்கு கொள்ளும் அரசியல் உலகுக்கு இவற்றை இட்டு வந்தவர் அண்ணாவே. பாரம்பரியப் பெருமை உணர்வுகளை அன்னார் பொதுமக்கள் மயமாக்கினார். பண்டைப் பெருமையையும் இற்றை இழிநிலையையும் தமிழ் மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டி அரசியல் அறுவடை செய்வது அவர் நோக்கமெனச் சில வட்டாரங்கள் குற்றங் காணலாம். அதுவே நோக்கமாயினும், தூங்கிக் கிடக்கும் ஒரு இனத்தினைத் தட்டியெழுப்புவதற்குத் தரமான கருவியைப் பயன்படுத்தாவிடில், ஒரு தலைவனின் தகுதிதான் என்ன? அண்ணா சுயமையற்ற ஓர் கருவியைப் பயன்படுத்தினார். அதையும் சீராகப் பயன்படுத்தினார்; வெற்றியும் கண்டார். அதுவே சிறப்பு.

## தமிழ் ஓர் அரசியல் தளம்......

2. அண்ணா தமிழை அரசியலில் ஓர் சக்தியாக்கினார். மொழி, இன, நாட்டு எல்லைகளைக் கடந்து வானவெளியையும் அளாவிய அரசியற் சித்தாந்தங்களைக் கொண்ட அரசியற் கட்சிகள் கூட, தமிழ்நாட்டிலே புறக்கணிக்க வொட்டாத, — தமிழ் வாழ்வு பற்றியும் பேசியே ஆதரவு திரட்ட வேண்டிய அளவுக்கு — ஓர் சக்தியாக தமிழை ஆக்கி, அதற்கு அரசியல் அரண் அமைத்தவர் அண்ணா. இந்த நிலையை உருவாக்கியது இந்தியின் அறைகூவலே என்பது உண்மைதான். தமிழ் அரசியல் சக்தியானவுடன் தமிழோடிணைந்து வாழ்க்கை நடாத்தியவர்களும், அரசியலுக்குப் புறம்பாகவே வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டோருமாகிய புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழ்ப்பேராசிரியர்கள், தமிழிசையாளர் என்போர் அரசியலுணர்வு பெறத் தலைப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அண்ணாவின் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சியை தமிழ்ப் பெயர் சூடும் புரட்சியிலே காண முடிந்தது. இப் புரட்சிக்கு வித்திட்டவர் தனித் தமிழியக்கத் தந்தையான மறைமலையடிகளென்ற சுவாமி வேதாசலம் அவர்களே. எனினும் தேக்கமுற்ற இவ்வியக்கம் பரவ வேண்டிய அரசியல் உற்சாகத்தையும் பிரச்சாரத்தையும், உணர்ச்சியையும் ஊட்டியவர் அண்ணாவே. அண்ணாவினாலேயே இவ்வியக்கம் பொதுமக்கள்மயமானது. தனித்தமிழ்ப் பெயர் சூடுவோரைக் குறுநோக்கர் என நிந்தித்தோரைக் கண்டித்து அண்ணா தமது 'ஹோம்லண்ட்' ஏட்டின் 1959ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் தேதி இதழில் "இன்னும் குறு நோக்கரா?" (Still Fads?) எனத் தலைப்பிட்டு ஓர் தலையங்கம் தீட்டினார். அதில் மறைமலையடிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தி விட்டு எதிரிகளின் வாதங்களைச் சந்திக்க விளைந்த அண்ணா, ஆங்கிலக் கலப்பற்ற மொழித்தூய்மைக்காக பிரெஞ்சு நாட்டில் தோன்றிய இயக்கம் பற்றியும், அயர்லாந்து நாட்டின் 'சின் பெயின்' (Sinn Fein) இயக்கம் பற்றியும் ஆராய்கிறார். அண்ணாவின் மறுமலர்ச்சி யுகத்தில் சூடப்பெற்ற வரலாற்றுப் புகழ் சார்ந்த பெயர்களும், தனித்தமிழ்ப் பெயர்களுமான நெடுஞ்செழியன், மதியழகன், இளம்வழுதி, நெடுமாறன், மாறன், சிற்றரசு, பொன்னிவளவன், இளந்திரையன், செங்குட்டுவன், இளங்கோ, பாண்டியன் போன்ற ஆண்பாற் பெயர்களும், மலர்க்கொடி, மல்லிகா, அங்கயற்கண்ணி, அல்லி, தேன்மொழி, பூங்கோதை, பொற்செல்வி போன்ற பெண்பாற் பெயர்களும் தமிழினத்தின் எழுச்சியின் நிச்சயமான எதிரொலிகளே என்பதை எவரே மறுப்பர். தி.மு.க.வின் தலைவர்கள் இப் பெயர்களைத் தாமே சூடியும் பெயரிடும் வைபவங்களில் தமிழ்க்குழந்தைகளுக்குச் சூட்டியும் இப்புதிய உணர்ச்சிக்கு வலிவு ஊட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தனித்தமிழ்ப் பெயர்களைச் சூடிய உணர்வுடன், தமிழ் மக்களின் வழக்கிலிருந்து நன்ருக வேரூன்றிவிட்ட வட மொழிச் சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் வேரோடு பிடுங்கி வீசிவிட்டு அவற்றிற்கு ஏற்ப தனித் தமிழ்ச் சொற்களைத் தேர்ந்ததுடன், தமது எழுத்தி லும் பேச்சிலும் பயன்படுத்தியும் ஏனைய கழக ஏடுகளில் பயன்படுத்த ஏதுவாகி நின்றும், அவற்றை மக்களின் இயல்பான பழக்கத்திற்குக் கொணர்ந்தார். இத்த கைய மாற்றங்கள், அண்ணு மொழியாக்கப் பணியைத் தலைப்பணியாகக் கொள்ளாது, அரசியற் பணியாற் றுங்கால் கிடைத்த துணைப்பயன்களேயாகையினுல், குறிக்கப்பட்ட சொற்கள் பெரும்பாலும் அரசிய லோடு தொடர்புடையனவேயாகும். அண்ணுவின் வாயிலாக, அல்லது அண்ணு தோற்றிய உணர்வினின் றும் ஊற்றெடுத்த இத்தனித் தமிழ்ச் சொற்கள் நாட் டின் அரசியலரங்கையும் கடந்து தமிழ்கூறும் நல்லுல கெங்கும் வழக்கில் வந்துவிட்டமையும் குறிப்பிடத்தக்க தாகும். அண்ணு தோற்றிய மாற்றங்கள் தமிழ் மக்களி டையே செல்வாக்குமிக்க கழகத்தின்வாயிலாக இயக்க ரீதியாகப் பரவுவது எளிதாக இருந்தது. இத்தகைய தனித்தமிழ்ச் சொற்கள் இரு தன்மைத்தாகும்.

(அ) ஏற்கனவே தமிழ் இலக்கியங்களிலே விரவிக் கிடந்தவைகள் வழக்கிற்குக் கொண்டு வரப்பட்டன.

உதாரணம் :

| அன்று | | இன்று |
|---|---|---|
| மந்திரிசபை | — | அமைச்சு |
| மந்திரி | — | அமைச்சர் |
| சபை, சபா | — | அவை, அரங்கு, மன்றம். |
| தீபஸ்தம்பம் | — | கலங்கரைவிளக்கு |
| பஞ்சாயத்து | — | ஒன்றியம் |
| மைதானம் (மை-தமிழ், தானம்-வடசொல்) | — | திடல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அனுதாபம் (தீர்மானம்) | — | இரங்கல் (தீர்மானம்) |
| ராஜ்யம் | — | மாநிலம |

(ஆ) தமிழ் இலக்கண இலக்கியங்களைத் தளமாகக் கொண்டு புதிய சொற்கள் தோற்றுவிக்கப் பெற்றன; அல்லது மரபுச் சொற்களே தேவைக்கேற்றவாறு இணைக்கப் பெற்றன.

உதாரணம் :

| அன்று | | இன்று |
|---|---|---|
| அபேட்சகர் | — | வேட்பாளர் |
| நியமனப்பத்திரம் | — | வேட்புமனு |
| பிரேரித்தல் | — | முன்மொழிதல் |
| ஆமோதித்தல், அனுவதித்தல் | — | வழிமொழிதல் |
| காரியதரிசி | — | செயலாளர் |
| தனாதிகாரி, பொக்கிஷாதிபதி | — | பொருளாளர் |
| ஸ்தலஸ்தாபனம் | — | ஊராட்சி மன்றம் |
| சிபார்சு | — | பரிந்துரை, ஏந்துரை. |
| கவர்னர் | — | ஆளுநர் |
| வால்போஸ்டர், வால் நோட்டீசு | — | சுவரொட்டி |
| பஸ் | — | பேருந்து |
| டைரக்டர் | — | இயக்குநர், நெறியாளர். |
| ஆபீசர் | — | அலுவலர் |

## தமிழ்த் திருநாள்

5. அண்ணு தமிழ் வாழ்வோடு இணைந்த விழாக்களை வரவேற்று அவைக்கு வலிவும் வனப்பும் ஊட்டியும், அங்ஙனம் இணையாத வேறு பண்பாட்டிற்கமைந்தன — தமிழ் மக்களின் அறிவுக்குப் பொருந்தாதன — என அவர் எண்ணியவற்றைப் புறக்கணித்தும் செய்திட்ட பிரச்சாரம் நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்திற்று. இன்று தீபாவளித் திருநாள் தமிழர் மத்தியில் பொலிவிழந்தமையும் பொங்கல் திருநாள் வலிவு பெற்றமையும் கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய மேற்கோள்

6. அரசியல் பேச்சுக்களில் இலக்கிய மேற்கோள்களைப் பயன்படுத்தியவர் அண்ணா. இதனால் இலக்கியம் தனக்கு எட்டாத பொருளல்ல என்ற உணர்வு பாமரனுக்கு ஏற்பட்டதுடன், அரசியற் பேச்சுக்களும் தமிழ் நயமுடைத்தாயின. உதாரணமாக, 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாதல்' (சிலப்பதிகாரம்), 'அல்லற் பட்டாற்றாது அழுத கண்ணீர்', 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' (குறள்) போன்ற அடிகளும், அடிகளையுடைய பாடல்களும், அரசியல் பொருளாதாரக் கருத்துக்களை வற்புறுத்தற்குப் பயன்படுத்தப் பெற்றன. இவ்வாறே சித்தர் பாடல்கள் சமுதாய சமயக் கருத்துக்களை வலியுறுத்தற்கு மேற்கோள் காட்டப்பெற்றன.

## அரசியற்றமிழ்

7. தமது பேச்சாலும் எழுத்தாலும் அழுத்தமானவையும், சக்திவாய்ந்தவையுமான சொற்களையும் சொற்றொடர்களையும் தமிழ்மொழிக்குத் தந்துவிட்டுச் சென்றார் அண்ணா. அவை ஏற்கனவே தமிழ்மொழியில் இருப்பவை என்பதும் உண்மை. அவற்றால் இலக்கியத் தமிழ் வளம்பெற்றுவிடவில்லையென்பதும் உண்மை. எனினும், அரசியற்றமிழை அழுத்தமானதாக்கினார் என்பதும். அரசியலரங்கிற்கு புதிய சொற்களை இட்டுவந்தார் என்பதும், அவற்றைச் சக்திவாய்ந்தவையாக இணைத்துச் சாற்றினார் என்பதும் எவரே மறுப்பர். உதாரணமாக; நாடாள்வோர், ஆளவந்தார், துரைத்தனத்தார், (அரசினர்) ஏழைதாழைக்கள், (அக்கறையற்றோர்) சோற்றுத்துருத்திகள் (அனுகூலத்திற்காக அண்டிப் பிழைப்போர்) போன்ற சொற்களையும், 'துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு' போன்ற சொற்றொடர்களையும் குறிப்பிடலாம். இரண்டாம் உலகப்போரின்போது தமது பேச்சு வண்ணத்தால் ஆங்கில அகராதியைப் பெருக்கிக்கொண்ட சர். வின்சன் சர்ச்சிலை நினைவுகூருதல் பொருத்தமானதாகும்.

அண்ணாவின் மறுமலர்ச்சி யுகம் பற்றி இந்நாட்டிற் கூடச் சில வட்டாரங்களில் விவாதிக்கப்பட்டுச் சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றன. அவர்களும் அண்ணாவின் மறுமலர்ச்சித் தமிழிலேயே தமது விவாதங்களை நடாத்துகின்றனர் என்பது ஆறுதலளிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆங்கிலம் வாழுமாயின் அறிவுலகனைத்தும் வாழும்
பாங்குறு தமிழுமாங்கே பண்புடன் செழிக்கும்...''

# ஆங்கிலத்தில் அண்ணா

தமிழணங்கின் கொள்ளை அழகனைத்தும் அள்ளிப்பருகி அவள் கொஞ்சுமொழியே தஞ்சமெனக்கிடந்து தன் நாவின் நயத்தாலும் எண்ணத்தின் புதுமையாலும் கைவண்ணத்தின் கவர்ச்சியாலும் அவளுக்கு அணிகலன்கள் சூட்டி ஆனந்தித்த அண்ணா, ஆங்கில மாதிடமும் சுகித்துக்கிடந்து அவள் தந்த சுகத்தை மாந்தி மகிழ்ந்தமை கற்பெனும் திண்மைக்குக் களங்கமோ என்னவோ, அற்புதமான அனுபவமல்லவோ? தமிழில் பாண்டித்தியமுடையோர் அதே தரத்தில் ஆங்கிலத்திலும் புலமையும் சொல்வலிமையும் கொண்டு விளங்குதல் அபூர்வமே. உலகின் எக்கோடியில் வாழும் தமிழனுயினும் தாய்த்தமிழையும் ஆங்கிலத்தையும் கைவிடின் அவனுக்கு வேறு கதியில்லை என உணர்த்தப் போலும் அண்ணா இந்த அபூர்வப் புலமையைக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசிட்டர் வாயால் மகரிஷி......

'விடுதலை'யிலும் 'திராவிடநாடு' இதழிலும் வேறு எண்ணற்ற ஏடுகளிலும் நூல்களிலும் தமிழ்ச்சொற்சிலம்ப மாடிய அண்ணாவின் எழுத்தாணிதான் 'ஜஸ்டிஸ்' 'ஹோம் லண்ட்' பத்திரிகைகளின் ஆசிரியனாக ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக்கட்டுரைகளையும் ஆசிரியத் தலையங்கங்களையும் அணியழகுடன் தீட்டியது. பொதுக்கூட்டங்களிலே தமிழ் மழை பொழிந்த அண்ணாவின் நா, அதிகாரபூர்வமான அரங்குகளிலே ஆங்கிலத்தில் நிதானமான அருவியைப் பெருக்கிற்று. நற்றமிழ் உரைப்பதில் ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கிய நாவேந்தனாகிய அண்ணாவின் ஆங்கில உரையைக்கேட்ட ஆங்கிலச் சொல்லின் செல்வர் சர். சி. பி. இராமசாமி ஐயர் அண்ணாரைத் தமது 'வாரிசு' எனப் போற்றினரென்றால் 'வசிட்டர் வாயால் மகரிஷி' என வாழ்த்தப் பெற்ற அண்ணாவின் புலமை அளவிடுந்தரத்ததோ. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் அயல்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு அண்ணா ஆற்றிய ஆற்றொழுக்குப் போன்ற அழகிய, ஆராய்ச்சி பூர்வமான, ஆழமான, ஆங்கில உரையைக் கேட்டு உவக்காத உள்ளம் ஏது? அமெரிக்க நாட்டில் அண்ணா ஆற்றிய உரைகள், தமிழ் நாட்டில் ஐ. நா. தினத்தில் ஆற்றிய உரை, சீன ஆக்கிரமிப்பின் போது வானொலியில் ஆற்றிய உரை, புதுடில்லி இராஜ்ய சபையில் மொழிப் பிரச்சினையையொட்டி ஆற்றிய உரை, இன்னோரன்ன உரைகள் அண்ணாவின் சொல்லாட்சிக்கும் சிந்தனையின் மாட்சிக்கும் சாசுவதமான சாட்சிகளாகும்.

## முதல் முழக்கம்......

குறிப்பாக, புதுடில்லி மாநிலங்களவையில் அண்ணாவின் முதன் முழக்கம் இந்தியா எங்கணும் எதிரொலிகளைக் கிளறிவிட்ட எடுப்பான உரையாகும். இவ்வுரையையொட்டி இந்தியாவின் தலையாய தினசரிகள் அனைத்தும், வாளாவிருக்கவொட்டாது, கருத்துக்கள் எழுதின. அன்று பிரிவினைவாதியாகவிருந்த அண்ணாவின் கருத்தை ஏற்காதோரும்கூட அண்ணாவின் திராவிடப் பிரிவினைக்கான வாதங்கள் ஆணித்தரமானவை, சொல்லாட்சி வியக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது என விதந்து போற்றினர். தம் கன்னிப் பேச்சிலேயே அனைவரையும் கவர்ந்து விட்ட அண்ணாவின் உரையையிட்டுத் தலையங்கம் தீட்டிய 'இந்து' (Hindu) ''...... கொள்கையிலே கொண்ட உண்மைப்பிடிப்பாலும், தமது சக்திவாய்ந்த பேச்சுத் திறத்தாலும் அண்ணாதுரை சந்தேகமின்றி மாநிலங்களவையைக் கவர்ந்து விட்டார்... '' எனக் குறிப்பிட்டது.

பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஒவ் இந்தியா' (Times of India) என்ற நாளேடு, '' இந்தியாவிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்ற குரல் முதன்முதலாக சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்றத்தில் இன்று ஒலித்தது. இந்த முழக்கத்தை தி. மு. க. தலைவர் அண்ணாதுரை இன்று மாநிலங்களவையில் முழங்கினார். இந்திய யூனியனிலிருந்து தென்னாடு பிரிய வேண்டுமென்ற அண்ணாதுரையின் துணிவான வாதம் நிலைகுலையச் செய்துவிட்டது...'' என்று கூறிற்று.

புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' (Hindustan Times) பின்வருமாறு கூறிற்று:—

''... தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை தென்னகத்திற்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கையைத் தெளிவாக எடுத்துரைத்தார். மாநிலங்களவை இன்று கூடியிருந்து திராவிட நாட்டுக்காகப் பாடுபடும் சொல்லாற்றல் மிக்க தலைவரின் பேச்சைக் கேட்டது. தேசியத்திற்கு அவர் புதிய வரவிலக்கணம் தந்தார். ''

மலையாள நாளேடாகிய 'மாத்ருபூமி' பின்வருமாறு எழுதிற்று:-

''...ஆட்சியமைப்புமுறையின் எதிரி என்ற அளவில் அறியப்பட்ட அண்ணாதுரையின் சொற்பொழிவு, பலரை - குறிப்பாக வட இந்தியாவிலிருந்து வந்திருந்த பல உறுப்பினர்களை - வியப்பில் ஆழ்த்தாமல் இருக்கவில்லை. சிறந்த பேச்சாளர் என நிறைந்த பெயர் பெற்றுள்ள அண்ணாதுரை இன்று மாநிலங்களவையில் தம் திறமை முழுவதையும் வெளிப்படுத்தினார்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் நுகர்ந்தும்....,

அண்ணாவின் ஆங்கிலப் புலமைக்கு அடித்தளமாக அமைந்தது அவரது நூல் மோகமாகும். அறவாழ்வுக்கு வேண்டிய அடிப்படைக் கருத்துக்களையெல்லாம் தமிழ் நூல்களிலிருந்து கிரகித்துக் கொண்ட அண்ணா, புதிய உலகின் நுண்ணிய எண்ணங்களனைத்தையும் நுகர்ந்து கொண்டது நூல் நிலையங்களின் நூற்றுக்கணக்கான ஆங்கில நூல்களின் வாயிலாகவே. தமது கருத்துக்களை நிறுவுவதற்கு அன்னார் பயன்படுத்திய ஆங்கில மேற்கோள்கள் இதனை உறுதிசெய்வன. உதாரணமாக, அண்ணா முதலமைச்சராகப் பதவியேற்றபோது, அன்னாரது திட்டம் பற்றி செய்தி நிருபர்கள் வினாவினர். அண்ணா அதற்கு விடையாக தமக்குப் பிடித்தமான சொமசெற் மோம் (Somerset Maugham) அவர்களின் 'தொகுப்புரை' (Summing up) யிலிருந்து பின்வரும் மேற்கோளைக் கூறினார். ''ஒவ்வொருவரும் தமது இயல்புக்கும் பணிக்கும் ஏற்ப நடப்பதைத்தவிர வாழ்க்கையின் வனப்பு வேறில்லை'' என்றார். ("Beauty of life is nothing but this - each should act in conformity with his nature and his business") கலைவாணர் மறைந்தபோது தமது 'ஹோம்லண்ட்' இதழில் கவிஞர் 'காம்பெல்'லின் (Campbell) கவிதையடியை மேற்கோள் காட்டி எழுதினார். ("Blessed the spot that holds thy dust") திராவிடர்களின் தீனநிலையை விளக்குவதற்குத் தலையங்கம் தீட்டப் புகுந்த அண்ணா விவிலிய வேதநூலின் (Bible) அழுத்தமான தலைப்புக்களைப் பயன்படுத்தினார். எடுத்துக்காட்டாக, ''ஆன்மா தயாராக இருக்கிறது, தசையோ வலுவிழந்திருக்கிறது.'' ("Spirit is willing but the flesh is weak") என்ற வேதவாக்கியத்திலிருந்து தாக்கமான 'தசையோ வலுவிழந்திருக்கிறது'' என்ற தலைப்பை எடுத்து 'ஹோம்லண்டி'ல் ஆணித்தரமான தலையங்கங்களைத் தீட்டினார்.

(Homeland 22, 29-6-62)

அண்ணாவின் ஆசிரியத் தலையங்கங்களுக்கான தலைப்புக்கள் மிகவும் அழுத்தமானவையும் அணியழகுமிக்கவையுமாகும். எடுத்துக்காட்டாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ''விஜயவாடாவிலிருந்து வரும் அதைப்பலேகள்'' (Vibrations from Vijayawada - Homeland, 22-2-1959) விஜயவாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுபற்றியது.

- ''மந்தமாருதமும் மலர்ச்சியும்'' (The Breeze and the Blossom - Homeland, 26-2-1961)

- ''சாம் மாமாவின் 'சாண்ட்விச்' உண்டிகள்'' (Uncle Sam's Sandwiches - Homeland, 6-8-1961)-அமெரிக்கா மீது தொடுக்கப்பட்ட கிண்டலான கண்டனக்கணே. சியாட்டோ, சென்டோ உடன்படிக்கைகள், கியூபா பிரச்சினே, அயூப்கானின் அமெரிக்கச் செலவு போன்ற வற்றையொட்டிய அரசியல் ஆய்வு.

- ''குப்பைத் தொட்டியில் வைரம் இல்லே'' (No Diamond in the Dustbin - Homeland, 20-8-1961)

## தனிநடை தேர்ந்தும்.....

தம் தமிழ்ப்படைப்புக்களில் தமக்கென ஓர் தனிப் பாணி வகுத்து அடுக்குத்தொடரிலே எதுகைமோனே இழை யோட எழுதிய அண்ணு, ஆங்கிலத்திலும் இத்தகைய புதிய நடையைக் கையாண்டார்; அதில் வெற்றியும் பெற்ருர் என்றே கூறவேண்டும். உதாரணமாக, 12-3-1961ம் தேதி 'ஹோம் லண்ட்' இதழில் ''அமைச்சரில்லேயேல் அதியற் புதம்!'' (Minus the Minister, Marvellous!) என மகுட மிட்டுத் தீட்டிய தலேயங்கத்தில் ஒரு பந்தியின் சந்த அழகு காண்க.

''......Ambiguity clothed with authority is passed on as assurance. Abuses are raised to the ranks of arguments. Logic is kept under lock and key. The Lord brooks no question and refuses to accomodate even a request. It is the minister we meet, not the man ....''

'ஹோம்லண்ட்' 28-5-1961 இதழில் 'வானவெளிக்கு அப்பால்' (Outer - Space) எனத் தலேப்பிட்டு எழுதிய தலே யங்கத்தின் பகுதிகள் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...... Arguments for and against this contention could be advanced — nay, the very theory could be applauded or exploded...... Periyar is definite in his statement. He is still a crusader and his support to Kamraj is incidental, an interlude as it were...... Just for an electoral victory, the Congress takes all these taunts and insults lying low — nay, it even wags pleasure in being petted and patted by Periyar. Not content with eating this humble pie, the Congress is busy exhibiting its glee over the rift in the D. M. K. The propaganda bullets are sent buzzing all around...... Its propagandists big and small have opened 'broadsides' against alliances — pacts — agreements. On what authority they talk about these none dare ask. Wherefrom they gathered these 'chips' we are not informed. But their voice is shrill, their threats vindictive, their advice paternal, pronouncements pontificial......"

## வாதத்தில் வலிவு காட்டியும்.....

*தி. மு. க. வின் ஒரு சிறு பிரிவினர் திரு. சம்பத் தலைமையில் வெளியேறியமைகண்டு மாற்றுக்கட்சியினரான காங்கிரசார் மிகவும் கூவிக் குதூகலித்தனர். இதையிட்டு அண்ணா தீட்டிய குறிப்புரைகள் அவரின் வாதத்திறங் காட்ட வல்லன.*

"..... Of course the most enjoyable scene for the Congress today is the denunciation delivered by the dissidents against the D. M. K., its policy and the persons conducting its affairs. Congressmen bubble out their joy — "ah! these attacks are hard, swift and merciless! The D. M. K. will be shattered into smithereens soon' — they fondly hope. In their fervour they even forget the simple truth that a part can never be bigger than the whole, and however depleted, the 'rest' will always be bigger and stronger than the 'crest'. Dissidents can never be in a majority that is a contradiction in terms. They are dissidents simply because they are not able to convince and convert



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

others to their point of view. Conscious of their inablity to convert the organisation to their point of view, and impatient to wait for better times, dissidents usually mistake their fury for strength and parade their pugilistic power — sure of a new audience. But the organisation withstands the jolt, and since there is no need for fury or hurry, carries on its work calmly, conscious of its own solid strength......"

'......கருத்து வேற்றுமை கொண்டு பிரிந்து சென்றவர்கள் தி. மு. க. மீது மேற்கொண்டுள்ள தாக்குதலைக் கண்டு, தி. மு. க. சுக்கு நூருகிவிடும் எனக் காங்கிரசார் களி கூருகின்றனரே. பிரிந்து சென்ருேர் பெரும்பான்மையினராகி விட முடியாதே. அவர்கள் பிரிந்து சென்றதே இயக்கத்தை அதன் பெரும்பான்மையினரை தமது கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாத காரணத்திஞற்ருனே.' எனத் தர்க்க வாதத்தைத் தகர்க்க முடியாதவாறு நிறுவுகிருர் அண்ணு.

## தம்பிக்கு அறிவு ஊட்டியும்......

'திராவிடநாடு' இதழ்களில் வாராவாரம் 'தம்பிக்கு' கடிதம் தீட்டி, அவனுக்கு உலக, உள்நாட்டு அரசியல், சமூக, பொருளியல் பிரச்சினைகளை ஊட்டி வந்தாற் போன்றே, 'ஹோம்லண்ட்' இதழ்களிலும் 'தம்பிக்கு' கடிதம் தீட்டிஞர். இக்கடிதங்கள் வரலாற்றுக் குறிப்புகள் பொருளியல் தத்துவங்கள், சர்வதேச அரங்கின் அரசியல் துணுக்குகள், விளக்கங்கள் என்பனவற்றை அகத்துள்ளடக்கியதால், 'ஹோம்லண்ட்' ஏட்டின் இப்பகுதி அரசியல் மாணுக்கருக்கு நல்லதோர் ஆய்வுக்கூடமாயிற்று. 'தேசாபிமானியின் உணவுப்பட்டியல்' (Patriot's Menu), 'ஜென்கினுடைய காது விளைத்த போர்' (War of the Jenkin's ear) 'அஞ்சல்மனைச் சோஷலிசம்' (Post - office Socialism) போன்ற இன்னேரன்ன தலைப்புக்களில் அண்ணு தீட்டிய கடிதங்கள் கருத்துக்கு விருந்தானவை. குறிப்பாக 'அஞ்சல் மனைச் சோஷலிசம்' என்ற தலைப்பில், சிறந்த பொருளியல் மேதையும், இந்தியாவில் அமெரிக்க தூதராக இருந்தவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பேராசிரியர் கல்பிறெய்த் (Dr. Galbraith) அவர்களு டைய குறிப்பை அடிப்படையாகக் கொண்டு, அண்ணு தொடர்ச்சியாக மூன்று இதழ்களில் இந்திய பொருளா தார அமைப்பின் இணைப்புகளை அக்குவேறு ஆணிவேருகப் பிரித்து வைத்தார். அண்ணுவின் ஆய்வுரைக்கு அவருக்கே உரித்தன 'Mediocrity on a magnificient scale', 'Stupendous Stupidity போன்ற அடுக்குத் தொடர்கள் அழகூட்டு வன.

## தமிழின் பொலிவு கூட்டியும்.....

அண்ணு தமிழ்மொழியில் கொண்ட ஈடுபாட்டிற்கும் ஆங்கிலத்தின்பால் கொண்ட ஈடுபாட்டிற்குமிடையே ஓர் வேறுபாடு உண்டு. தமிழன்னையிடம் தமிழ்ப்பாலை உண்டு வளர்த்த அண்ணு தன் தமிழ்ப்பணியால் தமிழ்மொழியில் தன் செல்வாக்கின் சுவடுகளை விட்டுச் சென்ருர். அண்ணு வின் ஆங்கில அறிவு அன்னரின் தமிழ்நடையிலும் பேச்சி லும் ஓர் நலத்தகு தாக்கத்தை ஏற்படுத்திற்று. அத்தாக் கம் அண்ணுவின் வாயிலாகத் தமிழ் மொழியின்மீதும் சிறிது படர்ந்தது எனலாம். அண்ணு தமது தமிழ்ப் பேச்சி லும் எழுத்திலும், சொற்சுருக்கமும் பொருள் விளக்கமும் கொண்ட பல ஆங்கிலச் சொற்ருெடர்களை, அவற்றின் மிடுக்கு கெடாவண்ணம் தமிழ் மொழியில் பெயர்த்துப் பயன்படுத்திஞர். அவை இன்று தமிழ்த்தன்மை பெற்று 'எப்படி வந்தது? எவர் கொணர்ந்தவர்?' என எண்ணப் படாமலேயே பலராலும் பயன்படுத்தப்படுமளவுக்குப் பக் குவப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக:—

★ **'Do or Die'** என்ற சொற்ருெடரை 'செயலாற்று அல் லது செத்து மடி' எனப் பயன்படுத்திஞர். 'செய் அல் லது சாவு' என மொட்டையாகக் கூருது அழுத்தமாகப் பயன்படுத்தியமை காண்க.

★ **'Live, Let live'** என்ற சொற்ருெடரை 'வாழு, வாழ விடு' எனப் பெயர்த்துப் பாவித்தார்.

★ **'Forgive and forget'** என்ற சொற்ருெடரை 'மன்னிப் போம், மறப்போம்' என உருவாக்கிஞர்.

மேலே நாட்டுத் தத்துவஞானிகள் பலரின் பொருள் புதைந்த கருத்துக்களையொப்ப தரீமும் கருத்துக் கருவூலங் களைப் படைத்தார். உதாரணமாக 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற அண்ணுவின் மணிவாசகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னரின் அபிமானத்திற்குரிய கிரேக்க தத்துவஞானி எப்பிக்ரெரஸ்ஸின் (Epicletus) 'தாங்கிக் கொள், பொறுத்துக் கொள்' (Bear, forebear) என்ற கருத்தினின்றும், கரு வுற்றிருக்கலாம். இங்ஙனமே 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது', 'தம்பியுடையான் படைக்கஞ்சான்', 'இப் படை தோற்கின் எப்படை வெல்லும்' போன்ற அணியுரை களும் ஆங்கிலக் கவிகளின் வாசனையுடைத்தே.

அண்ணுவின் பேச்சிலும் எழுத்திலும் இழையப்பட் டிருந்த தசைப்பிடிப்பான, "காட்ட வேண்டியதைக் காட்டி பெற வேண்டியதைப் பெறுவோம்", "கொள்ள வேண்டிய தைக் கொள்ளுக தள்ள வேண்டியதைத் தள்ளுக" போன்ற சொற்ருெடர்கள் ஆங்கிலச் செல்வாக்கு மிக் கவை. அண்ணு தமது ஆங்கில எழுத்திலும் இத்தகைய தர மான சொற்ருெடர்களை வெற்றிகரமாக பின்னிக் கொண் டனர். உதாரணமாக :- "North flourishes South perishes" ('வடக்கு வாழ்கிறது தெற்குத் தேய்கிறது'), "Determination ever, Deviation never" (என்றும் உறுதியுடன், ஒரு போதும் வழுவாது') போன்ற சொற்ருெடர்களைக் கூற லாம்.

தமிழ் நாட்டு அரசியலில் 'Opposition party' (எதிர்க் கட்சி) என்ற தொடருக்கு 'alternative party' (மாற்றுக் கட்சி) எனத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத விளக்கம் தந் தவர் அண்ணுவே.

தமிழ்மக்களுக்குத் தமிழ் மொழியும் ஆங்கிலமும் இன்றியமையாதன என அண்ணு எண்ணினுர். தமிழ் மக னின் உள்நாட்டுத் தொடர்பு தமிழிலும் உலகத் தொடர்பு ஆங்கிலத்திலும் என்பதே அவர் நிலேயாகும். எனினும் உயிரனைய தமிழ்த்தாயுடன் ஆங்கிலத்தை ஒப்ப நினைக்க வும் அவர் மனம் ஒப்பினுரில்லே. 'உரிமைக்குத் தமிழ்த் தாய், உதவிக்கு ஆங்கில அணங்கு' என நிறுவிக் கொண்ட அண்ணு, தாம் முதலமைச்சரானதும் தமிழ் நாடு பொலீஸ் துறையினரால் நடாத்தப்பெற்ற விழாவொன்றில் பங்கு கொண்டு விருது வழங்கிப் பேசும்போது "தமிழரான தமிழ் நாட்டுத் தலேமைப் பொலீஸ் அதிபர், தமிழ் தெரிந்த பொலிஸ்காரர்கள் மத்தியில், தமிழ் தெரிந்த தம்மை ஆங் கிலத்தில் வரவேற்பதன் அர்த்தம் தெரியவில்லே" யென எவர் மனமும் புண்படாது நகைச்சுவையோடு குறிப்பிட் டார். அண்ணு ஆங்கிலத்தில் வல்லவராயினும் தமிழ்த் தாயைப் புறக்கணித்து ஆங்கிலத்தை மோகித்த பொல் லார் அல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளத்திலே நல்ல உள்ளத்திலே — எழுந்
தூறிவரும் எண்ண மாகிய பைம்புனல்
வெள்ளத்திலே இன்ப வெள்ளத்திலே — இந்த
மேதினி மக்கள் நலம்பெறு வாரென்று
........................................ ... ..."

— புரட்சிக்கவி பாரதிதாசன்

# சிந்தனைச் சிற்பி அண்ணு

அண்ணுவின் சிந்தனைச் சிதறல்களாகத் தெறித்த அணிமொழிகள் ஆயிரம். உலகின் சிந்தனைச் சிற்பிகளின் வரிசையிலே அண்ணுவையும் அமரவைக்கும் அன்னுரது சிரஞ்சீவித்துவம் பெற்ற சிந்தனைகள் நந்தமிழர் நினைவுக்கோர் சிறப்புப்பாயிரம். சீனத்துச் சிற்பி மாவோவின் சிந்தனைகளையொத்த தறுகண்மை சார்ந்த நிந்தனைகளல்ல அவை; அன்புமுனையிலே ஊற்றெடுத்த அருஞ்சுனைகள்; அகலமாக அல்ல, ஆழமாக உழுதிட்ட ஏர் முனைகள்.

நாட்டுக்குச் சேவை செய்யவந்த நாகரிகக் கோமாளியாம் 'நல்லதம்பி'யின் வாயிலாக அண்ணு சிந்திய சிந்தனைகள் முளைவிட்டுச் செடியாகி கிளைவிட்டு மரமாகி நிற்கும் சீர்த்தி அண்ணுவின் கீர்த்தி கூறும். வியர்வை சிந்தாமலேயே ஆண்டாண்டு காலமாக அறுவடை செய்துவரும் ஓர் வர்க்கத்தின் வார்ப்படமான வேதாசல முதலியாரின் மகளை 'வேலைக்காரி' மூலமாகக் கேட்கிறுர் அண்ணு. '(பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாது காத்து) தங்கத்தாலே சோறு சமைத்து வைரவறு வலும் முத்துப்பச்சடியும் கோமேதகக் குழம்புமா வைத்துச் சாப்பிட்டான் உன் அப்பன்?' என்று. இந்தக் கேள்வியிலும் கிண்டலிலும் ஊற்றெடுக்கும் கருத்துப் புரட்சிதான் என்ன? 'முத்துப் பச்சடி' என்னும் போதுதான் எத்துணை இயல்பான வார்த்தைச் செறிவு! அதே 'வேலைக்காரி' திரைப்படத்தில் வடநாட்டு வக்கீலின் வாயிலாக சட்டம் பொருளியலுடன் சம்பந்தப்பட்டது என்பதைப் புட்டுக் காட்டுகிறார்:- "சட்டம் ஓர் இருட்டறை; அதிலே வக்கிலின் வாதம் ஓர் விளக்கு. அது ஏழைகளுக்குக் கிட்டாது." வேதாசல முதலியாரைப் பழிவாங்குவதற்காக கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறான் அப்பாவி ஆனந்தன். ஆனந்தனுக்கு அவன் நண்பன் மணி கூறும் கூற்று, சமுதாயப் புரட்சி காண ஆயுதப்புரட்சி அவசியம் என்னும் அவசரச் சித்தாந்திகளுக்கு அண்ணா கூறும் ஆலோசனையாகும். 'நறுக்' கென்று சுருக்கமாகச் சொன்னார் அண்ணா, 'கத்தியைத் தீட்டாதே ஆனந்தா, உன் புத்தியைத் தீட்டு' என்று.

'எதற்கு அழைப்பு? அரசமைக்கவா, அரசோச்சவா?' என்ற அண்ணாவின் வாசகம் ஈழத் தமிழ்மக்களின் இற்றை அரசியல் மயக்கங்களின் பின்னணியில் விளக்கம் தரும் விடிவெள்ளியாகும். முன்னையது முதுகு சொறிவது பின்னையது அதிகாரம் பெறுவது. முன்னையது படிக்கல்லாகத் தேய்வது பின்னையது முனைக்கல்லாக நிற்பது. முன்னையது இன்னொருவர் ஆட்சிப்பீடம் ஏற உதவுவது பின்னையது தானே ஆட்சி செலுத்துவது. எத்துணை தாக்கமான வார்த்தைகள்!

## தெறித்த முத்துக்கள்.....

அண்ணாவின் அரசியல் வாழ்விலே பல்வேறு கட்டங்களிலும் காலத்தால் சாகாத வார்த்தைகளை அன்னார் சிந்தியதுண்டு. அவ்வித்தகனின் நாவிலிருந்து தெறித்த முத்துக்கள் சிலவற்றைக் காண்போமா?

* "கண்ணீர்த் துளிகளே! என் கண்ணின் மணிகளே!" — பெரியார் ஈ. வே. ராவின் திராவிட கழகத்திலிருந்து 'கண்ணீர்த்துளியுடன் வெளியேறுகிறோம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அண்ணுவின் தலைமையிலான தம்பிகள் வெளியே றியபோது, பெரியார் அண்ணுவையும் தம்பியரையும் 'கண்ணீர்த் துளிகள்' என நிந்தித்தார். தி. மு. க. வைத் தொடக்கிய அண்ணு அதன் முதற்கூட்டத்தி லேயே பெரியாரின் நிந்தனையைப் பல்லவியாகக் கொண்டு தன் தம்பியரை விழித்தார். 'கண்ணீர்த் துளி களே! என் கண்ணின் மணிகளே!' என்று தன் தலை மையுரையைத் தொடக்கினுர்.

★ 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'—இவை தம் தம்பி யருக்கு அண்ணு வழங்கிய தாரகமந்திரம். இன்று தி. மு. க. வை இணைத்து வைத்திருப்பவை இம் மூல மந்திரங்களே. இவை 'கடமை, ஆணை, இறைமை, வன்மை' எனத் தத்துவஞானி ஆஸ்டின் (Austin) வகுத்த தத்துவங்களை நினைவூட்டுவன.

★ 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'—அரசியல் எதிரிகளால் வாயடியும் கையடியும் பட்டு உள்ளமும், சில சமயங்களில் உடலும் புண்பட்டுப்போன தம்பிய ருக்கு அண்ணு தந்த மாமருந்து.

★ 'தம்பியுடையான் படைக்கஞ்சான்'—ஆளுங்கட்சியின ரின் அடக்குமுறைப் பயமுறுத்தலுக்கு அண்ணு வைத்த ஆப்பு. பணப்பெருமையோ பாரம்பரியப் பெருமையோ, பதவிப்பெருமையோ அற்று, அந் தஸ்துவலியும் அணிவலியும் தோள்வலியுமற்ற நாட் களில் அண்ணுவுக்கிருந்த ஒரே பெருமிதம் இதுவே.

★ "வெட்டி வா என்ருல் கட்டி வரும் தன்மையர்"—தன் தம்பியர் தன் ஆணைக்கு எத்துணை கட்டுண்டவர் என்பதையும், அவர்தம் தாளாண்மை எத்தன்மைத்து என்பதையும் விளக்க விழைந்த அண்ணுவின் பெருமிதப் பேச்சு இது. எள்ளென்று கூறிமுடிக்குமுன்னரே எண் ணெயாக்கித் தரும் தன் தம்பியர், வயலில் சாய்ந்து விட்ட கதிர்களை அறுவடை செய் என அனுப்பினுல், அவற்றை அறுவடை செய்து கட்டி வீட்டுக்கும் இட்டு வந்து விடுவார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" — அறப் போரில் குதிக்குமாறு தன் தம்பியருக்கு ஆணையிட்ட காலையிலும், தேர்தற்களத்தில் குதிக்கத் தீர்மானித்த போதும் அன்று நாடாண்ட கட்சியினர் நகைத்த துண்டு. ஆணிவேரோடு கருகிவிடுவர் என ஆருடம் கணித்ததுண்டு. தன் தம்பியரின் வலிமையை அறிந்த அண்ணாவின் நம்பிக்கையை உணர்த்தும் இவ்வார்த்தைகள் வீர வரலாறு படைத்த சரித்திரச் சான்றோர்களின் கூற்றுக்களை எதிரொலிக்கும். தம்பியர் பட்டாளத்திற்கு இவை தூண்டுகோலென்றால், தானைத் தளபதி அண்ணாவுக்கும் அவையே ஊன்றுகோலாம்.

★ 'மறப்போம், மன்னிப்போம்' — 'சென்றேன், கண்டேன், வென்றேன்' என்ற சீசரின் வரலாற்றுப் பெருமைமிக்க வார்த்தைச் சிக்கனத்துடன் அண்ணா கூறிய இவ்வார்த்தைகள், வெற்றிகொண்ட தன் தம்பியர் விரோதிகளைப் பழிவாங்கத் தலைப்பட்ட போது கூறியவையாகும். இவ்வார்த்தைகள் அண்ணாவின் விரிந்த உள்ளத்தை மட்டுமல்ல, வார்த்தைகளைத் தெரிந்து தொடுத்த உத்தியையும் காட்டுவன.

★ "மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகையும் மணம் கமழும்" — தமது கோரிக்கைகளின் நியாயத்தை, தமது இயக்கத்தின் சாதனைகளை, தன் தம்பியரின் திறமைகளை, கணிக்க மறுத்த மாற்றுக் கட்சியினரிடம் எவ்வளவு நளினத்துடன் கூறினார். மாற்றுக்கட்சிகளின் சாதனைகளையும், திறமைகளையும் நன்மைகளையும் கணிக்குமாறு தன் தம்பியருக்கு அவர் இடித்துரைத்த இங்கிதமும் இதுவே.

★ "எங்கிருந்தாலும் வாழ்க" — தனது தோட்டத்திலிருந்த சிவாஜி கணேசன் என்ற மல்லிகை இன்று மாற்றான் வீட்டுத் தோட்டத்திலிருந்தாலும் நன்றாக மணம் கமழ்கிறது என்பதைக் கண்ட அண்ணா நடிகர் கணேசனுக்கு வழங்கிய வாழ்த்து இது. தன்னால் கருவாக்கி உருவாக்கப்பட்ட மலர்க்கொடி, இன்று மாற்றானுக்கு மணம் தருகின்றதே; கருக்கிவிடுகிறேன் எனக் கறுவிக் கொள்ளவில்லை அண்ணா. தான் தொட்டு வளர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி பட்டுப் போக வேண்டாம் என்ற பரந்த உள்ளம் அண்ணருக்கு; 'வாழ்க' என்கிறர்.

★ ''என்னிதயம் பரந்தது; எங்கும் செல்லாதீர்கள், இங் கேயே அனைவரும் குடியிருக்கலாம்'' — திரு. ஈ. வி. கே. சம்பத் தம்மைவிட்டுப் பிரியத் துணிந்தபோது அண்ணு நெகிழ்ச்சியுடன் கூறிய வார்த்தைகள் இவை கள்.

★ ''நாம் எதிர்க்கட்சியினர், எதிரிக்கட்சியினரல்ல'' — பாராளுமன்ற சம்பிரதாயங்களையிட்டு மயக்கம் கொண்ட ஆளுங்கட்சிக்கு அன்று அண்ணு தந்த விளக் கம் இது.

★ ''Tap the rich and pat the poor'' ('பணக்காரரைத் தட்டி எடு, பஞ்சையரைத் தட்டிக் கொடு') — முத லமைச்சரான அண்ணு நிதியமைச்சராகவும் பணியாற் றினர். அப்போது வரி விதிப்புப் பற்றிய தமது கொள் கையை மிகவும் அழகான ஆங்கிலத்தில் தெளியத்தந் தார். வார்த்தைச் சிக்கனம், வார்த்தைச் சிலம்பம், 'சோஷலிசத் திட்டம்' என்று கூறுமற் கூறும் பொருட் செறிவு, இத்தனையும் இழையோட எத்துணை நளினத் துடன் எடுத்துரைத்தார்.

★ 'நான் சாமானியன்' — தான் தொட்ட துறை அத்தனை யும் துலக்கி, தானும் துருவ நட்சத்திரமாகத் துலங் கிய அண்ணு, தன் எளிமையும் தன்னடக்கமும் இழை யோட என்றுமே இவ்வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டார். 'சாமானியன், சாமானியன்' எனக் கூறிக்கொண்டே பாரிய ஓர் அரசையே கைப்பற்றிய அதிசய மனிதர் அண்ணு ஒருவரே. தமிழ் நாட்டின் சக் கரவர்த்தியாகப் பதவியேற்றுக்கொண்ட பின்னரும் தான் 'சாமானியன்' என நிறுவத் துடித்த விசித்திர மனிதரும் அவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’

— திருமூலர்

# சமயநெறியில் அண்ணு

அண்ணுவின் சமயநெறி விவாதத்திற்கு விளைநிலமாகும். மதமாச்சரியங்களைச் சாடுவதில் அண்ணு தொடக்க காலத்தில் காட்டிய தீவிரமும் இடைக்காலத்திலே இப் போக்கில் விரவிய இங்கிதமும் இறுதிக் காலத்திலே உறுதியாக நிறுவப்பட்ட ‘சமரச சகவாழ்வு’ கொள்கையும் சமயத்துறையில் அண்ணுரை அடையாளம் கண்டுகொள்வதில் மயக்கத்தை உண்டுபண்ணுவன. சமயத்துறையில் அண்ணுவின் நிலைபற்றி மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவ இடமுண்டு. (1) கடவுளையே மறுத்துரைத்த நாத்திகன் என்பது. நாத்திகம் பேசிப் பேசி நாத்தழும்பேறியவர்கள் என வைதிகர்களால் சாடப்பட்டவர்கள் அண்ணுவும் அவரது அணியினரும். அண்ணுவின் ‘பரந்தாமனுக்குப் பகிரங்கக் கடிதம்’, ‘பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம்’, ‘தேவலீலைகள்’ போன்ற எழுத்துக்கள் இக்கருத்தை வலியுறுத்துவன. (2) சமயத்தின் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து மூடநம்பிக்கைகளை மட்டும் சாடிய பகுத்தறிவுவாதி என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது. பல்லவநாடு தந்த பகுத்தறிவுச் சிங்கம் என விதந் தோதப்பெற்றவர் அண்ணு. அண்ணுர் தீட்டிய 'நல்லதம்பி' (திரைப்படம்), 'இரங்கூன் இராதா' (நாவல்), 'புராண மதங்கள்' என்பன இக் கருத்தை நிறுவுதற்கு ஏதுவா னவை. (3) பதினுரும் நூற்ருண்டிலே கிறித்துவ மண்டலத் தின் மத பீடங்களிலும் மடாலயங்களிலும் ஊடறுத்துப் பரவிய ஊழல்களையெல்லாம் களையப் புறப்பட்ட மாட்டின் லூதரை யொத்த மதப்புரட்சியாளர் அண்ணு என்பது. அண்ணுவின் 'சொர்க்கவாசல்' (திரைப்படம்) போன்ற படைப்புக்கள் இக் கருத்தை ஊக்குவிப்பன.

## வேற்றுச் செல்வாக்கிற்கு எதிராக.....

அண்ணுவின் சமயக் கண்ணேட்டங்கள் எவ்வெக் கால கட்டங்களில் எத்தகைய சமூக அரசியல் பின்னணியிலி ருந்து எத்தகைய பின்னணிக்கெதிராக வெளிவந்தன என் பதை எண்ணிப் பார்ப்போர் அண்ணுரை நாத்திகன் என நாத்தடிக்கக் கூருர். அண்ணுவின் ஆரம்ப, இடை, இறுதிக் காலங்களில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்கும் இந்த சமூக அர சியல் பின்னணிகளின் மாறுபாடே காரணமாகும்.

மாட்டின் லூதருடைய 'மதப்புரட்சி' எனப்பெற்ற மதச் சீர்திருத்தம் (Reformation) இங்கிலாந்தில் எதிரொ லித்தபோது, அங்கு அது புதிய, மாறுபட்ட, உணர்வுட னும் உருவுடனும் பரவியதை வரலாற்று மாணவர் அறி வர். எட்டாம் ஹென்றி மன்னன் தலைமையில் செயற்பட்ட இவ்வியக்கம், ஜெர்மனியிலும் இதர ஐரோப்பிய நாடுகளி லும் நிகழ்ந்தது போன்று கத்தோலிக்க கோட்பாடுகளை யும் நடைமுறைகளையும் எதிர்க்கும் ஓர் இயக்கமாக மாற வில்லை, 'கத்தோலிக்க மதத்தின் காவலன்' '(Defender of the Faith') எனப் போப்பாண்டவரிடமே புகழாரம் பெற்ற வனுயிற்றே ஹென்றி மன்னன். இங்கிலாந்தின் மதப் புரட்சி இயக்கம் ஓர் சுதேசிய - விதேசிய போராட்ட இயக்கமாக மாறியது. இங்கிலாந்து நாட்டிலே உரோமா புரி நடாத்துகின்ற அரசியல் ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல், சமூகச் சீரழிவு இவற்றிற்கெதிரான இயக்கமாக உருவெடுத்தது. அன்றைய போப்பாண்டவர்கள் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களைப் போன்று புனித நீர்மையர் அல்லர்; போர் வேட்கை கொண்டவர்கள், அரசியல் 'தில்லு முல்லுகளில்' உழன்றவர்கள், அரசுக்களை ஆட்டிப்படைத்தவர்கள். தன் சொந்தநாட்டிலேயே எந்தநாட்டிலோ இருக்கும் ஒரு போப் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதையும், தனது தீர்ப்புகளுக்கு எதிராக உள்நாட்டு மதபீடங்களிடமிருந்து வரும் மேன்முறையீடுகளைக் கேட்பதையும், மத மரபு வரிகளாக ஏராளமான செல்வத்தை இங்கிலாந்திலிருந்து பெறுவதையும், கத்தோலிக்க மக்களின் சமய நெறியை மட்டுமல்ல சமூகநெறியையும் நிர்ணயிக்கத் தலைப்படுவதையும், தன் ஆதிக்கத்திற்கும் இங்கிலாந்தின் தேசியத்திற்கும் இத்தாலிவிடுக்கும் ஓர் அறைகூவலாகவே மன்னன் கருதினான்.

## 'ஆரிய மாயை'

அண்ணாவின் சமயக் கண்ணோட்டமும் பெரிதும் இத்தகைய உணர்வுகளால் உருவாக்கப்பட்டதே. திராவிட மக்களை ஆரியர்கள் அரசியற்றுறையில் அடிமைகொண்டு ஆதிக்கம் செலுத்தவும், பொருளாதாரத் துறையில் சுரண்டவும், சமூகத்துறையில் சமத்துவத்தை மறுத்து பிற்போக்குவாதிகளாக்கவும் தலைப்படுகின்றனர் என அண்ணா கருதினார். திருவெண்ணெய் நல்லூர் சிவலிங்கமும் எள்ளெண்ணெய் ஊற்றும் செக்கும் ஆரியவாத அனுச்சாரங்களினால் பாமரப்பார்வைக்கு ஒரே அமைப்புடன் காட்சி தந்த நாட்கள். அன்று தமிழர் சமயம் எது ஆரியர் சமயம் எது எனப் பிரிக்கமுடியாதபடி சமயச் சம்பிரதாயங்களும், சடங்குகளும் பிணைந்துபோய்க் கிடந்தன. வைதீகமும் வர்ணாச்சிரம தர்மங்களும், பிராமணீயமும் தமிழ்நாட்டுக் கோவில்களில் தர்பார் நடாத்தின. இத்தனையும் ஆரியம் தான் என உறுதி செய்வது போன்று சமஸ்கிருதம் கோவில்களில் கோலோச்சிற்று. தமிழ் உயர்ந்ததா சமஸ்கிருதம் உயர்ந்ததா? தனித்தமிழ் என ஒன்று இருக்க முடியுமா? என்ற வாதப்பிரதிவாதங்கள்கூடத் தமிழ்நாட்டில் ஆச்சாரியார்கள், ஐயங்கார்களால் நடாத்தப்பட்ட வேளை அது.

அத்தகைய சூழ்நிலையில் இத்தனையும் 'ஆரியமாயை' தான் என அண்ணா என்ற ஈட்டி பாய்ந்து சமயத்தை, சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதாயங்களை, சடங்குகளை, தாக்கியதில் ஆச்சரிய மென்ன?

## பின்னணியில்...

எத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி யிலிருந்து இந்த ஈட்டி பாய்ந்தது என்பதையும் நோக்க வேண்டும். பிராமணர்கள் நாட்டின் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். பிராமணிய ஆதிக்கத்தை எதிர்த்து பெரியார் காங்கிரசைவிட்டு வெளியேறி விட் டார். இன்னும் பலர் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். பிராமணரல்லாதார் நீதிக்கட்சியை நிறுவியுள்ளனர். தமது அரசியல் ஆதிக்க பலத்தைக்கொண்டு ஆரியர்கள் கள் இந்திமொழியைத் தமிழர்மீது திணிக்க முற்படுகின் றனர். இதனை எதிர்த்து 1937-ம் ஆண்டு தொட்டு தமிழர் கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இந்தி எதிர்ப்புப் போரில் மாண்ட தாளமுத்து நடராஜன் பிணங்கள் தரை யிலே குருதி வெள்ளத்திலே கிடக்கின்றன. அந்த இந்தியின் மூலமொழி சமஸ்கிருதம் தேவபாஷையாக தமிழகத்துக் கோவில்களிலே கோலோச்சுகிறது. அதற்குப் பிராமணியம் அரண்செய்கிறது. இவை அரசியற்றுறையிலே.

சமுதாயத்துறையிலே, திராவிட இனம் ஆரியர்களால் திணிக்கப்பட்ட சாதிமுறையால் பிளவுண்டு சின்னபின்ன மாகிக் கிடக்கிறது. சாதி முறைக்கு நான்மறைகள் ஆதா ரம் தருகின்றன. "நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக', என ஏத்தி நான்மறைகளைத் தமிழ் மக்கள் ஏற்றுவிட்டனர் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்றும் "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என் றும் பிராமணீயத்தையும் பெருமைப்படுத்தி விட்டது தமி ழினம். பிராமணீயத்திலிருந்து தமிழர்சமயத்தைப் பிரித் தெடுக்க முடியாதபடியும், சாதிமுறை ஆரியரின் திணிப்பு என்று கூற முடியாதவாறும் தமிழ்மக்களின் மனமட்டத் திலே அவை இனந்தெரியாதவாறு இணைந்து விட்டன. இந்த நிலையில் "பாதி ஆரியநெறி மீதிதான் எமதுநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நெறி'' எனக் கூறுவது பாமரமனத்தில் பதியக் கூடிய பலமான வாதமாகத் தெரியவில்லை. முழுவதையுமே ஆரியமாக்கி நிராகரிப்பதன்மூலம்தான் தமிழ்மக்களை மீட்க முடியும் என்ற நிலை இருந்தது.

## பேரணிகள்

பொருளாதாரத்துறையிலே வடநாட்டிலே இல்லாத, வறுமை தென்னாட்டை வாட்டுகிறது. பாரதமாதாவின் புதல்வர்களில் திராவிடர் மட்டுமே வேலைதேடி வெளிநாட்டுக்குக் கப்பல் ஏறுகின்றனர்—கள்ளத்தனமாக. தமிழகத்து வீதிகளிலே பிள்ளைகளை விலைகூறி விற்கின்றனர்.

இந்த நிலையில், ஆரிய ஆதிக்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிராமணீயம், பிராமணர்களைத் தமது முகத்திலிருந்து உருவாக்கிய கடவுள், அந்தக் கடவுளின் 'பாஷை' யான சமஸ்கிருதம், அதனை மூலமொழியாகக் கொண்ட ஆதிக்க இந்தி இவை ஒருபுறமும், இவைக்கெதிராக எளியனை சூத்திரத்தமிழனும் இந்தி, ஆதிக்கத்தால் இடர்ப்பட்ட தமிழ் மொழியும் எதிரும் புதிருமாக அணிதிரண்டுள்ளது போன்ற அரசியல், சமூக பொருளியல் பின்னணியிலிருந்து புறப்பட்ட ஈட்டி, எதிர்ப்புறத்தில் தோன்றிய அத்தனை சக்திகளையும் 'ஆரியத்தின்' அரண்களாக எண்ணித் துளைக்க முற்பட்டமை வியப்புக்குரியதல்ல; ஒரு வகையில் அன்று அது அவசியமே.

## இதிகாச எதிர்ப்பு......

இராமாயணம், மாகாபாரதம் ஆகிய இதிகாசங்களுக்கு எதிராக அண்ணா தொடுத்த போரும் இந்த உணர்வின் விளைவேயாகும். இராமாயண எதிர்ப்புவாதங்கள் கவியரசன் கம்பனுக்கு எதிராக ஏவப்பட்டவையல்ல; இராமாயண இதிகாசபாத்திரங்களுக்கு எதிராக ஏவப்பட்டவை அவை. மகாபாரத எதிர்ப்புவாதங்களும் அத்தன்மைத்தே இராமர், சீதை, அர்ச்சுனன், வீமன், தருமர், திரௌபதை இத்தியாதி பாத்திரப்படைப்புகள் தமிழர் வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தும் தன்மையன அல்லவென அண்ணு கருதி ஞர். அவைக்குத் தெய்வாம்சம் தரப்பட்டு அவை தமிழர் நெஞ்சிலும் நினைவிலும் நிலையான இடத்தைப் பிடித்து விடக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கண்டு அண்ணு அஞ்சினுர். திராவிடர் வாழ்வைக் கப்பிவிட்ட எந்த ஆரியச் செல்வாக் கைத் தாம் பெயர்த்தெறியப் புறப்பட்டோமோ அந்தச் செல்வாக்கை இப்பாத்திரவழிபாடுகள் நிலைநிறுத்திவிடுமே எனப் பேதலித்தார். அதனுல், இப்பாத்திரப்படைப்புக் களின் தெய்வாம்சங்களை உடைத்தெறிய வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது. வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன் வீரஞவாஞ? பஞ்சவரை மணந்த திரௌ பதி பத்தினியாவாளா? என்பனபோன்ற வாதங்களும், கற்புக்குக் கண்ணகி, வில்லுக்குச் சேரன், சொல்லுக்கு கீரன் என்ற வழக்குகளும் உறுதிபெற்றன. கற்புக்கு சாவித்திரி, அருந்ததி, நளாயினி, திரௌபதி, என்றிருந்த நிலையும் வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அரிச்சந்திரன் என்றிருந்த நிலையும் இற்றுப் போனமைக்கு அண்ணுவே காரணகர்த்தா. கண்ணகி, மாதவி, மணிமேகலை, கோப் பெருந்தேவி, போன்ற தமிழ்வேரில் தளைத்த படைப்புக் களுக்கும், திரௌபதை, போன்ற படைப்புகளுக்குமிடை யேயுள்ள பண்பாட்டு வேறுபாடுகள் ஆய்வுக்குரியன. அவற் றைப் படம்பிடித்துக்காட்டியவர் அண்ணு.

## கம்பனும் இளங்கோவும்.

கவியரசன் கம்பனின் கவித்துவத்தின் மகத்துவத்தை அண்ணு ஏற்றுக்கொண்டாரா? கம்பனின் கவிகளால் புனை யப்பட்ட பாத்திரப்படைப்புகளை சிரஞ்சீவித்துவமற்றவை எனத் தமது 'தீ பரவட்டும்' வாதங்களினுல் நிறுவுவதில் அண்ணு வெற்றிபெற்ருரா? அண்ணுவின் இராமாயண எதிர்ப்பு வாதங்கள் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இராமர் - சீதா வழிபாட்டில் ஏற்படுத்திய தாக்கம்தான் என்ன? இவைபோன்ற கேள்விகட்கு 1968 ம் ஆண்டு சென் னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு விடைதந்துள் ளது. கம்பனின் கவிச்சிறப்பு காலத்தால் கட்டுண்டதல்ல, சிரஞ்சீவித்துவம் வாய்ந்த பெருமைமிக்கான் அவன் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை உறுதிசெய்ய உருவாகியதன்றோ மரீனாக்கடற்கரையில் கம்பனுக்கோர் சிலை. ஆனால், அவன் படைத்த பாத்திரங்களுக்கு? அவை செந்தமிழர் சிந்தையிலே சிரஞ்சீவித்துவம் பெறவில்லைப் போலும். ஆனால் சிரஞ்சீவித்துவம் பெற்ற கற்பனைக்கெட்டாத அற்புதப்படைப்பு ஒன்றுக்கும் அங்கு சிலைநிறுவப்பட்டது. அது தான் கற்புத் தெய்வம் கண்ணகி. இங்கு சிறப்பிக்கப்பட்டது கவிஞர் இளங்கோவடிகள் அல்லர், அன்னாரின் படைப்பே சிறப்புப்பெற்றது. கண்ணகி சிரஞ்சீவித்துவம் பெற்றமையால் இளங்கோவடிகளும் சிரஞ்சீவித்துவம் பெற்றார். இதனால் சேரன் தம்பிக்கு இரட்டைச்சிறப்பு. தமது நோக்கிலே அண்ணா வெற்றிபெற்றதை யாவரே மறுப்பார்? இராமாயணப் படைப்புகளுக்கெதிராக அண்ணா கண்ட குறை அவற்றின் தெய்வாம்சம் என்பதல்ல; அத்தெய்வாம்சம் தமிழர்க்குப் புறம்பானதும் தீமைபயக்கும் தன்மையதும் என்பதே. அன்னாரின் கருத்துத் தெளிவாக வேண்டும். கண்ணகிகூடத் தெய்வாம்சம் பொருந்திய படைப்பே எனினும், அத்தெய்வாம்சம் தமிழர் சால்பில் உருவானது. எனவே அது ஏற்புடைத்து.

## திருமொழிகள் தேர்ந்து...

தமிழர் சால்பில் உருவான தெய்வீகத்தை, சமய நெறியை அண்ணா எதிர்க்கவில்லை என்பதை அன்னாரது இடைக்காலத்து எழுத்துகளும் பேச்சுக்களும் தெளியத் தந்தன. மூட நம்பிக்கைகளைக் கண்டிக்க முற்பட்ட அவர் சமயச்சான்றோர்களும், சித்தர்களும், சிவநெறிச் செல்வர்களும் நிறுவிய தளத்தின் மீது நின்றே கண்டித்துள்ளார்.

திருமூலரின் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமொழியைத் தமது தாரகமந்திரமாகக் கொண்ட அண்ணா நாத்திகராக முடியாது.

**"கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகட்டும்"**

*(வள்ளலார்)*

**"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்**
**சேர்ந்திட லாமென்றே எண்ணி யிருப்பர்**
**பித்த மனிதர்................ ... ........"**

*(பாரதியார்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்............"

(ஏணிச்சேரி முடமோசியார்)

"கோயில்முழுதும் கண்டேன் கோபுரமேறிக்
கண்டேன்
தேவாதிதேவனை நான் தேடியும் கண்டிலனே"

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

இன்னோரன்ன மேற்கோள்களைக் காட்டியே அண்ணா தம் சமயக் கருத்துக்களை நிறுவத் துடித்தார் என்பதைக் கொண்டு அவர் மேற்கொண்டது மத இகழ்ச்சியல்ல, மதப் புரட்சி என்பதும், அவர் தூண்டியது தெய்வ நிந்தனை யல்ல, தேர்ந்த சிந்தனையென்பதும் தெளிவாகும். தமது குருவாகிய பெரியார் ஈ. வே. ரா. தீவிரவாதப் போக்கிலுல் மேற்கொண்ட பிள்ளையார் உடைப்புப் போராட்டம் இராமர் பட எரிப்புப் போராட்டம் போன்றவற்றில் அண்ணா ஈடுபட மறுத்தார் என்பதுடன், அவற்றைக் காட்டு மிராண்டித்தனமானது எனவும் கண்டித்தார் என்பதைக் கொண்டு அண்ணாவின் சமயக் கண்ணோட்டம் புலனாகும். அங்ஙனமாயின் அண்ணா தூண்டிய சிந்தனையின் நோக்குத் தான் என்ன?

## தெய்வத்தலாகா(து) எனினும்...

அதனை அவர் வாயிலாகவே கேட்போமே. கேட்கின் றார் அண்ணா, "ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்த சரஸ்வதி படத்திற்கு ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்த கற்பூரத்தை கொழுத்தி தலையில் குட்டிக் கொள்கிறாயே, நியாயமா இது? உனக்கு வெட்கமாக இல்லையா" என்று. "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்" என வள்ளுவன் கூறியதை, அனுபவ உணர் வோடு கூறுகிறார் அண்ணா; அவ்வளவுதான். வள்ளுவன்வாச கத்திலுள்ள 'உம்' விகுதியை அண்ணா மறுக்கவில்லை, 'படத் தையும் கற்பூரத்தையும் உனது முயற்சியால் உருவாக்கி வணங்கிக் கொள் 'என்கிறார். 'எனது புனித யாத்திரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்கள் இந்நாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள தொழிற்சாலைகளே, என்று அமரர்நேரு கூறியதும் இக்கருத்தேயாம்.

## மூடநம்பிக்கைகள்

அண்ணாவின் புரட்சிகரமான மதக்கருத்துக்கள் தமிழகத்தில் வரவேற்கத்தக்க ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதை எவரும் மறுக்க முடியாது. கல்வியறிவற்ற பாமர மக்களிடையே நிலவிய அறிவுக்கொவ்வாத மூட நம்பிக்கைகளை, முற்றாக ஒழிக்க முடியாவிடினும், ஓரளவுக்காவது கட்டுப்படுத்திய பெருமை அண்ணாவுக்குண்டு. கண்மூடித்தனமான சமயச்சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் காலத்தையும் பணத்தையும் விரயம் செய்த பாமர மக்களிடையே ஒருவித புத்தறிவைப் பாய்ச்சிய அண்ணா, படாடோபமற்ற சிக்கனமான சீர்திருத்த திருமணங்களை ஊக்குவித்ததனால் ஏழை மக்கள் உய்ந்துள்ளனர். இராகு காலத்தில் திருமணம், மரணயோகத்தில் வேட்பாளர் மனுதாக்கல் போன்ற செயல்களை உற்சாகப் படுத்தி சமுதாயத்தின் சிந்தனையைத் தூண்டி வளர்த்துள்ளார். அறியாமையிலே மூழ்கிக்கிடந்த பாமரன் இனந்தெரியாத சம்பிரதாயங்களுக்கு அஞ்சி அடங்கிக் கிடந்த பரிதாபநிலையைத் தன் பகுத்தறிவுப் பணியால் போக்கியுள்ளார்.

## தமிழ் வழிபாடு

தமிழகத்திலுள்ள திருக்கோவில்களில் நிலவிய நிர்வாக ஊழல்கள் நீங்கவும், ஆட்சியாளர் ஆலய பரிபாலனத்தைக் கண்காணிக்கவும் அதற்கான சட்டதிட்டம் ஆக்கவும் ஏதுவாக, தமது கணைகளால் அரசாங்கத்தின் பார்வையை ஆலயங்களில் படியவைத்தவர் அண்ணா. ஆரியச் செல்வாக்கின் சின்னமாகிய சாதி உணர்வு ஆண்டவன் சந்நிதியில் படராவண்ணம் கோயில் தர்மகர்த்தாக்களாக தாழ்த்தப்பட்டோரும் பொறுப்பேற்கும் நிலையை உண்டு பண்ணியவர் அண்ணா. இத்தனைக்கும் மேலாக, தமிழ் மொழியே கோவில்களில் வழிபாட்டு மொழியாக வேண்டும் எனக் கோருவதற்கு வழிவகுத்தவரும், இதற்கென வாதிடுவதற்கோர் அணியை உருவாக்கியவரும் அண்ணாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் தமிழில் ஆராதனை நடைபெறவேண்டுமென இன்று குன்றக்குடி அடிகளும் சுத்தானந்த பாரதியாரும் சிவநெறியாய்ந்த தவநெறிச் செல்வர் பலரும் எழுப்பும் கோரிக்கைக்கு கருவும் உருவும் தந்தவர் அண்ணுவன்றே.

## பரிணும வளர்ச்சி

அண்ணுவின் தொடக்ககால தீவிர நோக்குக்கும் இறுதிக்கால நோக்குக்கும் இடையே ஏற்பட்ட மாற்றங்கள் ஒருவரின் கருத்து, கண்ணேட்டம், இவற்றின் பரிணும வளர்ச்சியைப் புலப்படுத்துவனவாகும். எந்தெந்த சக்திகளுக்கெதிராக அண்ணுவின் தீவிரவாதம் அன்று பிரயோகிக்கப்பட்டதோ, அந்தச் சக்திகள் இன்று வலுவிழந்துவிட்டன. பிராமணீயச் செல்வாக்கு பெயர்த்தெறியப்பட்டுவிட்ட காலகட்டத்தில், ஆரிய ஆதிக்கத்தின் பிரதிநிதியான இந்தித் திணிப்புக்கு எதிராக தமிழகம் முழுவதுமே திரண்டெழுந்து போர்க்கொடி உயர்த்தியுள்ளபோது, அன்று தூங்கிக்கிடந்த தமிழகத்தோடு பேசிய தொனியில் இன்று விழித்துக் கொண்ட தமிழகத்தோடு பேசவேண்டிய அவசியம் அண்ணுவுக்கு இல்லை. 'சாமான்யனுன' அண்ணு தமிழகத்தின் முதலமைச்சராக முடிசூடியதே தமிழ் மக்களின் எழுச்சிக்கும் விழிப்புக்கும் முத்திரையாகும்.

## தாக்கமும் நோக்கமும்.....

மேலும், தமிழ்மொழியின் வாழ்வையும் வளத்தையுமே தனது வாழ்வின் வேட்கையாகக் கொண்ட அண்ணு, அம்மொழியின் உயிர்நாடியான இலக்கியங்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட சமய இலக்கியங்களின் தொன்மையும் வன்மையும் அறிந்திருந்தார். அவை தமிழ்வாழ்வின் பிரிக்கவொண்ணுத ஓர் பெரும்பகுதி என்பதையும் அறிந்திருந்தார். அத்தகைய இலக்கியச் செல்வங்களையும், அவை கூறும் சேதிகளையும், அச்சேதிகள் தமிழ் மக்கள் சிந்தையிலே நிரந்தரமான நிலைக்களனைப் பெற்றுவிட்டன என்பதையும் அறிந்திருந்தார். இதனுல் முதலமைச்சரான அண்ணு கோவிலுக்கு விளக்கேற்றி வைத்த பவ்வியத்தையும் அறிந்தோம். இராஜாஜியின் தொடர்பு அண்ணுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தோட்டத்தில் ஏற்படுத்திய தாக்கமும், நாடாளுமன்றக்கட்சி என்ற நிலையில் நாட்டுமக்களின் நினைப்பை ஒட்டிச் செல்லும் நோக்கமும் அண்ணாவின் இறுதிக்காலக் கண்ணோட்டங்களை ஓரளவு செப்பனிட்டிருக்கலாம். மரணப் படுக்கையில் அண்ணா மயங்கிக்கிடந்த வேளையில், நாட்டு மக்களனைவரும் தம் அன்புத் தலைவன் உயிரைக் காக்குமாறு ஆண்டவனிடமல்லவா வேண்டி நின்றனர். எனவே தமிழ்நாட்டுமக்கள் அண்ணாவை அறிந்து கொண்டது நாத்திகனாக அல்ல; அண்ணா தன்னை அவர்களிடம் அறிமுகம் செய்ததும் நாத்திகனாக அல்ல.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கருத்தோட்டத்திலே காணக்கிடந்த புதுமையொன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். அண்ணாவிலும் தீவிரப் போக்குடையவர் புரட்சிக்கவிஞர். எனினும்

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற அடிகளிலே கவிஞருக்கோர் கவர்ச்சியுண்டு. 'பொன்முடி' திரைப்படத்தில் (கவிஞரின் 'எதிர்பாராத முத்தம்') இது புலனாகும். 'எதிர்பாராத முத்தத்'திலே பொன்முடி மேலும் கூறுவான்.

"புலமையில் மிக்கீர்; நாங்கள்
தென்னாட்டார்; தமிழர்; சைவர்
சிவனை வதைப்ப தான
இன்னல்சேர் யாகந் தன்னை
யாம் ஒப்ப மாட்டோம்.. "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்''

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# ஒப்புரவாளர் அண்ணு

''முற்போக்கு சக்திகளனைத்தையும் ஒன்றுபடுத்தி காங்கிரஸைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்த பெருமை அனைத்தும் அண்ணுவின் போர்த்தந்திரத் திறனுக்கும் மேதைத் தன்மைக்குமே சாரும். மாநிலத்தின் தி.மு.க.வுக்கும் அண்ணுவுக்கும் இதர இடதுசாரி சக்திகளுக்கும் எல்லாப் புகழும் சேருவதாக... இந்தியாவின் ஜனநாயக சோஷலிச இயக்கங்களுக்கு வலிவைக் கூட்டக் கூடியவராகவும், இந் நாட்டின் முற்போக்கு சக்திகளை ஒற்றுமைப்படுத்தவும் அண்ணுஅவர்கள் நீண்ட ஆயுளுடன் இருக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.'' — இது இந்திய இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலன் அவர்கள் அண்ணுவின் 59-வது பிறந்த தினத்தையொட்டி ''முரசொலி''—அண்ணு மலருக்கு அனுப்பிய செய்தியின் ஒரு பகுதியாகும்.

''மகத்தான தமிழ் மக்கள் உருவாக்கிய புகழ்மிக்க காங்கிரசல்லாத அரசின் தலைவராக இப்போது இருக்கும் அவரிடம் (அண்ணுவிடம்) இந்நாட்டின் முற்போக்கு ஜன நாயக சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி மக்களின் துயரங்களை அகற்றுவதற்கான தலைமையை நாங்கள் இயற் கையாகவே எதிர்பார்க்கிறோம் . ...''—இது இந்திய வலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. புபேஷ் குப்தா அண்ணா வின் 59-வது பிறந்ததினத்திற்கு அனுப்பிய செய்தியின் பகுதியாகும்.

## "சயன்ரிபிக் சோஷலிசம்"

ஆக, இந்தியாவின் இடதுசாரி உலகு அண்ணாவை ஓர் சோஷலிச சக்தியாக, முற்போக்கு சக்தியாக ஏற்றுக் கொண்டது. எனினும் அண்ணாவின் சோஷலிசச் சித்தாந் தம் மாஸ்கோவிலிருந்தோ பீக்கிங்கிலிருந்தோ இறக்குமதி செய்யப்பட்டதல்ல; அண்ணா தமிழ்நாட்டு மக்களின் சூழ் நிலைக்கும் தேவைக்குமேற்பத் தாமாக வகுத்துக்கொண் டது. அனுபவரீதியான சோஷலிசம் என்ற அர்த்தம் தொனிக்குமாறு தமது தத்துவத்தை 'சயன்ரிபிக் சோஷலி சம்' (Scientific Socialism) என அழைத்துக் கொண்டார். அண்ணா ஒரு சித்தாந்தத்தைத் தேர்ந்துவிட்டு அச் சிந்தாந் தத்தைத் திணிப்பதற்கு ஒரு சமூகத்தைத் தேடித்திரிந்தவ ரல்லர். சமூகப் பிரச்சினைகளை ஆழமாகவும் அகலமாகவும் பார்த்தும் படித்தும் அனுபவித்தும்விட்டு அவைகளைத் தீர்க்கக்கூடிய மருந்தாக ஒரு சித்தாந்தத்தைத் தேர்ந்து கொண்டவர். அண்ணாவுக்குச் சித்தாந்தம் ஒரு கருவிப் பொருளே தவிர இறுதிப் பொருளல்ல. (Means, and not the end)

சமுதாய அமைப்பின் பலவீனமான உறுப்புக்களின் பிரதிநிதியான அண்ணா சோஷலிசவாதியாக விளங்கியது வியப்புக்குரியதல்ல. அண்ணா சோஷலிச வாதம் பேசியவர் மட்டுமல்ல, சோஷலிசவாதியாக வாழ்ந்தவரும் கூட. இயல்பாக அவரிடம் அமைந்திருந்த ஆடம்பரங்களை வெறுத்த எளிமையிலே சோஷலிசவாதிக்குரிய பரிபக்குவம் காணக்கிடந்தது. அண்ணாரால் தமிழ் நாட்டின் லட்சோப லட்சம் தொழிலாளர்கள் ஏழை எளியவர்களுடன் தோழமை கொள்ளவும், அவர்தம் துயரங்களைப் புரிந்து கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவும் முடிந்தது. அண்ணா சோஷலிசத்தை ஒரு கருவியாகக் கைக்கொண்டதுடன் கம் யூனிஸ்டுகளின் தளங்களும் மிகவும் தளர்ச்சியடையத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பட்டன. தமிழ்நாட்டில் சோஷலிச சமுதாய அமைப்புக்கு மக்களைப் பக்குவப்படுத்தும் பணியில் கம்யூனிச இயக்கங்கள் சாதிக்க முடியாதவற்றை, சாதிக்க மறந்தவற்றை, அண்ணு சாதித்தார் எனின் அது மிகையாகாது.

## சமுதாயப் புரட்சி

பொதுவாழ்க்கையில் தமது கன்னி முயற்சியாகத் தொழிற்சங்கத்துறையில் ஈடுபட்டவர் அண்ணு. விம்கோ தொழிலாளர் சங்கம், துறைமுகத் தொழிலாளர் சங்கம் இவற்றில் பணியாற்றிய அண்ணுவுக்கு சோஷலிச உணர்வுகள் இயல்பாக அமைந்தவை. அன்னுரைப் பொறுத்தவரை சோஷலிசக் கொள்கை பொருளியலளவுக்கு சமூகவியலையும் சார்ந்த கொள்கையாகும். அண்ணுவின் பணிகளும் புரட்சிகரமான சாதனைகள் பலவும் அவர் சமுதாயப் புரட்சியில் கொண்ட நம்பிக்கையின் பிரதிபலிப்புகளாகும். அண்ணு சோஷலிசப் புரட்சியில் நம்பிக்கைகொண்டிருந்தாரா? 'ஆம்' என்பதற்கு ஆதாரங்கள் பல அண்ணுவின் வார்த்தைகளில் விரவிக்கிடக்கின்றன. உதாரணமாக 'சொர்க்கவாசல்' திரைப்படத்திலே ஒரு காட்சி. மன்னனைப் பார்த்துக் கேட்கிருன் கவிஞன். 'மன்னனே, வேலையற்றதுகள், அவர்களின் மனத்திலே விபரீதமான எண்ணங்கள், அதன் விளைவுகள் என்னவென்று புரிகிறதா தங்களுக்கு?'' சமுதாயத்திலே நிந்திக்கப்பட்டுக் கிடப்பவனுடைய மனத்திலே சிந்தனைப்புரட்சி ஏற்படுமானல் சோஷலிசப் புரட்சி தவிர்க்க முடியாததென்றல்லவா எச்சரிக்கிருர் அண்ணு.

சமூக பொருளியல் திட்டங்களில் அண்ணு தம்மைச் சோஷலிசவாதி என நிறுவிக்கொண்ட சாதனைகளிற் சிலவற்றைக் காண்போமா?

## தீண்டாமைத் தளங்கள்

தமிழ் நாட்டிலே ஆங்காங்கே திட்டாகிநின்ற தீண்டாமைத் தளங்களை உடைத்தெறிவதற்குத் தனியொரு மனிதராகவும் இயக்க ரீதியாகவும் அண்ணு எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட முயற்சி அளவிடற்கரியது. சாதிவெறியினால் சல்லடைக் கண்களாகத் துளைக்கப் பெற்றுள்ள ஒரு சமுதாய அமைப்பையும், அதனால் பலவீனப்பட்ட பாதுகாப்பு அரண்களையுமுடைய ஒரு பின்னணியில் நின்று பேதலிக்கின்ற இலங்கைத் தமிழ் மக்களுக்கு அண்ணா இப்பிரச்சினையை அணுகிய தன்மை சிந்தனைக்குரியதாகும். தாழ்த்தப்பட்ட தமிழர்கள் — 'தாழ்த்தப்பட்ட' தான், 'தாழ்ந்த' அல்ல-தாம் தமிழினத்திற்குப் புறம்பான உறுப்புக்கள் அல்லது தமிழினத்தின் உப உறுப்புக்கள் என்று எண்ணாது தமிழினத்தின் அடித்தளம் போன்ற உயிர் நாடியான உறுப்புக்கள் என்ற உணர்வு பெற வேண்டும் — என்று ஏனையோரால் கணிக்கப்பட வேண்டும்—எனப் போலும், அண்ணா அவர்களை 'ஆதித் தமிழர்' அல்லது 'ஆதித்திராவிடர்' என்ற பெயர்களால் அழைத்தார். அரசியல் ரீதியாக அவர்களை ஒரு வலிமைமிக்க உறுப்பாக, சக்தியாக ஒருமைப்படுத்தியதும் அண்ணாவே. ஒருமைப்படுத்தப்பட்ட அவ்வுறுப்பு தான் தனித்தன்மையானது என்ற உணர்வையும், அதனால் சாதி உணர்வையும், வளர்த்துக் கொள்ளாது, அந்த உறுப்பை தி. மு. க. விலிருந்து ஏனைய சமூக உறுப்புக்களுடன் இணைந்து இரண்டறக் கலந்து செயற்பட வைத்தார். அதாவது, ஒருசாதிக்கென ஒரு சங்கம் அமைக்கப்படுவதை வரவேற்றாரில்லை.

சாதியுணர்வை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைந்து பெயர்களோடு ஒட்டப்பட்டிருந்தவையான சாதிப் பெயர்களை நீக்கி எழுதவும், பேசவும் தலைப்பட்டவர் அண்ணாவே. தமிழ் நாட்டிலேயே எந்த இடதுசாரி இயக்கத்திற்கும் முன்னோடியாக, தம் எண்ணத்திலும் செயலிலும் அண்ணாதுரை முதலியார், இராமசாமி நாயக்கர், காமராஜ் நாடார், சிவஞானக் கிராமணியார் எனச் சாதிப் பெயரையும் இணைத்துப் பயன்படுத்தப்பட்டு வந்த வழக்கத்தை இயக்கரீதியாக நிராகரித்தது தி. மு. க. அண்ணா தொடங்கிவைத்த இந்தச் சமூகப் புனரமைப்புப் பணி இன்று நிச்சயமாகவும் நிதானமாகவும், தமிழ்நாடெங்கணும் பரவிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலப்பு மணம்

பெரியாரால் முன்மொழியப்பட்ட கலப்புத் திருமணத் திட்டத்தை வழிமொழிந்தவரும் பரந்த அளவில் செயற்படுத்தியவரும் அண்ணுவே. தி. மு. க. வின் தீவிரப் பணியினுல் கலப்புமணம் செய்திட்ட இருவெவ்வேறு சாதிகளுக்குரிய ஆணும் பெண்ணும் சமூகத்தின் கண்களில் புறக்கணிக்கப்பட்ட நிலைமாறி, பொதுவாக சமூகத்திலும், குறிப்பாக தி. மு. க. வட்டாரத்திலும், அவர்கள் செயற்கரிய செய்திட்ட தீரர்களாக மதிக்கப்படும் நிலை உருவானது. இக் கலப்புமணங்களை அண்ணுவும், அவரை அடியொற்றி ஏனைய தி. மு. க. தலைவர்களும் முன்னின்று நடாத்திவைத்தமையால், தி. மு. க. வைச் சுற்றி வளர்ந்த செல்வாக்கு கலப்புமணத் திட்டத்தையும் சுற்றி வளரலாயிற்று. தம் தலைவர்களின் ஆசிபெறுவதற்கு கலப்பு மணம் செய்வதே கணிப்புக்குரியதாகும் என்னும் நினைப்பு தி.மு.க. இளைஞர்கள் மத்தியில் நிலைபெற்றது.

தீண்டாமையின் மென்னியைத் திருகி எறியும் சாதனமொன்றை கலப்புமணத் திட்டத்திலேகண்ட அண்ணு, தாம் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் முதல் நடவடிக்கையாக கலப்புமணம் செய்தவர்களுக்கு தங்கப் பதக்கம் போன்ற அரசாங்க விருதுகள் வழங்கப்படும் அரிய திட்டத்தை வெளியிட்டார்; செயற்படுத்திஞர். தொடக்க காலத்திலே சமூகத்தின் அடிமட்டத்திலே நிகழ்ந்த 'அருவருப்பான' செயலெனக் கருதப்பட்ட கலப்பு மணத்திட்டம், சமூக மதிப்பீட்டில் உச்சத்திற்கு உயர்த்தப்பட்டு, அரசின் ஆசியையும் பாராட்டையும் பெற்றதோர் திட்டமாக உருமாறிற்றென்ருல், இதனைச் சாதித்த அண்ணுவை அந்தப் பெருமை சாரட்டும். அண்ணு அளித்த இத்தூண்டுதல் சமுதாயத்தின் செயற்கை வேலிகளைத் தாண்டி இளைஞர் பலர் வெற்றிவீரர்களாகத் தாழ்த்தப்பட்ட பெண்களைக் கைப்பிடிக்கவும், உயர் சாதிப் பெண்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களை மணக்கவுமான நிலையை பரந்த அளவில் விரிவுபடுத்தியதன் மூலம், வேலிகள் வேண்டாதவை என்ற உணர்வை ஊட்டி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சலுகை

தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வித்துறையின் வளர்ச்சி அவர்களைச் சமூகத்தின் மட்டத்தில் உயர்த்தும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்த அண்ணா. அவர்களுக்கு ஏற்கனவே கல்வித்துறையிலிருந்த சலுகைகளைப் பெருக்கியதுடன் புதிய சலுகைகளையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வழங்கினார். மருத்துவக் கல்லூரியில் வழங்கப்பட்ட சலுகைகள் குறிப்பிடத் தக்கவை. தாழ்த்தப்பட்ட வர்க்கங்களின் கல்வித் துறையும் ஆதலால் பொருள்வளமும் மேம்படும்போது சமுதாயத்தின் செயற்கை வேலிகள் உக்கி உலர்ந்து சரியத் தலைப்படுவது கண்கூடு. தமிழ் நாட்டின் பாரியபங்கினரான தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினர் தலையெடுப்பதற்குத் துணைநின்ற தலைவன் அண்ணா என்பதை உறுதி செய்வான்போலும், இன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து தெரிவு பெற்ற உறுப்பினர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தினர் தி. மு க வினரே.

## சீர்திருத்த மணம்

(2) கலப்புத் திருமணத்தோடு இணைந்த இன்னொரு புரட்சி சீர்திருத்தத் திருமணமாகும். தி. மு. க. தலைவர்களால் நடாத்தி வைக்கப் பெற்ற கலப்புத் திருமணங்கள் அனைத்தும் சீர்திருத்த மணங்களே. சாதிக்கு அடிப்படை இந்து தர்மம் என்ற கருத்து, சரியாகவோ தவருகவோ, நிலவிய காரணத்தினுல் கலப்புத்திருமணங்கள் சமய சடங்குகளின்றியே நடைபெற்றன. சமயச் சடங்குகளை நடாத்த வேண்டிய குரவர்களும் கலப்பு மணங்களில் பங்கு கொள்ளத் தயங்கியமை இன்னொரு காரணமாகும் சீர்திருத்தத் திருமணங்கள் மிகவும் சிக்கனமுடையனவாகையால், பொருள்வளத்திலும் பின் தங்கியனவாகிய தாழ்த்தப் பட்ட சமூகங்களில் அண்ணுவின் ஆசியுடன் எண்ணிறந்த சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன. அண்ணுவின் ஆட்சிக்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி இச்சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டபூர்வமானதாக்க மறுத்தது. இதனுல், சட்டத்தின் கணிப்புப் பெருத சீர்திருத்தத் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணங்களைச் செய்துகொண்ட குடும்பங்கள் பல்லாண்டு காலமாக பல உரிமைப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன் இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் சட்டத்தின் கண்ணில் 'தந்தையில்லாத குழந்தைகளாக' கருதப்படும் நிலை இருந்தது. அண்ணா முதலமைச்சரானதும் இத்திருமணங்களனைத்தையும் சட்ட பூர்வமானதாக்கிச் சட்டம் நிறைவேற்றினார்.

## அரசுடமை

(3) பொதுமக்களின் போக்குவரத்து சாதனமாகிய பேருந்து (பஸ்) சேவையை அரசுடமையாக்கியமை அண்ணாவின் முற்போக்கான திட்டங்களில் ஒன்றாகும். பொதுமக்களுக்கும் பஸ் ஊழியர்களுக்கும் பயன்தரும் இத் திட்டத்தை பல செல்வாக்குள்ள வட்டாரங்களின் எதிர்ப் பின் மத்தியில் அண்ணா பொதுமக்களின் உடமையாக் கியமை சோஷலிசத்திற்கோர் வெற்றியாகும். எனினும் இத்திட்டத்தைப் படிப்படியாக அண்ணா செயற்படுத்தி வருவது அண்ணாவின் நிலைகுலையாத நிதானம் காட்டும். இத்திட்டம் படிப்படியாகச் செயற்படுத்தப்படுதலாலேயே வெற்றிகரமாகவும் செயற்படுத்தப்படுகிறது.

## உச்சவரம்பு

(4) செல்வம் ஒரு சிலரின் கையில் தேங்கிவிடக் கூடாது என்பதாலும், ஓரளவு பொருளாதார சமபலத்தை உண்டாக்குதற்காகவும் தனிப்பட்ட நிலக்கிழார் வைத் திருக்கக்கூடிய நிலப்பரப்பின் உச்சவரம்பை அண்ணா குறைத்துள்ளார். தம்முடன் அரசியற் தோழமை பூண்ட சுதந்திரக் கட்சியினரின் எதிர்ப்பின் மத்தியிலேயே இதனைத் துணிகரமாகச் சாதித்தவர் அண்ணா. தனிப்பட்ட நிலக் கிழார்கள் அரசின் உணவுற்பத்தித் திட்டத்தை முறியடிக் கும் நோக்குடன் நிலத்தைப் பயிரிடாது தரிசாகப் போட் டால், அத்தகைய நிலத்தை அரசுடமையாக்குவதற்கு அர சாங்கம் தயங்காது என்ற அண்ணாவின் எச்சரிக்கை நிலக் கிழார்களைப் பணியவைத்ததுடன், நிதானம் மிக்க அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் அகத்திலே நெறிபிழைத்தோரைத் தீய்க்கும் புரட்சி நெருப்பும் இருக்கிறது என்பதை தெரியத்தந்தது.

## படியரிசித் திட்டம்

(5) அண்ணாவின் படியரிசித்திட்டம் இந்தியாவின் ஏனையமாநிலங்களிலும் மக்களின் எதிரொலிகளைத் தூண்டி விட்ட ஏற்றமிகு திட்டமாகும். தமிழக அரசின் பொருளாதாரம் தாக்குப்பிடிக்க முடியாத ஒரு திட்டமாயினும், அதனைத் திரமுடன் எதிர்நோக்கத் துணிந்தாரென்றால், பசித்த மக்களின்பால் அண்ணாவுக்கிருந்த பரிவும் பச்சாத்தாபமும் ஆழமானதாகும். படியரிசித்திட்டம் வெற்றிகரமாக தமிழ்நாடெங்கணும் விரிவுபடுத்தப்படவில்லையென்பது உண்மையே. உற்பத்திப் பெருக்கமும், உள்ளதை சமநிலைப்படுத்தலும்தாம் சோஷலிசத்திற்கு ஏற்குமென்றால், அண்ணா அதையேதான் சாதித்துள்ளார். அரிசி விளைக்கும் பகுதிகளுக்குக் கிடைக்கக்கூடிய அற்ப திருப்தியையாவது அரிசி வாங்கும் பகுதிகளுக்கும் பங்கீடுசெய்ய முற்பட்டுள்ளார். இத்திட்டம் நல்லதோர் தொடக்கம் என்பதும், மக்கள் பசி போக்குவதில் அரசு காட்டும் ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் ஆணித்தரமான அடையாளம் என்பதும் பாராட்டுக்குரியனவே.

## இலவசக் கல்வி

6. கட்டணமற்ற இலவசக்கல்வியைப் பல்கலைக்கழகப் படிப்புவரை விரிவுபடுத்தியுள்ள அண்ணாவின் சாதனை விதந்தோதத்தக்கதாகும். இச்சாதனையால் தேறும் அரசியல் வாய்ப்புக்கள் காங்கிரசுக்குக் கிட்டாது கழகத்திற்குக் கிட்டிவிடும் என்ற கலக்கத்தால் போலும், தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் திரு. சுப்பிரமணியம், காங்கிரசுத் திட்டத்தைத்தான் கழக அரசு செயற்படுத்துகிறது; இதில் புதுமையொன்றும் இல்லையென வாதிட முயன்றூர். இச் சாதனை மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் தரமானதே.

7. 1967ம் ஆண்டு முதலமைச்சரான அண்ணா நிதியமைச்சர் என்ற முறையில் உருவாக்கிய வரவு செலவுத் திட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் எவ்வளவோ பொருளாதார நெருக்கடிக்குள் தயாரிக்கப்பட்ட தாயினும் ஏழை எளியவர்களுக்கு வரி விலக்கும் வாழ்க்கைத்தர உயர்வும் அளித்த 'சோஷலிச'த் திட்டமாகும். இந்தியாவின் பழுத்த 'சோஷலிச'வாதிகளின் பாராட்டையும் பெற்ற திட்டமாகும்.

கழகத்தின் கன்னிப்பருவத்திலே கைத்தறியாளரின் கண்ணீர் துடைப்பதற்காகத் தனது தலைமைத் தகுதியையும் புறக்கணித்துவிட்டுத் தம்பியருடன் தோளில் துணி மூட்டை சுமந்து கைத்தறி ஆடை விற்ற கைகளல்லவா அண்ணுவின் கைகள்? சோஷலிசவாதம் என்பது அனைத்து அரசியல்வாதிகளினதும் அலங்கார அணியாக திரிந்து விட்டகாலையில், அண்ணு தத்துவத் தர்க்கங்களிலும் சித்தாந்த விசாரணைகளிலும் ஈடுபடாமலேயே, ஓசைப்படாமலேயே சோஷலிசத்தைச் செயற்படுத்திஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார்கலந்த கீர்த்திப் பழைய திராவிடத்தை
வேர்கலங்கச் செய்ய ...விரைகின்றார்
கார்குழலீர் காளையரே வாரீரோ வாரீரோ!"

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

# தென்னாட்டின் குரல் அண்ணா

**1957ம்** ஆண்டுத் தேர்தலில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்று சட்ட மன்றத்தில் விவாதங்களின்போது தமிழ்மழை பொழிந்தும் மின்வெட்டுப் பேச்சுக்களால் அமைச்சர்களை மடக்கியும் அறிவும் தமிழின் திருவும் கலந்து சொற்சிலம்பமாடிய அண்ணா, 1962ம் ஆண்டுத் தேர்தலில் தம்பியர் ஐம்பதின்மர் வெற்றி பெற்றும் தாம் தோல்வியுற்றார். அச்சேதிகேட்டு கழகத்துத் தம்பிகளின் இதயங்களிலிருந்து இரத்தம் கசிந்திட்டதாயினும், ஒரு விதத்தில் அது அண்ணாவின் அரசியல் வாழ்வில் ஓர் முன்னேற்றப்படியாகவே அமைந்தது. ஏனெனில், அண்ணா புதுடில்லி மாநிலங்களவைக்கு (இராஜ்ய சபை)ச் செல்லவும், அங்கு அனைத்திந்திய அரசியல் அவதானிகளின் பார்வைக்கு இலக்காகவும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது இத் தோல்வியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுடில்லியில் மாநிலங்களவையில் தம் கன்னிப் பேச்சிலேயே அனைவரது உள்ளங்களையும் கவர்ந்துவிட்ட அண்ணாவின் குரல் தமிழ்நாட்டுக்காக மட்டும் ஒலிக்கவில்லை, தென்னாடு முழுவதுக்குமாகவே ஒலித்தது. தி. மு. க. வின் மொழியில் கூறுவதானால், திராவிடநாட்டுக்காக ஒலித்தது. அண்ணா பிரிவினைக் கொள்கையைக் கைவிடுவதற்கு முன்னர் கோரிய திராவிடநாட்டின் நிலப்பரப்பு, திராவிட இனத்தவர்களாகிய தெலுங்கர், மலையாளிகள், கன்னடர், தமிழர் ஆகியோரது மொழிவழி மாநிலங்களான ஆந்திரம், கேரளம், மைசூர், தமிழ்நாடு இவற்றைக் கொண்டதாகும். இவற்றுள் தமிழ் நாட்டைத்தவிர ஏனைய மாநிலங்களில், திராவிடநாட்டுக் கோரிக்கைக்கு அடிப்படையான ஆதரவைத் தி. மு. க. வினால் பெறமுடியவில்லை என்பதோடு, அண்ணா தமக்காகப் பேசும் உரிமையை இம்மாநிலங்களோ, மைய அரசின் தலைவர்களோ அங்கீகரிக்கவில்லை. இதையிட்டு காங்கிரசார் தி.மு.க.வை கிண்டல் செய்ததுண்டு.

அண்ணா மாநிலங்களவைக்கு வந்த பின்னர் இந்தக் கண்ணோட்டத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தென்னாட்டின் அரசியல் பொருளியல் உரிமைகளை அண்ணா தட்டிக் கேட்ட போதெல்லாம், அங்ஙனம் கேட்க அன்னாருக்கிருந்த உரிமையை டில்லி வட்டாரங்கள் கணித்துக் கொண்டதுடன், இதர தென்னக மாநிலங்களும் அங்கீகரித்தன— அங்கீகரித்தன என்பதைக் காட்டிலும், தமது உரிமைகள் பற்றி மைய அரசைத் தட்டிக்கேட்கவேண்டிய தலைவன் அண்ணாவே என எதிர்பார்த்தன எனலாம். மைய அரசும் தென்னகத்தின் தேவைகளையிட்டு அண்ணாவின் கோரிக்கைகளையே அளவுகோலாகக் கொண்டன எனலாம். அதாவது, அண்ணாவின் மனதுக்குத் திருப்தியென்றால் தென்னகத்திற்குத் திருப்தியாக இருக்கும் என்ற கணிப்பு ஏற்பட்டது. மாநிலங்களவையில் அண்ணா பேசும்போது தமக்கும் சேர்த்துத் தான் அன்னார் பேசுகின்றார் என்ற உணர்வு இதர மாநிலத் தலைவர்களுக்கு இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தி எதிர்ப்பு

1962ல் அண்ணு பிற மாநிலங்களில் பெற்ற இக் கணிப்பு படிப்படியாக வளர்ந்து 1965ல் முழுமை பெற்றது. தமது திராவிடநாடு கோரிக்கையை முன் வைத்து தன் தலைமைக்கு இதர மாநிலங்களின் கணிப்பை பெறுவதில் தவறிய அண்ணு இந்திஎதிர்ப்பின் ஈட்டிமுனை என்ற தகுதியைக் கொண்டு அக்கணிப்பைப் பெற்றுர். உண்மை தான்; விரிந்துபரந்த இந்திய உபகண்டத்திலேயே, இன்று வரை வடக்கிலிருந்து அவ்வப்போது வீறுகொண்டெழுகின்ற இந்தி ஆதிக்க வெள்ளத்தைத் தடுத்து, நிறுத்தி, தென்னிந்தியாவின் அரணாக நின்ற ஒரே சக்தி இந்தக் குள்ள உருவமான அண்ணுவே. இன்று மத்திய அரசுக்கு நித்திய தலைவலியைத் தருகின்ற மொழிப் பிரச்சினையை இன்னும் பிரச்சினை என்று கூறும்படியாக வைத்திருந்ததே அண்ணு தான். ஒரு பிரச்சினையைத் தம் மக்களின் நலன் பேணும் விதத்தில் தீர்க்கமுடியாவிட்டால், தீர்க்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படாவிட்டால், அது தம் மக்களின் நலனுக்கு விரோதமாகத் தீர்க்கப்படாது, பிரச்சினையைப் பிரச்சினையாகவே பாதுகாத்து, அடுத்த சந்ததியிடம் தொடர்ந்து போராடுவதற்காகக் கையளிக்க வேண்டியதே தலைவனின் கடப்பாடாகும். எதிர்ப்பு நெருப்பை அணைய விடக்கூடாது. எப்படியும் பிரச்சினைகளைத் தீர்ப்பதுதான் திறமைசாலியான தலைவனின் பண்பென்றுல், எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்திருக்கமுடியும், எத்தனையோ திறமைசாலிகளும் தோன்றியிருக்க முடியும். எப்படித் தீர்க்கப் பட்டது என்பதல்லவா திறமைக்கு உரைகல்

## அணி திரட்டியும் . . . .

1965-ம் ஆண்டு தென்னிந்திய மாநிலங்கள் நான்கும் இந்தி எதிர்ப்புப் போரில் அண்ணுவுக்குப் பின்னே அணி வகுத்து நின்றனவென்றுல், அந்தச் சாதனை மிகவும் எளிதாகக்கிட்டியதொன்றன்று. இந்தித் திணிப்பையிட்டு தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்கள் கவலைகொள்ளாத காலமொன்றும் இருந்தது. ஏன், தமிழ்நாட்டிலேயே இந்தி எதிர்ப்பு வெகுசன இயக்கமாக அன்றி, அண்ணுவின் தலைமையிலான செல்வாக்கற்ற சிறு கூட்டத்தினரால் நடாத்தப்பட்டதுதானே. தமிழ்நாட்டின் கனதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்கள் அனைவரும் இந்தி எதிர்ப்பைக் கிளர்ச்சிக்காரரின் கூச்சல் என்றல்லவா புறக்கணித்தனர். அவ்வளவு ஏன், இன்று இந்தியை எதிர்த்து கனல் கக்கும் முதுபெருந் தலைவர் இராஜாஜி கூட அன்று இந்தி எதிர்ப்பை நிராகரித்தவர் என்பதுடன் முன்பு இந்தியைத் திணிப்பதற்குத் தாமே கருவியாகவல்லவா நின்றார். இங்ஙனம், உணர்ச்சியின்றி எழுச்சி குன்றிக் கிடந்திட்ட தமிழகத்தில் படிப்படியாக இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பேரணியொன்றை உருவாக்கி, தமிழகத்து மனிதன் ஒவ்வொருவனையும் இந்தப் படையணியில் ஓர் பட்டாள வீரனாக்கிய பாங்கும், தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டி, ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களிலும் உணர்ச்சியலைகளைக் கொந்தளிக்கச் செய்த திட்பமும், தென்னாடுகளின் எல்லைகளைத்தாண்டி வங்கக் கடலிலேயே இந்தி எதிர்ப்பு அலைகளைக் கொந்தளிக்கச் செய்த நுட்பமும், தனியொரு மனிதனுடையவை என்பதையும், அம் மனிதன் சாமானியன் என்பதையும், அவன்தான் அண்ணா என்பதையும் எவரே மறுப்பார். இதனைச் சாதாரணமாகச் சாதிக்க முடிந்ததா?

## கண்காணித்தும் . . . .

1965-ம் ஆண்டு தென்னகமெங்கணும் அக்கினிப் பிழம்பாக வெடித்துச் சிதறிய இந்தி எதிர்ப்புப் பெரும் போருக்கு முன்னதாக, ஏனையோர் தூங்கிக் கிடந்த வேளையில் 1937-ம் ஆண்டு தொட்டு அவ்வப்போது தலையெடுத்துத் தென்னகத்தின் மீது படையெடுத்த இந்தி ஆதிக்கத்தை அடக்குவதற்காக, நான்கு பெரிய போராட்டங்களையல்லவா நடாத்தினார்! எத்தனை தோழர்களைக் களப் பலி கொடுத்தார். எத்தனை தடவைகள் சிறை சென்றார்! தி. மு. க. வின் தலைவர்களும் தொண்டர்களும் இத்துறையில் செய்திட்ட தியாகம்தான் இன்று இந்தி ஆதிக்கத்திற்கெதிராக இடப்பட்ட வச்சிர அரணாகும். அண்ணா மேற்கொண்ட போராட்டத்தின் பயனாக, 1960-ம் ஆண்டு அன்றையப் பிரதமர் நேரு அவர்களே "தென்னாட்டு மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கும்" என்ற பாரதூரமான ஓர் உறுதிமொழியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனம் செய்தாரென்றால், போராட்டத்தின் வலிமை உணரற்பாலதாகும். இந்த உறுதிமொழியை அண்ணா தமிழ்நாட்டுக்காகமட்டும் பெறவில்லை; தென்னாடு முழுவதுக்குமாகவே பெற்றார். தொடர்ந்தும் அண்ணா 'இந்தியாவின் பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாகும் பக்குவம்பெறும் வரை ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்', 'தொடர்புமொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும்' என்ற தமது மொழிக் கொள்கையில் விட்டுக்கொடாமலே, பிரதமர் நேருவின் உறுதிமொழியை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம், அதற்குச் சட்ட அந்தஸ்து வழங்க வேண்டுமென வேண்டினார். மொழிப்பிரச்சினையில், தன் அரசியல் வாழ்வின் ஒவ்வொரு விநாடித்துளியிலும் தென்னாட்டு மக்களின் மொழிஉரிமையைக் காக்கவேண்டி தம் விழிகளை அகல விரித்துக் கொண்டும் செவிகளைச் செம்மையாகத் தீட்டிக்கொண்டும் கண்காணித்தார் அண்ணா. இக்கண்காணிப்பில் பிற்காலத்தில் அண்ணாவுக்குப் பெருந்துணையாக நின்றவர் இராஜாஜியாகும்.

"இந்தியாவின் பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாகும் பக்குவம் பெறும்வரை... " என்ற வார்த்தைகள் அனுபவசாத்தியமான கருத்தைக் கொண்டனவா? அரசியல்ரீதியாக அர்த்தமுள்ளவையா?; அண்ணா இவ்வார்த்தைகளையிட்டு எவ்வளவு தூரம் விசுவாசமாக இருந்தார்? என்பனபோன்ற கேள்விகள் அரசியல் வட்டாரங்கள் சிலவற்றுள் இயல்பாகவே எழுந்ததுண்டு. தாம் ஆங்கில அடிமை என்ற அபவாதத்தையும் முறியடித்து, ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிப்பதையும் நிரந்தரப்படுத்துவதற்காக, நிறைவேற்றமுடியாத நிபந்தனையொன்றை விதித்தார் போலும் என்பது சில வட்டாரங்களின் ஐயமாக இருந்தது. இவ்வையப்பாடு தவறானதாக இருக்கலாம். எனினும் தர்க்கரீதியாகவே தோன்றுகிறது.

## வெடித்த எரிமலை

1965ம் ஆண்டு எகிறி வெடித்த இந்தி எதிர்ப்பு எரிமலை தென்னாட்டின் உணர்ச்சிக் குமுறலின் உச்சக்கட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தொட்டுக்காட்டியது. தமிழ்கூறும் நல்லுலகில் தமிழ்த்தாயின் விலங்கொடிக்கத் தமிழ்மறவர் நடாத்திய போராட்ட வரலாற்றில் தலையாய அத்தியாயம் தீட்டப் பட்ட ஆண்டு இதுவே. நூற்று ஐம்பதின்மருக்கும் மேற் பட்ட மறவர்கள், தாயின் மடியிலே தவழ்ந்திட்ட தீரர்கள் தாயின் அடியிலே தலைசாய்ந்து மடிந்தார்கள். பொலீசா ரால் வெறிநாய்களைப் போலச் சுட்டுவிழ்த்தப்பட்ட வீரர் கூட்டமும், தமிழ்த்தாயின் பெயரால் தமக்குத்தாமே எரி யூட்டித் தீக்குளித்த தீரர்கூட்டமும் சடசடவெனப் பிணமாகச் சரிந்ததால் எழுந்த பேரொலியும், தமிழ்நாட் டின் புத்தெழுச்சியின் வித்துக்களான மாணவ முத்துக்கள் இந்தி எதிர்ப்புப் படை நடாத்தியதால் எழுந்த பேரொலி யும், இந்தப் பின்னணியின் முன்னணியிலே நின்று தானைத் தலைவன் அண்ணு இந்தி ஏகாதிபத்தியத்திற்கெதிராக எழுப்பிய போரொலியும் தமிழ்நாட்டின் எல்லைகளைக் கடந்து ஏனைய திராவிட மாநிலங்களிலும் எதிரொலித்தன. ஹைதராபாத்தும் (ஆந்திரம்) திருவனந்தபுரமும் (கேரளம்) பங்களூரும் (மைசூர்) சென்னைக்குத் தாம் சளைத்தவை யல்ல என்பதை உறுதி செய்வது போல் போரொலி எழுப் பும் பாசறைகளாக மாறின.

இம்மாநிலங்களின் மாணவர்கள் இந்தி எதிர்ப் புப் போரை தம் மாநிலமெங்கணும் விரிவுபடுத்தினர். பொலிசாரின் வேட்டுக்கள் முழங்கின. ஏனைய மும்மாநிலங்களின் மாணவர் இயக்கங்கள் தமிழ்நாட்டு மாணவர் இயக்கங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டன. ஏனைய மாநிலங்களின் இந்தி எதிர்ப்பு இயக் கங்களிலிருந்து மொழிப்பிரச்சினைபற்றி விளக்க வருமாறு அண்ணுவுக்கு அழைப்புகள் பறந்தன. இம் மாநிலங்களின் அரசுக்கள் தங்களையும் மீறிய ஓர் சக்தி தம் மாநிலத்து அரசியலில் அலைகளை உண்டாக்குவதை உணர்ந்து நெற் றியைச் சுருக்கிக் கொண்டன, பின் புருவத்தை உயர்த்திக் கொண்டன. அந்தச் சக்தி அண்ணுதான் என்பதிலே ஆச் சரியமென்ன? அந்தச் சக்தியினின்றும் பிறந்த அதிர்ச்சி யலைகள் திராவிட மாநிலங்களில் மட்டும் பொங்கவில்லை, மேற்கு வங்காளத்திலும் பொங்கின. வளமும் வனப்பும் வாய்ந்த வங்காளமொழி இந்தி ஏகாதிபத்தியத்திற்கு இரையாகிவிடக்கூடாது என அஞ்சிய மேற்கு வங்காளத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தி எதிர்ப்பினர் அண்ணுவைப் பேச அழைத்தனர். தி. மு. க. தம்பிகள் அண்ணுவின் ஆணை திராவிட மாநிலங்கள் நான்கிலும் அதிகாரபூர்வமுடையதாகவேண்டும் என காலமெல்லாம் விரும்பினர். அது ஒரு விதத்தில் நிறைவேறிற்றென்றே கூறவேண்டும். திராவிட மாநிலங்கள் நான்கினுக்கும் ஒரு தனி அரசியலமைப்பு, ஒரு தனிப்பண்பாட்டுப் பிணைப்பு, ஒரு தனி நிர்வாக இணைப்பு, ஏற்படவேண்டும் என அண்ணு எண்ணியிருந்தார். அது ஒருமித்த உணர்ச்சித் துடிப்பு - இந்திக்கு எதிர்ப்பு என்றவரையிலாவது நிறைவேறிற்றென்றே கூற வேண்டும். இதற்கு ஆதாரமாக மூன்று நிகழ்ச்சிகளை கூறலாம்.

## கிடைத்த வெற்றி.

★ மொழி விடயத்தில் உறுதியற்றும், கொஞ்சம் விட்டுக் கொடுக்கத் தயாராகவும் இருந்த ஏனைய மூன்று மாநிலங்களின் அரசுக்கள் மீதும் அண்ணுவின் மொழிக் கொள்கையோடு முரண்படாத மொழிக் கொள்கையை அவை கடைப்பிடிக்கவேண்டுமென்ற வற்புறுத்தல் - மொழிப் பிரச்சினையில் விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற அழுத்தம் - மாநிலத்தின் அரசியல் சிந்தனையுடைய வட்டாரங்களிலிருந்து எழுந்தது. இதற்குப் பணிந்து அம்மாநிலங்களின் மூன்று அரசுகளும் தமிழ் நாடு அரசு செய்தது போன்று - அத்துணை தீவிரமாக இல்லாவிடினும் - தமது மொழிக்கொள்கை குறித்தும், இந்தி வெறிக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தும் அதிகாரபூர்வமான அறிக்கைகளை சட்டமன்றத்தில் வெளியிட்டனர்.

★ மற்றைய மூன்று மாநிலங்களின் தலைவர்களும், வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், இந்தியைத் தென்ஞட்டின்மீது திணித்தால் நாடு பிளவுபடும் என அண்ணுவின் தொனியில் எச்சரிக்கத் தலைப்பட்டனர். இங்ஙனம் அவர்கள் புதுடில்லி நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் விடுத்த எச்சரிக்கைகள் தாக்கமானவை. உதாரணமாக, கேரளத்தின் புரட்சிவாத சோஷலிஸ்ற் கட்சி (R.S.P.) நாடாளுமன்ற உறுப்பின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான திரு. சுகுமாரன் நாயர் தென்னாட்டின் இந்தி எதிர்ப்பு எழுச்சியை அடிக்கடி மிகவும் உணர்ச்சிவசப் பட்டநிலையில் நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறினார். 'இத்தீவிரவாதப் போக்கை மாற்றுவிட்டால் தென்னாடு நிச்சயம் பிரிந்து செல்லும்' என்றும் எச்சரித்தார்.

★ புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பெரும்பாலும் இந்தி தெரியாத, ஆங்கிலமே தெரிந்த, முதலமைச்சர்கள் மத்தியில், ஆங்கிலம் தெரிந்த பீஹார் மாநில முதலமைச்சர் இந்தியில் பேசிய போது, எதிர்ப்புக்குரல் கொடுத்தவர்கள் ஆந்திர, கேரள, மைசூர் முதலமைச்சர்களே. அண்ணா 'என் பணியை அவர்கள் செய்கின்றார்கள்' என்று வாளாவிருந்துவிட்டார்.

இந்த உணர்வைத்தான் அண்ணா ' இந்தியக் குடியரசுக்குட்பட்ட திராவிடக்கூட்டாட்சி ' என்ற வார்த்தைகளில் வடித்தாரோ என்னவோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
........ ...... ...... ...... ...... ...... ...
இஃதெலாம் கேட்டும் ...... ... ........ ''

—புதுமைக்கவி பாரதி.

# ஈழத்தமிழர் கண்ட அண்ணு

தமிழ்கூறும் நல்லுலகெங்கும் வாழ்கின்ற தம்பியரின், குறிப்பாக கையடியும் வாயடியும்பட்டுக் கண்கலங்கித் தேம்புகின்ற திராவிடர்களின் நம்பிக்கையொளியாக, நந்தா விளக்காக உணர்வூட்டிய அண்ணு ஈழம்வாழ் இருபத்தைந்து லட்சம் தமிழ்பேசும் மக்களின் இதயங்களை ஈர்த்துக் கொள்ளவும் தவறவில்லை. உலகின் கோடியிலே ஒடுக்கப்பட்டு உரிமை பறிக்கப்பட்டு பெருமூச்சுவிடும் தமிழ் மக்கள் அண்ணுவைப்பற்றிய நினைப்பிலே ஓர் அரவணைப்பைக் கண்டது மானசீக உணர்வே. இத்தகைய இதயதாபங்களின் எதிரொலியாக, இதரநாடுகளிலே வாழும் தமிழ் மக்களின் உள்ளத்துடிப்புகளைப் புரிந்துகொண்டு தாமும் துடித்ததும், துவண்டதும் அண்ணுவின் தவரு அல்லது தம் நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத் தமிழ் மக்களுக்கு மனித உரிமைகளை வழங்க மறுத்த மற்றைய நாடுகளின் தவறு? சைப்பிரஸ் நாட்டின் சிறு பான்மையினருக்காகத் துடிப்பது துருக்கியின் தவறாகாது; அங்ஙனம் துடிக்காவிட்டால் துருக்கியில் வாழ்பவன் துருக் கியனுமாகான்.

## காக்கையின் உரிமைகூட . . . .

ஈழத் தமிழ் மக்களின் இன்னல்களைக் கண்டு அண்ணு இதயம் நெகிழ்ந்ததைக் கேட்டு இலங்கையின் பெரும் பான்மை வட்டாரங்கள் புருவத்தை நெரித்ததுண்டு. 'இலங்கை அரசியலில் தி. மு. க. வின் தலையீடு' எனப் புது மையான வாதங்களும் நிறுவப்பட்டன. ஆயிரம் மைல்க ளுக்கப்பாலிருக்கும் வியட்நாம் பௌத்தர்களுக்காக மதத் தால் மட்டுமே ஒருமைப்பாடுடைய இலங்கைப் பௌத்தர் கள் நேசக்குரல் எழுப்பியதையும் அமெரிக்க ஆக்கிரமிப்பா ளர்க்கெதிராக ஆட்சேபக்குரல் எழுப்பியதையும் இயல் பானதாக, நியாயமானதாக இவ்வட்டாரங்கள் போற் றின. உண்மைதான்; பௌத்தனுக்காக ஒரு பௌத்தன் துடிக்காவிட்டால் வேறு யார் துடிப்பது. ஆயிரம் மைல்க ளுக்கப்பாலிருக்கும் அரேபியர்களுக்காக மதத்தால் மட் டுமே ஒருமைப்பாடுடைய இலங்கை இஸ்லாமியர்கள் துடிப் பதும், இஸ்ரேலுக்கெதிராக கண்டனக் கூட்டங்கள் நடாத் தியமையும், எகிப்து—இஸ்ரவேல் யுத்தத்தில் எகிப்தியருக் காகப் போராடத் தொண்டர்களை அனுப்ப விருப்பம் தெரி வித்தமையும் இயல்பானதாக, நியாயமானதாகப்படுகிறது இவ்வட்டாரங்களுக்கு. பாராட்டுக்குரியதே; இஸ்லாமிய னுக்காக இஸ்லாமியன் துடிக்காவிட்டால் வேறு யார் துடிப்பது? எனினும், ஆயிரம் மைல்களுக்கப்பால் அல்ல, அண்டை நாட்டில், அதிலும் வெறும் மதத்தால் மட்டு மல்ல, பிறப்பால், இனத்தால், மொழியால், பண்பாட் டால், வரலாற்றால், ஊனால், உயிரால், உதிரத்தால், உணர்வால் இலங்கைத் தமிழர்களோடு உறவுகொண்ட தமிழர்கள், அத்தமிழர் தலைவன் அண்ணு, இலங்கைத் தமிழ் மக்களுக்காகத் துடிப்பதை இந்த வட்டாரங்களால் புரிந்துகொள்ள முடியாது போயினமை பரிதாபமே. தமிழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்காகத் தமிழன் துடிக்காவிட்டால் வேறுயார் துடிப் பதோ? கரைகின்ற காக்கையோடு இணைந்து கத்துகின்ற காக்கைக்கூட்டத்தின் உரிமைகூடச் செத்துவிட்டதோ தமிழ்க்குடிக்கு?

## இதயத் துடிப்பு

நிறவெறிக்கெதிராகவும் நீக்கிரோவரின் உரிமைக ளுக்காகவும் இந்த நாட்டில் அடிக்கடி கண்ணீர் வடிக்கப் படுகிறதே. நீக்ரோவரின் விடுதலை வேட்கையுடன் ஒரு மைப்பாடு தெரிவித்துக் கோஷங்கள் எழுப்பப்படுகின்றன; நல்லது, நயமானது. நீக்ரோவன் இங்குள்ளபெரும்பான்மை வட்டாரங்களுக்கு உற்ருேனே, உறவினனே அல்லன்; மாமனே மைத்துனனே அல்லன்; ஆனுல் மனிதன். ஆபிரிக் காவின் ஒடுக்கப்பட்ட நீக்ரோ மனிதனுக்காக இலங்கையி லுள்ள மனிதன் மனித உணர்வினுல் ஒன்றுபட்டுத் துடிக் கிருனென்ருல், அண்டைநாட்டுத் தமிழன் இந்நாட்டுத் தமிழனுக்காக, தமிழனென்ற உணர்வுடன் துடிக்காவிட் டாலும் மனிதன் என்ற உணர்விலாவது துடிப்பது மாச்ச ரியமுடையதா? அன்றி, ஆச்சரியத்துக்குரியதா? அண்ணு வுக்கும் இலங்கைத்தமிழர்க்குமிடையில் ஏற்பட்டது அரசிய லடிப்படையிலான ஆட்சேபகரமான தொடர்பல்ல, இனத் தொடர்பாலான இதயத்துடிப்பு, இயல்பான துடிப்பு. 'இலங்கை அரசியலுக்கும் எமது அரசியலுக்கும் தொடர் பில்லை'யெனத் தெட்டத் தெளிவாகக் கூறினுர் அண்ணு. தொடர்புபடுத்திப் பேசப்பட்ட அரசியற் குறும்பர்களின் பேச்சுக்களை 'வெறும் பிதற்றல்' என வைதார். இலங்கைத் தமிழ்மக்களைப் பாதுகாக்கப் படை அனுப்புவேன் என அவர் கூறவில்லை: அவரிடம் இராணுவப்படை இருந்தது மில்லை. பெரிய வல்லரசுகளான உருஷ்ஷியாவுடனும் செஞ்சீனுவுடனும் அரசியல்ரீதியாக இணைந்து செயலாற்று கின்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் இயக்கங்களைக் கண்டு புரு வத்தை நெரிக்காத பெரும்பான்மை வட்டாரங்கள், அல் லற்பட்ட அபலை உள்ளங்கள் இரண்டின் உறவின் கணுக்க ளிலே ஆபத்தான உணர்வுகள் கரந்துறைவதாகக் கற்பனை செய்து ஓலமிடுவது புரிந்துகொள்ள முடியாத ஓர் புதுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுனைப் பணி

இலங்கைத் தமிழ் மக்களுக்காக அண்ணா துடித்தகாலை யிலெல்லாம் சட்டபூர்வமான, சந்தேகத்திற்கிடமளிக்காத, அரசியற் பண்பாட்டு வரம்புகளுக்குட்பட்டே தமது இதயத் தின் எதிரொலிகளை எழுப்பினார். இந்நாட்டின் தமிழர் சார் பில் அண்ணாவின் பணி இருமுனை கொண்டதாகும். ஒரு முனையில், இந்திய அரசு இலங்கை அரசுடன் கொண்ட நட் புறவையும் நல்லெண்ணத்தையும் பயன்படுத்தி இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் வழங்கச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினார். மறுமுனையில், இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை உலகத்தின் பார்வைக்குக் கொண்டு வர முயன்றார். உலக அபிப்பிராயம் எத்துணை சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை உணர்ந்த அண்ணா ஈழம்வாழ் தமிழ்மக்களின் போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் ஐக் கிய நாடுகள் சபைக்கு விண்ணப்பமனு அனுப்பிய சேதி வேடிக்கையான செயலல்ல.

1958-ம் ஆண்டு ஜூன் மாதம் — பத்தாண்டுகட்கு மேலாகியும் திரும்பிப் பார்க்க முடியாதபடி படுபயங்கர நினைவுகள் கப்பிவிட்ட நாட்கள். தமிழ்மக்களுடைய இரத்தவெள்ளம் 'ஏன்—எப்படி?, என நெற்றியைச் சுருக்கி நோக்குவோர் எவருமின்றி மிகவும் தாராளமாக நாதி யற்று வீதியெங்கணும் ஓடிய நாட்கள். உயிரிழந்தும், உட லுறுப்பிழந்தும், உடைமையிழந்தும், பெண்கள் மானமிழந் தும், தலைவிரிகோலமாகத் தமிழ்மக்கள் கூவியழுத நாட் கள். தமிழ்மக்களின் கூக்குரல் அண்ணாவுக்குக் கேட்டது போலும். 1958-ம் ஆண்டு ''ஜூன் 22-ம் தேதி இலங்கைத் தமிழர் உரிமைத் தினம்'' எனப் பிரகடனப்படுத்தி தமிழ் நாடெங்கணும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் தமது இயக்கத்தின் சார்பில் ஒழுங்கு செய் வித்தார். இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை விளக்கும் சுவரொட்டிகள் தமிழ்நாடெங்கணும் கண்ணீரின் காவியம் தீட்டின. சென்னை மாநகரில் நேப்பியர் பூங்காவில் அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்ட பிரமாண்டமான கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுமக்களின் இரத்தத்துடிப்பை வெளிப்படுத்தியது டன், இலங்கை அரசியல்வாதிகள் தி. மு. க. அரசுக்கு அறைகூவல் விடுப்பதுபோலவன்றி, வரம்புக்குட்பட்டுச் செயல்படும் அண்ணுவின் அரசியல் வாய்மையையும் உணர்த்திற்று.

1961-ம் ஆண்டு இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக இயந்திரங்களே செயலற்றுப் போகும்படி, தமிழ்மக்கள் பொலீஸ் தாக்குதல் இராணுவப் பயமுறுத்தல் இவற்றையும் தம் தியாகத்தால் சமாளித்து நடத்திய போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் *1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம்* தேதி திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அண்ணு மாபெரும் கூட்டத்தை ஒழுங்குசெய்தார். தமிழ்நாட்டு மக்களின் தார்மீக அனுதாபத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும், தமது நட்புறவைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழர் உரிமைகளே வழங்குமாறு இந்திய அரசு இலங்கையைக் கோரவேண்டும் என்னும் வகையிலும், தீர்மானங்களே முன்மொழிந்து பேசிய அண்ணு நாலுகோடித் தமிழர்களின் குமுறும் உணர்வுகளே அரசியல் வரம்புநெறிகளே மீருது நாகரிகமாகப் படம் பிடித்துக் காட்டினர்.

## உலகைக் கூவியழைத்து . . . .

இலங்கைத் தமிழ்மக்களுக்கு இயக்கரீதியான தார்மீக ஆதரவைத் தெரிவித்துக்கொண்ட அண்ணு, தமது தனிப்பட்ட உள்ளக் கிளர்ச்சிகளேத் 'திராவிடநாடு' *(தமிழ்)*, 'ஹோம்லண்ட்' *(ஆங்கிலம்)* இதழ்களின் மூலம் தெரியத்தந்தார். வாய்ப்புக்கிடைத்த வேளையிலெல்லாம் தமிழர்தம் வேதனைகளே வடித்துக்காட்டவும் வெளியுலகுக்கு எடுத்துக் கூறவும் தவறினரில்லை. எடுத்துக்காட்டாக,

★ 'ஹோம்லண்ட்' 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி இதழ் அக்கோரநாட்களின் கொடுமைகளேச் சித்தரித்தது. 'இலங்கையின் அபலேகள்' *(Cinderellas in Ceylon)* என்ற தலைப்பில் முதற்பக்கத்தில் ஒரு விரிவான கட்டுரை வெளியிடப்பட்டது. தமிழ்மக்கள் என்ற மங்கை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் காலஞ்சென்ற பண்டாரநாயக்காவால் மானபங்கம் செய்யப்படுவது போலும், மங்கை ஓலமிடுவதாகவும், அதையிட்டு பிரதமர் நேருவும் காமராஜரும் பாராமுகமாக வேறுபுறம் பார்த்து நிற்பதாகவும் கேலிச்சித்திரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

★ 'ஹோம்லண்ட்' — 29 ஜுன், 1958 இதழ் 'இலங்கைத் தமிழர் உரிமைத் தினத், திற்கென ஒதுக்கப்பட்டு, இத்தினத்தின் நிகழ்ச்சிகள்பற்றிய செய்திகளோடும் செய்திப்படங்களோடும் வெளிவந்தது.

★ 'ஹோம்லண்ட்' – 20 ஜுலை 1958 இதழ், வகுப்புக் கலவரத்தின்போது ஓர் இரவிலேயே உடமையிழந்து ஒட்டாண்டியான தமிழர்களின் கண்ணீரால் தீட்டிய கடிதங்களைத் தாங்கிவந்தது.

★ 'ஹோம்லண்ட்'-10 ஆகஸ்ட் 1958 இதழில் முதற் பக்கத்தில் "அணி திரள்க! நீதி கோருக! தமிழர்களைக் காட்டிக்கொடாதே! பண்டாவின் கொடூரச் செயல்கள் உலகுக்குத் தெரியட்டும்" எனத் தலைப்புகளிட்டு அண்ணு உணர்ச்சிமயமானதோர் கட்டுரையைத் தீட்டினர். தமிழ்த் தலைவர்களைச் சிறையிலடைத்துவிட்டு நியாயமான அளவு தமிழ் பாவிப்புச் சட்டத்தைப் பண்டாரநாயக்கா நிறைவேற்றிய நேரம் அது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தாம் வரம்பு மீறி நின்று வாதிடவில்லையென்பதையும், தமது நோக்கம் என்ன என்பதையும் கோடிட்டு, தடித்த எழுத்தில் அழுத்திக் காட்டினுர் அண்ணு.

"...... That does not necessarily mean, demanding a Tamil Raj comprising Tamil Nad and that portion of Ceylon wherein Tamilians are in a majority ... The task immediately ahead is to focus public attention on the problem. World opinion should be harnessed to the cause for justice and fairplay. The plight of the Tamilians in Ceylon should be placed before the discerning public all over the world....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தமிழாக்கமாவது:

" .. இது தமிழ்நாட்டையும் இலங்கையின் தமிழர் பெரும்பான்மையாக உள்ள பகுதியையும் இணைத்து ஓர் தமிழ்ராச்சியம் அமைக்கக் கோருவதாக அர்த்தமாகாது. எம்மை உடனடியாக எதிர்நோக்கியுள்ள பணி இப் பிரச்சினையின்பால் பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்ப தாகும். தர்ம நியாயத்திற்காக நடைபெறும் போராட்டத் திற்கு அரணாக உலக மக்களின் கருத்தைத் திரட்டிப் பிணைத்துக் கொள்ள வேண்டும். உலகெங்கணுமிருக்கின்ற விஷயமறிந்த மக்கள் மன்றத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் பரிதாபமான நிலை எடுத்துரைக்கப்பட வேண்டும். ......"

★ 'ஹோம்லண்ட்-14,டிசம்பர் 1958 இதழ் "இலங்கை மொழிக் கலவரத்தின்போது தமிழர் துரத்தப்பட்டனர், துகிலுரியப்பட்டனர், நையப்புடைக்கப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர். காடையர்கள் சுதந்திரமாக செயற்பட் டனர். 'மாஞ்செஸ்டர் கார்டியனின்' அதிகாரபூர்வமான படப்பிடிப்பு" எனத் தலைப்பிட்டு இங்கிலாந்திலிருந்து வரும் 'மாஞ்செஸ்ரர் கார்டியன்' பத்திரிகையில் வெளிவந்த கட்டு ரையை மறுபிரசுரம் செய்திருந்தது.

★ 'ஹோம்லண்ட்-23,ஆகஸ்ட் 1959 இதழில் 'இலங் கைத் தமிழர்' எனத் தலைப்பிட்டு 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் ஆகஸ்ட் 11ம் திகதி இதழில் இலங்கைத் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குச் சாதகமாகத் தீட்டப் பட்ட ஆசிரியத்தலையங்கத்தை மறுபிரசுரம் செய் திருந்தார்.

★ 'ஹோம்லண்ட்- 28,மே,1961 இதழில் "அவசரகால நிலைப் பிரகடனம் அவசியமற்றது. இராணுவத்தினரின் அட்டூழியத்திற்கு கண்டனம்" எனத் தலைப்பிட்டு இலங்கைச் சனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட் சபை யிலும் திருவாளர்கள் சிவசிதம்பரமும், மூதவை உறுப் பினர் நடேசனும் ஆற்றிய உரைகளை மறுபிரசுரம் செய் திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஹோம்லண்ட் - 4, ஜுன் 1961 இதழில் 'பிரச்சினை யின் பிடியில் இலங்கை' எனத் தலைப்பிட்டு அமெரிக் காவிலிருந்து சுரேந்திரநாத் என்பவர் இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி எழுதியதோர் ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டிருந்தார்.

★ இலங்கைத் தமிழர்களின் போராட்டச் சேதிகளை 'திராவிடநாடு' தவறாது தமிழ்நாட்டுக்கு அறியத் தந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை அண்ணா எவ்வாறு கண்காணித்தார், அவற்றையிட்டு எவ்வளவுதூரம் கண் கலங்கினார் என்பது நோக்கற்பாலது. அத்தோடு, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை நன்கறிந்தோர், அவை அகிலத்தின் கண்களை ஈர்க்கத்தக்கனவாக ஆங்கிலத் தில் வெளிவருவதன் அவசியத்தை உணர்வர். இத்துறை யில் அண்ணா ஆற்றிய பணி இன்றியமையாதது.

அண்ணாவின் வாழ்வில் உடைப்பெடுக்காத ஓர் உணர்ச்சிப் பெருக்கு அன்னாரின் மறைவிலே உடைப் பெடுத்து வரம்புகளை மேவிப் பாய்ந்திருக்கிறது, ஈழத் தமி ழகத்திலே. அந்த உணர்ச்சிப்பெருக்கின் ஊற்றுக்கள் இன்னும் அடைபடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும் ... ... "

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# முதலமைச்சர் அண்ணு

**1967-ம்** ஆண்டுத் தேர்தலில் தி.மு.க. வெற்றியீட்டியதைத் தொடர்ந்து மக்களின் உற்சாகப் பெரும்பேரலைகள் எழுப்பிய வாழ்த்தொலி சுற்றி வளைத்துக்கொள்ள, இந்தியாவின் எந்த மாநிலத்திலும் எந்தவொரு முதலமைச்சருக்கும் கிடைக்காதவாறு மக்கள் ஆதரவும் தோழமைக் கட்சிகளின் நல்லெண்ணமும் உறுதுணைநிற்க, அண்ணு முதலமைச்சராக அரசுக்கட்டில் ஏறினுர். அண்ணு தம் ஆட்சிக் காலம்வரையில் இந்த மக்கள் ஆதரவும் மற்றையோர் நல்லெண்ணமும் அருகாவண்ணம் பேணினுர் என்பதுமட்டுமல்ல அவற்றைப் பெருக்கிக்கொண்டார் என்பதும் அண்ணுரின் பெருமைக்கும் திறமைக்கும் ஒரு முத்திரையாகும். அண்ணு இதனைச் சாதிப்பதற்கு ஏதுவாக இருந்த அடிப்படை வலிமை அவரது தன்னடக்கமாகும். எத்துணைக் கெத்துணை அவர் பெருமைபெற்றுரோ, அத்தனைக்கத்தனை அண்ணுர் எளிமை பெற்றுர். தி. மு. க. ஆட்சியமைந்ததும் வாழ்த்துவதற்கென சென்னை நகரின் மரீனு கடற்கரையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டுநின்ற லட்சோபலட்சம் மக்கள் முன்னிலையில் பேசிய அண்ணு, தமிழ்நாட்டின் தலைமை கிடைத்த பூரிப்பில், தன் நிலைமை மறந்து தலைகால் தெரியாது பேசினுரில்லை. 'சாமானியஞன என்மீது இத்துணை நம்பிக்கை வைத்து என்னிடம் இந்தப் பாரிய பொறுப்பைத் தந்துள்ளீர்களே, உங்கள் நம்பிக்கைக்கு நான் தகுதியுடையவன் தானு?'' என்றல்லவா மக்கள் வெள்ளத்தைப் பார்த்துத் தன்னடக்கத்துடன் கேட்டார். இந்தக் கேள்வியின் உணர்விலேயே அண்ணுவின் ஆட்சியின் வெற்றிக்கான உட்கரு அடங்கியிருந்தது. தனது ஆற்றலின் எல்லைகளை அறிந்திருந்தார் அவர்.

## நிதானமே நிலைக்களன் . . . .

அண்ணுவின் ஆட்சியின் அழுத்தமான ஓர் அம்சம், நிதானமாகும். உணர்ச்சிப் பெருக்கும் புரட்சிப் போக்கும் நிறைந்த சூழ்நிலையில் ஆட்சிக்குவந்த அண்ணு, அரசமைப்பு உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட, உண்மை நிலைகளுக்குட்பட்ட கைங்கரியம் என்பதைத் தமது ஆதரவாளர்களுக்கும் தம்பியருக்கும் அவர்களுக்கே புரியக்கூடிய மொழியில் கூறிவைத்தார்.

''......புதிய மரபுகளைப் புதிய ஆட்சியால் ஏற்படுத்துவோம் என்றுதான் நம்பி வந்தோம். ஆனுல் இன்றிருக்கும் நிலையில் செட்டாகக் குடும்பத்தை நடத்தி நல்ல பெயர் எடுக்க நினைக்கும் குடும்பத்துப் பெண் போன்ற நிலையில் இருக்கிருேம் '' என்று மயக்கமெதுவுமற்ற நிலையில் தெளிவாகக் கூறிவைத்தார். ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே இராஜாஜியின் ஆசியைப் பெற்றுக்கொண்ட அண்ணு, காங்கிரஸ் தலைவர்கள் உட்பட தமிழ்நாட்டின் ஏனைய முதுபெரும் தலைவர்களுடைய ஆசியைப் பெற்றுக் கொள்ள விழைந்தமை அந்நிதானப்போக்கை நிச்சயப்படுத்துவதாகும். தம் ஆட்சிக்காலம் முழுவதும் அண்ணு இந்நிதானத்தை வெவ்வேறு உருவில் கடைப்பிடித்த காட்சிகள் பல. அவற்றுட் சிலவற்றை நோக்கின் ... ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துக்காட்டுகள்

- கட்சிப்பற்றற்றவராக நடுநிலையில் நிற்கவேண்டிய மாநில ஆளுநர் (கவர்னர்) சர்தார் உஜ்ஜயில் சிங் காங்கிரஸ் கட்சியே மீண்டும் பதவிக்கு வரும் என்ற நினைப்பில் தேர்தல் காலத்தில் தி.மு.க. வுக்கு எதிராக சில குறிப்புகளைக் கூறினார். பொதுத் தேர்தல் சமயத்தில் தி.மு.க. வினர் இதற்கு எதிர்ப்புக்குரல் எழுப்பினராயினும், ஆட்சிக்கு வந்த பின்னர் — இந்நிகழ்ச்சியை வைத்து அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்க முடியுமாயினும் — அண்ணா பெருந்தன்மையுடன் ஆளுநரே நாணத்தக்க முறையில் இவ்விடயத்தை மறந்து செயலாற்றினார். இதனால் மனம்நெகிழ்ந்த ஆளுநர் அண்ணாவின்பால் அளப்பரிய அன்பையும் மதிப்பையும் வளர்த்துக்கொண்டார். அண்ணா பிரிந்த போது தம் 'அரும் சகோதரன்' பிரிந்ததாகவல்லவா ஆளுநர் துயருற்றார்.

- தி.மு.க. வுடன் கூட்டணியமைத்திருந்த தோழமைக் கட்சிகளில் தீவிர வலதுசாரியான சுதந்திராக் கட்சியினரும் தீவிர இடதுசாரியான இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் அண்ணாவைத் தத்தம் பக்கம் இழுக்க முற்பட்டனர். அண்ணா இருதுருவங்களையும் தவிர்த்து நிதானமான ஒரு நடுவழியே நடந்தார். போக்குவரத்து பஸ் வண்டிகளை அரசுடமையாக்குவதை சுதந்திராக்கட்சி விரும்பவில்லை. இருந்தும் அண்ணா அவற்றை அரசுடமையாக்கினார். ஆக்கிடும்போதும் இடதுசாரியினர் விரும்பியதுபோல் ஒரே நாளில் அனைத்தையும் அரசுடமையாக்கவில்லை. தாம் விரும்பியவாறு, படிப்படியாகவே ஆக்கினார். மதுவிலக்குக் கொள்கையைக் கைவிடும்படி இடதுசாரியினர் கோரினர். அண்ணா பிடிவாதத்துடன் மறுத்து நின்றார். இதனால் தமது நிதானப் போக்கையும், எல்லோர்க்கும் இனியராயினும் தாம் எடுப்பார் கைப்பிள்ளையல்ல என்பதையும், சொந்த புத்தியில் இயங்குபவர் என்பதையும் நிலைநிறுத்தினர். "நீங்கள் இடதுசாரியினரா வலதுசாரியினரா?" எனச் செய்தி நிருபர்கள் வினவியபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இடதுசாரியோ வலதுசாரியோ அல்ல; ஆனால் நான் சரியானதைச் செய்ய விரும்புகிறேன்" என்றார். ("I am neither a rightist nor a leftist; but I like to do the right thing.")

- தமிழ் மாநிலத்தின் உரிமைகளை மைய அரசிடம் மிகவும் கண்டிப்புடன் தட்டிக் கேட்டுக்கொண்டே, மாநில அரசு - மைய அரசு இவற்றுக்கிடையே நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொண்டார். இதனால், மைய அரசின் தலைவர்கள் அண்ணாவின்பால் அச்சத்தோடு கூடிய ஒரு மதிப்பையும் தனிப்பட்ட அன்பையும் வளர்த்துக் கொண்டனர். அண்ணாவின் மறைவின்போது பிரதமர் இந்திரா காந்தி உட்பட, ஏனைய மைய அரசின் தலைவர்கள் விடுத்த செய்திகள் இந்த உணர்வுகளின் பிரதிபலிப்புகளே.

- தமிழ்நாட்டு மாணவர்கள் தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கை எழுப்பி தி. மு. க. அரசுக்குத் தர்மசங்கடமான நிலையை உண்டாக்கியபோது, அண்ணா அவர்களை நேரடியாகச் சென்றுகண்டு, அவர்களது கோரிக்கையைக் கைவிடுமாறு செய்தார்.

- தொழிலாளர்கள் விவசாயிகளது உரிமைகளைப் புறக்கணிக்காமலும், உணர்ச்சிகளைப் புண்படுத்தாமலுமே, தொழிலாளர்—முதலாளிகள், விவசாயிகள்— நிலக்கிழார் இவர்களிடையே இணக்கமான நல்லுறவை ஏற்படுத்த முயன்றார்.

## தகுதியாற் சிறந்தும்.....

அண்ணாவுக்கு சட்டமன்றத்தினுள்ளே ஓர் முதலமைச்சருக்கு வேண்டிய வலிமையும் பண்புகளும் நிறைந்திருந்தன. சட்டமன்றத்திற்குப் புறத்தே இருப்பதைக் காட்டிலும், மன்றத்தினுள்ளே ஒரு முதலமைச்சரின் ஆணை அவர் தலைமைதாங்கும் கட்சியினரை வலிவுடன் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். அண்ணாவின் ஆணையோ மன்றத்தினுள்ளேயும் புறத்தேயும் தம்பியருக்கு ஆண்டவன் கட்டளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவன்றே அமைந்தது. எதிர்க்கட்சியினரின் கொள்ளத் தக்க கருத்துக்களைக் கொண்டு, அவர்களை மதித்து அணைத்துச் செல்லும் அத்தியாவசியப் பண்பு அண்ணாவினிடம் பரந்து கிடந்தது. சிரித்த முகத்துடன் எதிர்க்கட்சியினரை எதிர்கொண்டவர் அவர். அத்தோடு எதிர்க்கட்சியின் விவாதங்களுக்கு விடையிறுத்து, முடக்கு வாதங்களை மடக்கி, குறுக்குப் பேச்சுக்களை நறுக்கிப் பேசும் அறிவுக் கூர்மையுடன் அமைந்த நாவன்மை அண்ணாவின் தனியுடைமையாக இருந்தது. உதாரணமாக "உங்களுடைய (ஆட்சியின்) நாட்கள் எண்ணப்பட்டுள்ளன, ("Your days are numbered") என்ற எதிர்க்கட்சியினரின் குறுக்குப் பேச்சை, "எனது காலடிகளை அளந்தே எடுத்து வைக்கிறேன்" ("My steps are measured") எனக் கூறி நறுக்கிய கூர்மையர் அண்ணா

## பணியினாற் பொலிந்தும்.....

அண்ணா தன் ஆட்சிக்காலத்தின்போது சமூக பொருளியல் துறைகளில் நிறைவேற்றிய 'சோசலிசத் திட்டங்கள்' வேறோரிடத்தில் கூறப்பட்டுள்ளன. இத்திட்டங்களனைத்தும் ஏழை எளியோர்கள் ஏற்றம் பெற்றிட வகுக்கப்பட்டனவே. ''ஏழை மக்கள் எங்களிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள். நாங்கள் உருப்படியாகப் பல செய்தேயாகவேண்டும்'' என்றோர் கடமைத்துடிப்பை அடிக்கடி தம் துணையமைச்சர்களான, சட்டமன்ற உறுப்பினர்களான, தம்பிமாரிடம் நினைவூட்டிவந்தவர் அண்ணா. ஏழ்மையிலே பிறந்து ஏழ்மையிலே வளர்ந்து ஏழ்மைத் துடிப்புகளை எடைபோட்டுவைத்திருந்த அண்ணா 'ஏழைகளுக்காக என்ன செய்யலாம்?' என்றோர் வேட்கையை வளர்த்து வந்ததுடன், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதலாக அல்லும் பகலும் சிந்தித்து வந்தார். ஊருறங்கும் வேளையிலும் உடலுறங்காது, விடியற்காலம் இரண்டுமணிவரை நாளாந்தம் விழித்திருந்து அவர் பணியாற்றியமை இந்த வேட்கையினாலேயாம். கர்மவீரன் என்பார்களே; அண்ணாதான் அந்தச் சொல்லுக்கு விளக்கமா? ஏழைகளின் உணர்வோடு தமக்குள்ள ஒருமைப்பாட்டைப் புலப்படுத்த, தமது சம்பளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், ஏனைய அமைச்சர்கள், மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளத்தையும், எந்த மாநிலத்திலும் இல்லாததுபோல் குறைத்தே பெற ஏற்பாடு செய்தார் அண்ணா.

மதுவிலக்குக் கொள்கையின் தார்மீக தர்ம நியாயங்களை ஆராயுமுன்னர், அது ஏழை எளியோரின் ஏற்றத்திற்கு அவசியம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். மது பாமரரான ஏழைகளின் வாழ்வைச் சூறையிட்டு விடும் என்ற எண்ணமே அண்ணாவைக் காந்தியடிகளின் மதுவிலக்குக் கொள்கையை உறுதியுடன் கடைப்பிடிக்கத் தூண்டிற்று. தமிழ்நாட்டில் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியிருந்தால், தி. மு. க. அரசுக்கு மதுவரியாக கோடிக்கணக்கான பணம் கிடைத்திருக்கும் என்பதையும் காந்தியடிகளின் வாரிசுக்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்வோரான காங்கிரசார் ஆட்சி நடாத்தும் மாநிலங்கள் பல இதனுல் மதுவிலக்கைக் கைவிட்டு, தம் ஆட்சி வலிவுபெற ஏதுவாக வருமானத்தைப் பெருக்கிக் கொண்டன என்பதையும், அவற்றுள் சில தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் என்பதையும், கூட்டாக எடுத்துக் கணிக்கும் போது அண்ணுவின் கொள்கையுறுதி பாராட்டத்தக்கதாகும்.

## தென்னுட்டுக் காந்தி

அண்ணுவின் உறுதியான மதுவிலக்குக் கொள்கை, எளிமை, வன்முறையற்றபோராட்டங்கள், ஏழை எளியோர் பாலும், தாழ்த்தப்பட்டோர்பாலும் பெருங்கருணை, இலட்சோபலட்சம் ஆதித்திராவிடர்களின் (ஹரிஜனர்கள்) உள்ளத்திலே கொலுவீற்றிருந்த மாட்சி, ஏழைக்குத் தொண்டு செய்வதில்தான் இறைவன் தொண்டு அடக்கம் என்ற நம்பிக்கை, இன்னேரன்ன பண்புக்களால் ஈர்க்கப்பட்ட கழக வட்டாரங்கள் அண்ணுவைத் தென்னுட்டின் காந்தி என அழைத்தனர். இந்த உவமை மாற்றுக் கட்சி வட்டாரங்களில் 'காந்தியடிகள் எங்கே அண்ணு எங்கே; அண்ணுவை மகான் காந்தியுடன் ஒப்பிடுவதா?' எனக் கிண்டல் செய்யப்பட்டதுண்டு. அண்ணுவை தென்னுட்டின் காந்தியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தார்களே தவிர, அண்ணல் காந்தியடிகளை இந்தியாவின் அண்ணா எனக் குறிப்பிட்டார்களில்லையாகையினால், இத்தகைய உவமைகளால் இருவரையும் ஒரே தரத்தினராக்கக் கருதினர் எனக் கூறுவது பொருத்தமற்றதாகும். அண்ணலின் தன்மைகளை அண்ணா பிரதிபலித்தார் என்பதே கருத்தாகும். உவமானப் பொருள் அண்ணலும் உவமேயப் பொருள் அண்ணாவும் என்பதை உணர்ந்தோர், அண்ணாவைத் தென்னாட்டின் காந்தி என அழைத்தமை சாலப் பொருத்தமே என ஏற்பர்.

## தமிழ்ப்பணி

தமிழ்ப்பணி செய்தற்பொருட்டு தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வனும், தமிழ்மக்களின் தவப்பயனுமாகிய அண்ணா, தன் ஆட்சி அமைத்திட்ட வினாடிமுதல் மருத்துவமனை நுழையும்வரை தேர்ந்து தேர்ந்து ஆற்றிய தமிழ்ப் பணியை எழுதப்புகின் அது தனியொரு காப்பியமாகும். சுருங்கக் கூறுவதாயின், இந்தத் தலைமுறையில் எவனொருவன் இங்ஙனம் பணிசெய்தான் எனக்கேட்கலாம். ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழியாக வேண்டும் எனக் கோரிய அதே உறுதியுடன் தமிழ்நாட்டில் அரசின் பணியனைத்தும் தமிழ்மயமாக்கிய தகவுதொட்டு உலகனைத்தும் புகழ்பரக்க உலகத் தமிழாராயச்சி மாநாடு நடாத்திய மகிமைவரை அண்ணா எத்தனை அற்புதங்களைப் படைத்தனர்! எதிர் காலத் தமிழ்த் தலைமுறைகளுக்கு உயிர்ப்புள்ள எப்பெரும் தமிழ்ச் செல்வம் சேமித்து வைத்தனர்! தமிழர்தம் வாழ்வுக்கு அன்று மூவேந்தர் சேர்த்திட்ட நலன் அனைத்தும் இன்று முதலமைச்சர் அண்ணாவன்றோ சேர்த்தனர்! தமிழ் மக்களின் உணர்ச்சிப்பசி தீர்த்து, எழுச்சிக்குப் பலம் தந்த பஞ்சாமிர்தப் படையலில் சில பதார்த்தங்களை மட்டும் சுவை பார்ப்போமா?

## "தமிழ்நாடு"

1. சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயர் சூட்டிய பேராண்மை — ஆம், பேராண்மைதான் — தமிழர்தம் பெருவரலாற்றுப் பேரேடுகளில் எழுதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலையாத பெருமை மிக்கதல்லவா? என்று தணியும் இந்தத் தாகம் எனத் 'தமிழ் நாடு' எனப் பெயர்மாற்றம் காண ஏங்கிக்கிடந்த தமிழர்கள் இதற்கென மேற்கொண்ட போராட்டங்கள் கொஞ்சமா? காங்கிரசாரின் ஆட்சிக்காலத்திலே பழுத்த பழம் பெரும் காங்கிரஸ்வாதியான சங்கரலிங்கம் அவர்களே 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டுமாறு உண்ணுநோன்பிருந்து உயிர் நீத்தார். காங்கிரசாரின் முரட்டுப் பிடிவாதம் தளரவில்லை. அன்று சங்கரலிங்கனுருக்காக வழக்குரைத்த அண்ணு, 'தமிழ் நாடு' பெயர்மாற்றம் கோரி ஆயிரம் மேடைகளில் முழங்கியும் எண்ணற்ற தலையங்கங்களில் கருத்துக்கள் வழங்கியும் வாதிட்டு வந்தார். தமக்கு அரசுரிமை கிடைத்த முதல் வாய்ப்பிலேயே தமிழ்நாடு பெயர்மாற்றத்தை நிறைவேற்றி விட்டுத்தான் விழிகளை மூடிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றத்திஞல் ஒரு மனதாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட பெயர்மாற்றக் கோரிக்கைக்கான தீர்மானம், அண்ணுவின் மறைவுக்குச் சின்னுட்களுக்கு முன்னர், அவர் மீண்டும் நோயின் வாய்ப்பட்டிருந்த நேரத்தில்தான், புதுடில்லி நாடாளுமன்றத்திலும் நிறைவேறி சட்ட அந்தஸ்துப் பெற்றது. இதனையொட்டிய மகிழ்ச்சிப் பெருவிழாவில் அண்ணுவைக் கலந்துகொள்ளவொட்டாது மருத்துவர்கள் தடுத்தபோது, அண்ணு கூறிய வார்த்தைகள் அன்ஞரின் உள்ளத்தில் எழுச்சிகொண்ட தமிழ்க்காமம் பற்றிக் கூறுவன. "தமிழ்த்தாய் ஏற்றம் பெறும் இந்த விழாவில் தமிழனுகிய என்ஞல் கலந்துகொள்ள முடியவில்லையென்ருல் இந்த உடலிருந்தே பயனில்லையென்று, என்னுடலுக்கு ஊறு நேருமென்று தடுத்த டாக்டர்களிடமும் நண்பர்களிடமும் கூறிவிட்டு வந்துவிட்டேன்'' என்ருர். இந்தத் திருவிழா நடந்து ஏறக்குறைய ஒரு மாதத்திற்குள் அண்ணு மறைந்து விட்டார். இப் பெரும்பணிக்காகத்தான் அண்ணு பிறப்பெடுத்தாரா என்றே கேட்கத் தோன்றும். இப்பணி ஒரு தனி அவதாரம் சாதித்திருக்கவேண்டிய பெரும் பணிதான் என்பதில் ஐயமேது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை மாநிலத்தை ஆண்ட காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் தமது புதுடில்லி மைய அரசின் காங்கிரஸ் தலைவர்களைக்கொண்டு வேலையோடு சாதிக்கமுடியாத பெயர்மாற்றத்தை, தி.மு.க. அரசு தமது மாற்றுக் கட்சியான காங்கிரசாரின் மைய அரசைக்கொண்டு சாதித்ததென்றால், அந்தத் தனித் திறமை அண்ணாவின் அரசியல் தகைமையாகும். அதிலும், ஏனைய கட்சிகளையும் அணைத்து, இக்கோரிக்கையைத் தமிழ்நாட்டின் ஒருமனமான வேண்டுகோளாக சட்டமன்றத்தில் நிறைவேற்றி மைய அரசுக்கு அனுப்பிய வண்ணமும், மைய அரசும் ஒருமனதாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய வண்ணமும், வீண் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அரசியற் சட்ட ரீதியாக இம்மாற்றம் நிகழ்ந்த வண்ணமும், இவ்வெற்றியை முழுமைப்படுத்துவனவாகும்.

2. 'ஆகாஷ்வாணி' என இந்திமொழியில் வழங்கிய தமிழ் நாட்டின் ஒலிபரப்புத்துறையை முன்பு இருந்தது போல் 'வானொலி' என மாற்றம் பெற ஏற்பாடு செய்தார். இம் மாற்றத்திற்கெனத் தமிழ்நாட்டை காங்கிரஸ்கட்சி ஆண்ட நாட்களில் நடந்த கிளர்ச்சிகளையும், முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றோர் போராட்டம் நடத்தி சிறைப்பட்டதையும், இன்னோரன்ன பின்னணிகளையும் அறிந்தோர், இச்சாதனையின் தன்மையினை உணர்வர்.

3. இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டுச் சிறைப்பட்டோரைச் சிறைவீடு செய்ததும், வழக்குத் தொடரப்பட்டோரின்மீதான வழக்குகளைத் திரும்பப்பெற்றதும் அண்ணாவின் ஆட்சியின் துணிவான செயல்களாகும். நிதானப் போக்குள்ள அண்ணா, சட்டமும் ஒழுங்கும் மதிக்கப்படவேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்; தமிழ் நாட்டில் சட்டம் அவமதிக்கப்படுகிறது என்ற அவதூறு தமக்கு நேரலாம் எனத் தெரிந்தும் இவர்களை விடுதலை செய்வித்தாரென்றால், தாம் எந்தக் கொள்கையை முன்வைத்து, எவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெவரின் தியாகத்தின் பயனாக, ஆட்சிக்கு வந்தோம் என்பதை மறவாமையே காரணமாகும். 'தி. மு. க. அரசின் கண்களில் இந்தி எதிர்ப்பாளர்கள் சட்ட விரோதிகளல்லர்' என்ற அண்ணாவின் உறுதியான தொனி ஒரு இலட்சியவாதியின் தொனியாகும்.

## தமிழ் மாநாடு

4. தமிழ் வளர்த்த வேந்தராட்சியின் காட்சியைக் காட்டினாற்போல், அரசின் யந்திரமனைத்தும் தமிழ்ப்பணியிலீடுபடுத்தி, தமிழ்கூறும் நல்லுலகினரை அழைத்து அண்ணா நடாத்திய இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் சிறப்பு சொல்லருந்தகைத்தே. மாநாட்டைத் தமிழகத்தில் நடாத்துவது ஏற்கனவே தீர்மானமானதாயினும், குறித்த காலத்தில் அண்ணாவின் ஆட்சி பதவிக்கு வந்தது தமிழ்த்தாயின் சக்தியாற் போலும்.

## சிறப்புப் பண்புகள்

முதலமைச்சர் அண்ணாவின் தனித்தன்மையான பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

- ஜனநாயகத் தத்துவங்களையிட்டு சிலருக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். எனினும், அண்ணா ஜனநாயகப் பண்பாடுகளின் நிலைக்களனாக இருந்தார். 1962-ம் ஆண்டுத் தேர்தலில் திரு. காமராஜர் விருதுநகர் தொகுதியில் தி. மு. க இளைஞனால் தோற்கடிக்கப்பட்டார். இச்செய்தியையிட்டுத் தமது கருத்தை வினவிய நிருபர்களிடம் அண்ணா, 'திடுக்குற்றேன்' என்றார்.

- மிகவும் இளகியமனம் படைத்தவரான அண்ணா, பழைய விசுவாசம், நட்பு, அன்பு இவற்றை மீற முடியாதவராக இருந்தார். 'பெரியாருக்கு மட்டுமே உரிய இடம்' எனத் தி. மு. க. வின் 'தலைவர்' என்ற பதவியை என்றும் காலியாகவே வைத்திருந்த அண்ணா, தி. மு. க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967-ம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்றதும், தேர்தல் காலத்தில் தம்மை எதிர்த்துநின்றவர் என்பதையும் பாராட்டாது, தம்பியருடன் சென்று பெரியாரின் ஆசியை வேண்டிநின்ருர். தம் அரசியல் வாழ்வில் தலையாய முன்னேற்றம் கண்டபோது, தம்மை ஒருகாலத்தில் ஆளாக்கி, இவ்வெற்றிப்பாதையில் செல்ல வழிகோலிய அரசியற்குருவை நன்றியுடன் நினைத்துக் கொண்ட அண்ணுவின் உள்ளம், தம் வெற்றி கண்டுதந்தை பெரியார் மகிழ்வாரேதவிர மனக்கொதிப்படையார் என எண்ணிய உள்ளம், பரந்த, மாசிமறுவற்ற உள்ளம். இப்பெருமுள்ளம்கண்டு பெரியாரே நாணமுற்ருர்.

● விட்டுக்கொடுக்கும் தளர்ந்த மனத்தினரான அண்ணு மொழிப்பிரச்சினையில் மிகுந்த உறுதியைக் கைக்கொண்டார். மைய அரசின் மும்மொழித் திட்டத்திற்கு (இந்தி, ஆங்கிலம், மாநில மொழி) எதிராக அண்ணு இருமொழித் திட்டத்தை (தமிழ், ஆங்கிலம்) செயற்படுத்திய உறுதி நோக்கற்பாலது.

● அண்ணுவின் எளிமையும், இனிய பண்பும், ஆடம்பரமோ ஆர்ப்பாட்டமோ அற்ற தன்மையும் நாடறிந்தவை. இவை எவரும் அண்ணுரை எளிதில் அணுக ஏதுவாயிருந்தன. முதலமைச்சரான பின்னரும் தமது போக்கை மாற்றிக்கொண்டாரில்லை. புகைவண்டி நிலையத்தில் நின்று தம்சட்டையை மாற்றி அணிந்துகொண்ட ஒரே முதலமைச்சர் அண்ணுவே.

● முதலமைச்சரானபின் அண்ணுவின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் ஒன்றே — அதுவும் நண்பர்களால் திணிக்கப்பட்டது. வெற்றிலைக்காவிபடிந்த பற்களும், கலைந்த தலையும், 'ஷேவ்' செய்யாத முகமும், கசங்கிய உடைகளுமாக காட்சி தந்த அண்ணு, தலைவாரிக் கொள்ளவும், ஒழுங்காக உடையணியவும் தினமும் சவரம் செய்துகொள்ளவும் பயிற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டுள்ளம்

தொண்டுள்ளத்தின் தூய்மையாலும், பொதுமக்களுக்கு நல்வாழ்வு தரவேண்டும் என்ற பான்மையாலும், தன்னையொறுத்துப் பணியாற்றி, உணவையும், உறக்கத்தையும் ஓய்வையும் ஒழித்து தம் உடல்நலத்துக்கு ஊறு தேடிக்கொண்டவர் அண்ணா. அமெரிக்காவிலிருந்து சிகிச்சைபெற்று வந்தபின்னரும் கூடவிடியற்காலை இரண்டு மணிவரை பணியாற்றும் தன் வழக்கத்தை மாற்றினாரில்லை. இந்த ஆர்வம் அண்ணாரின் உயிரையே அரித்துண்டது.

அண்ணா முதலமைச்சராகப் பணியாற்றிய காலமோ மிகவும் குறுகியது — இரண்டே இரண்டு ஆண்டுகள். அதிலும் நோய்வாய்ப்பட்டு உள்ளூரிலும், அமெரிக்காவிலும் மருத்துவமனையில் கழித்த நாட்கள் போக எஞ்சியது ஏறக்குறைய ஓராண்டே. இந்த ஓராண்டிலும் தமிழ்மக்கள் மனத்திலே அண்ணார் விதைத்திட்ட இனிய நினைவுகளும் விளைத்திட்ட இன்பக் கனவுகளும் ஓராயிரத்திற்கு மேல். அண்ணாரின் மறைவின்போது அண்ணார்பால் ஈர்க்கப்பட்டிருந்த நெஞ்சங்கள் எத்தனை கோடியோ?

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு''

என்பதல்லவோ குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
.......................................................................
................................ யாம் எந்தையும் இலமே"

— பாரி மகளிர் (புறநானூறு)

# அமரர் அண்ணு

தமிழ்கூறும் நல்லுலகெங்கும் ஒளிக்கதிர் பரப்பிய எழு ஞாயிறு திடீரென மேலேக்கடலில் மூழ்கி விட்டான். இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 2 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கழிந்து 22 நிமிடங்களின் மேல் அண்ணுவின் விழிகள் நிரந்தரமாகவே மூடி நீள் துயிலில் ஆழ்ந்துவிட்டன. கொடுத்து வைக்காத தமிழினத்தைக் கூவியழவிட்டு நின்றதுபோல் நின்ற தலேவன் நெடும்பயணம் போய்விட்டான். தமிழ்த் தாயின் தலேமகன் அண்ணுவின் பிரிவு என்ற பேரிடியால் தாக்குண்ட தமிழ்கூறும் உலகின் இதயத்திலிருந்து இன்னும் இரத்தம் கசிந்துகொண்டே இருக்கிறது.

## கேள்விக் குறிகள்.

இந்திய அரசியல் அரங்கைப் பொறுத்தவரை அண்ணுவின் மறைவு பல கேள்விக்குறிகளேத் தூக்கி நிறுத்திவிட்டது. அண்ணுவின் மறைவு இந்திய துணேக்கண்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மட்டத்தில் எட்டுத்திக்குகளிலும் எதிரொலித்ததென்றால், அவ்வெதிரொலி அண்ணுவின் செல்வாக்கான கைப்பிடிக்குள் அன்னுர் கட்டுப்படுத்திவைத்திருந்த சக்திகள், அகில இந்திய அரசியலிலே அண்ணு கொள்ள இருந்த பங்கு, அதன் பரப்பு, இவற்றின் தன்மைகளைக் கூருமல் கூறிற்று. உலர்ந்துவரும் காங்கிரஸ்கட்சி, உறுதியற்ற ஒருமைப்பாட்டு உணர்வு, அதனை உறுதிசெய்யும் ஒரேவழியான மைய அரசில் வேண்டிய தென்னுட்டின் தலைமை, அத்தலைமைக்கான பிரதிநிதித்துவப் பெருமையுடைய பகைமையுமற்ற தகைமை, அடுத்த பொதுத்தேர்தலில் மைய அரசில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி அமைவதற்கான நிலைமை- இத்தகைய பின்னணியில் அண்ணுவின் வாழ்வு இந்தியாவின் வரலாற்று ஓட்டத்தையே மாற்றி அமைத்திருக்கலாம். அண்ணுவின் பிரிவையொட்டி இந்தியாவின் முதுபெரும் ஞானியும், அண்ணுவின் மதிப்புக்கும் அன்புக்கும் உரியருமான இராஜாஜி தெரிவித்த அனுதாபச் செய்தியின் இறுதிவரிகள் பொருள் பொதிந்தவையாகும்.

''..... நான் எவ்வளவுதூரம் மனம் நொந்துபோயிருக்கிறேன் என்பதை அனைவரும் அறிவர். ஏன் மனம் நொந்திருக்கிறேன் என்பதையும் அறிவர்'' என்ருர். உண்மைதான், அண்ணுவின் ஆட்சி தமிழ்நாட்டில் அமையவேண்டுமென்ற ஆருடத்தை வெற்றிகரமாகக் கணித்த இராஜாஜி இன்னும் என்னென்ன திட்டத்தைத் தீட்டியிருந்தனரோ.

## உறைந்த துயரம்

அண்ணுவின் பிரிவிலே தமிழ்நாடு உற்ற துயரையும் இராஜாஜியின் தேர்ந்த வார்த்தைகளிலேதான் இரத்தினச் சுருக்கமாகக் கூறமுடிகிறது. இரங்கல் கூட்டத்தில் இராஜாஜி பின்வருமாறு கூறினர்:- ' ..... இளைஞர்களாகிய உங்களது மனவேதனையை அழுது கண்ணீருடன் கரைத்துவிடுகிறீர்கள். நான் கிழவன்; என்ருல் அழமுடியாது. என் துயரம் அத்தனையும் உள்ளத்தில் உறைந்து போயிருக்கிறது'' என்ருர். தமிழ்நாட்டின் துயரமும், ஏன், தமிழ்கூறும் நல்லுலகின் துயரமும் உறைந்துபோயிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையிலே பிறந்து எளிமையிலே வாழ்ந்து எளியவர்களாலேயே தமிழ்நாட்டின் தலைமைப்பதவிக்கு உயர்த்தப்பட்ட அண்ணா, முதலமைச்சராக மறைந்தபோது, இராணுவ, பொலீஸ் அணிவகுப்புகளுடன் மரியாதைப் பீரங்கிகள் முழங்க, இராசோபசாரங்களுடன் அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இலட்சியக் கனவுகள் கண்ட அண்ணாவின் ஆன்மா இவற்றையெல்லாம் தமது பணிக்குக் கிடைத்த பாராட்டுகளாக எண்ணிப் பூரித்திருக்கமுடியாது. அன்னாரின் நிலையான சுற்றத்தினரும் சொந்தக்காரருமாகிய தெருவோரத்து மனிதர்கள் வழங்கிய பாராட்டுரையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி நிருபர். 'அவரே கடவுள்' என மகுடமிடப்பட்ட அச்செய்தியைச் சிறிது பார்ப்போமா?

## 'அவரே கடவுள்'

"கண்ணீர் இறந்த ஒருவருக்கு உயிரூட்டுமென்றால் திரு. அண்ணாதுரை இன்றும் உயிருடனிருப்பார். அன்னாரின் பூதவுடலைக் கடைசித்தடவையாக ஒருமுறை பார்த்து விடக்காத்திருந்த இனந்தெரியாத ஆயிரக்கணக்கானோர் அவருக்காக அழுதனர். பொதுமக்கள் பார்வைக்கென அண்ணாவின் உடல் வைக்கப்பட்டிருந்த இராஜாஜி மண்டபத்திலும், அதனைச்சுற்றியிருந்த பரந்த மைதானத்திலும், அதனைச்சுற்றிப் பல மைல் கணக்கில் விரிந்திருந்த வீதிகளிலும் "அண்ணா நீ போய்விட்டாயே" என்ற வேதனைக் குரல் தொடர்ந்து கேட்டது. அவர்களில் கூவி அழுதவர்கள் ஏழையரிலும் ஏழையரே. அவர்களுக்கு அன்னார் ஓர் அண்ணன் — கொஞ்சமாவது அவர்களுக்கு ஆறுதல்தந்த உறவினன். பெண்கள் மட்டுமல்ல, வளர்ந்த ஆண்களும் நாணமின்றி, துன்பத்தை அடக்கமுடியாது கூவி அழுதனர்"

"இராஜாஜி மண்டபத்தை நோக்கி கரைபுரண்டு வந்த லட்சோபலட்சம் மக்களில் ஒரு சிறுபகுதியினரே மண்டபத்தினுள்ளே நுழைந்து பூதவுடலுக்கு இறுதிமரியாதை செலுத்த முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் நகருள் முக்கிய இடத்தில் நிறுவப்பட்டிருந்த அன்னாரின் முழு உருவச் சிலைக்கு மரியாதை செலுத்துவதுடன் திருப்திப்பட வேண்டியிருந்தது. சிலையிருந்த இடத்திலும் முடிவில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசைகள் உண்டாகிவிட்டன... சிலைக்குமுன்பாகவும் பலர் விழுந்து வணங்கி நகர மறுத்ததால் தூக்கிச்செல்ல வேண்டியிருந்தது. பெண்கள் தேற்றமுடியாதவர்களாயினர். பலர் சிலையின் அடித்தளத்தில் தமது தலையை மோதினர்........ பலர் பித்துப்பிடித்தோர் போலாயினர். ஒரு பெண் தரையில் வீழ்ந்து மேலே சிலையை வெறித்துப் பார்த்தவண்ணம் 'நீயே என் தெய்வம்! நீயே என் தெய்வம்! நீ எப்படி என்னை விட்டுவிட்டுப் போனாய்' என்று தொடர்ந்து கூக்குரலிட்டாள். அவள் கணவனும் மகனும் கண்ணீர்மல்கியபடியே அவளைத் தூக்கிச் சென்றனர் ............''

('இந்தியன் எக்ஸ்பிரஸ்' — 5 - 2 - 1969)

ஏழை எளியவர்களின் தலைவன் ஒருவனுக்கு இதைவிட என்ன பாராட்டு வேண்டும். அண்ணாவின் ஆன்மாவுக்கு, தனதுபணியை ஏழை எளியோர் அங்கீகரித்தனர், அதற்கு அடையாளமாகத் தன் பிணத்தின்மீது கண்ணீர் சிந்தினர் என்பதைத்தவிர ஆனந்தம் தருவது ஏது? அண்ணாவின் மறைவுகேட்டு ஏக்கத்தால் உயிர் நீத்தோர், துயரம் தாளாது தற்கொலை செய்துகொண்டோர், விரக்தியினால் உயிரை வெறுத்து அபாயகரமான நிலைக்கு ஆளாகி உயிர் துறந்தோர் என்போர் முப்பதுக்கும் மேற்பட்டோரென்றால், ஒரு தலைவனின் மகிமைக்குச் சான்றென்ன வேண்டும். எந்த நாட்டிலும், எந்த இயக்கத்தின் தலைவனுக்கும் நமது தலைமுறையில் கிடைக்காத நற்சான்றுகளல்லவோ இவைகள்? சரித்திர நாயகர்கள் ஈட்டாத, எடுத்துக் காட்டாத, சான்றுக்களல்லவோ!

## தமிழர்க்கொரு பொற்காலம்

வரலாற்றுப் பேராசிரியர்களே! வருக. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலே தமிழர் வரலாற்றிலே இங்கோர் பொற்காலம். புறநானூற்றுக் காட்சிகளும் பூம்புகார்க் காட்சிகளும், தங்கத் தமிழ் வளர்த்த சங்க காலக் காட்சிகளும் காணீரோ. இத் தமிழ்த்தானைத் தலைவனின் சாகாத சரித்திரம் படைக்கீரோ. காவியப் புலவர்களே! கன்னித் தமிழ் வளர்த்த காவலனின் புகழ் கூறும் காப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள் பாடீரோ. ஓவியப் புலவர்களே! இன்று பிடிசாம்பராய்விட்ட பெம்மான் முடி சார்ந்து மூவேந்தராண்டிருந்த அரசுக் கட்டில் வீற்றிருந்த காட்சி தீட்டீரோ. சிற்பக் கலைஞர்களே வம்மின்! சிந்தனைச் சிற்பி அண்ணாவின் அற்புதக் கோலங்களைச் செதுக்குமின். நாடகமும் நாட்டியமும் ஆடுகின்ற கூட்டங்களே! அண்ணாவின் ஆக்கங்களை ஆட்டத்தில் தோற்றீரோ. இசைவலாளர்களே கேட்டீரோ, தமிழிசை காக்கத் தருக்கிய தலைமகனின் இசைபற்றிப் பாடீரோ. அந்திப் பொழுதினிலே ஆடுகின்ற ஆரணங்கீர்! தென்னன் தமிழ் மகனைத் தெம்மாங்கில் பாடீரோ.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org